## இருக்குமா என்பதல்ல; எப்போது என்பதே

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றார் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (யோ.16:33).இந்த 11 பாடங்களும் நாம் எப்படி தேவனுடைய பலத்தால் போராட்டங்களை எதிர் கொள்ள முடியுமென கற்பிக்கிறது. இதிலுள்ள உதாரணங்கள், வேதபகுதிகள் மற்றும் நடைமுறை ஆலோசனைகள் அனைத்தும் நம் நெருக்கடி களில் வழிகாட்டும் போதக ஆலோசனைகளாகும்.

நெருக்கடியில் கடந்து செல்லும் விசுவாசிகளுக்கு இது உற்சாகம் கொடுக்க இயலும்.தேவனின் மாறாத அன்பையும், கிறிஸ்துவின் மூலம் நமக்குள்ள நம்பிக் கையையும் போதகர் கிருஷ்ணமூர்த்தி ஒவ்வொரு அத்தியாயத்திலும் நினைப்பூட்டியுள்ளார். சகவிசுவாசி களின் இக்கட்டில் எழும் சந்தேகங்களுக்கு ஆலோசனை கொடுக்கும் நிலையிலுள்ளவர்களுக்கும் இது உபயோக மாய் இருக்குமென விரும்புகிறோம். அன்பான கடவுள் கடினமான சூழ்நிலைகளை எப்படி அனுமதிக்கிறார் என்று யோசிக்கும் விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் மூலம் விளையும் நம்பிக்கையை இந்நூல் விவரிக்கிறது.

வாழ்க்கை கடினமானதுதான், கடவுள் அருளும் பலத் தால் பாடுகளை கடந்து செல்லும் திடமுள்ளவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், உற்சாகத்தையும் ந்நூல் கிடைக்க செய்யுமென நம்பு.

ராம் கிருஷ்ணமூர்த்தி இருபது ஆண்டுகளுக்கும் மேலாக கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள விண்ட்சரில் அமைந்துள்ள கிரேஸ் பைபிள் திருச்சபையில் போதகராக இருக்கிறார். அவருக்கு கீதா என்ற மனைவியும்இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். இவரைப் பற்றிய கூடுதல் விவரங்களை tamil.biblebasedhope.com மற்றும் www.gbc-windsor.org என்ற இணையதளங்களில் காணலாம்.

தமிழ் / TAMIL

வாழ்க்கை கடினமாகும்போது

ராம் கிருஷ்ணமூர்த்தி

# வாழ்க்கை கடினமாகும்போது:

## கடவுளின் பெலத்தால் விடாமுயற்சி

ராம் கிருஷ்ணமூர்த்தி

தமிழ் / TAMIL

# வாழ்க்கை கடினமாகும்போது :

## கடவுளின் பெலத்தால் விடாமுயற்சி

**ராம் கிருஷ்ணமூர்த்தி**

# வாழ்க்கை கடினமாகும்போது :
கடவுளின் பெலத்தால் விடாமுயற்சி

எழுதியவர்
ராம் கிருஷ்ணமூர்த்தி

மொழிபெயர்த்தவர்
பாஸ்டர் ஜான் நெல்சன் மற்றும்
பாஸ்டர் மேஷாக் தேவநேசன்

இந்த புத்தகத்திலுள்ள கருத்துக்களை
ஆசிரியரின் அனுமதியின்றி நகலெடுத்து
பயன்படுத்திக்கொள்ளலாம்.

எழுத்தாளரால் வெளியிடப்பட்டது
முதல் பதிப்பு

வேத வசனங்கள் கீழ்காணும்
மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது
**பரிசுத்த வேதாகமம் OV (BSI)**

# அர்ப்பணம்

வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமை யுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமை யுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

யூதா 1 : 24 - 25

# பொருளடக்கம்


அறிமுகம் : பாடுகளைப் பற்றிய புத்தகம் எதற்கு?....1

1. நாம் சோதனையில் இருக்கையில் தேவன் நம் மீது சிந்தைக்கொள்கிறாரா?............................................3
2. நீங்கள் பாடுகளை அனுபவிக்கும்போது ஆச்சரியப்பட வேண்டாம்.............................................13
3. இயேசு சிலுவையில் சந்தித்த 3 உபத்திரவங்கள்...............................................................23
4. நீங்கள் கர்த்தரால் கைவிடப்பட்டதாக உணரும் போதும் அவர் உங்களை நினைவுகூருகிறார்......35
5. சோர்வை தோற்கடித்தல்..............................................45
6. மனநிறைவைப் பற்றிய மூன்று தவறான கருத்துக்கள்...........................................................................57
7. தேவனுக்காக காத்திருத்தல்........................................73
8. துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்..................83
9. கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரியமாய் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 காரணங்கள்....................................................................101
10. அழுகிறவர்களுடனே அழுங்கள்...............................111
11. நம்பிக்கையில் மகிழ்தல்............................................129

# அறிமுகம்

சோதனைகளைச் சந்திக்கும் எவருக்கும் அல்லது சோதனைகளின் வழியாக செல்லும் ஒருவருடன் நடந்த எவருக்கும் ஒரு உபகரணத்தை வழங்கு வதற்காக இந்தப் புத்தகம் பிரசங்கங்களின் தொடர்ச்சி யிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் தொகுக்கப் பட்டது. நீங்கள் மக்களின் வாழ்க்கையோடு ஈடுபாடு கொண்டால், துன்பம் வாழ்க்கையின் ஒரு சாதாரண பகுதியாக இருப்பதால் நீங்கள் பாடுகளோடும் ஈடுபடுவீர்கள்.

நோய், அன்புக்குரியவரின் மரணம், குழந்தைக் கான பதிலளிக்கப்படாத ஜெபங்கள், வேலை இழப்பு, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து பிரித்தல் அல்லது உபத்திரவப்படுதல் மற்றும் இன்னும் பலவற்றை மக்கள் அனுபவிக்கிறார்கள். விசுவாசி களுக்கு கூட, வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே பாடுகள் தொடர்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார்,

1 பேதுரு 4:12-13 “பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகை யாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடு களுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள்.”

## அறிமுகம்

மிகப் பெரிய அருட்பணியாளர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பவுல், தனது துன்பத்தைப் போக்கும்படி கடவுளிடம் ஜெபித்தார், ஆனால் பவுலின் விருப்பத்திற்கு மாறாக வேறு வழியில் செயல்படத் தேர்ந்தெடுத்தார்.

பவுல் இவ்வாறு எழுதுகிறார், 2 கொரிந்தியர் 12:9-10 “அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டு வேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்து வினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.”

நமது தற்போதைய பாடுகள் அனைத்தும், நாம் இன்னும் பரம வீட்டிற்குள் செல்லவில்லை என்பதை நினைவூட்டுகின்றன, மேலும் நமது நித்திய வீட்டின் ஆசீர்வதிக்கப்பட்ட யதார்த்தத்தை நமக்கு சுட்டிக் காட்டுகின்றன. நாம் வாழும். பாடுகளும், பாவமும் நிறைந்த உலகத்திற்காக நாம் புலம்பலாம், ஆனால் மீட்பின் நிகழ்வை மறந்துவிடக் கூடாது, நமது பாவத்தையும் துன்பத்தையும் தம்மீது ஏற்றுக் கொண்டு, நம்மைத் பிதாவுடன் ஒப்புரவாக்கி, சோதனை சகிக்க நமக்கு கிருபையைத் தந்து, ஒரு நாள் அனைத்தையும் புதுப்பிக்கும் ஒருவரின் மீட்பின் செயலை மறந்துவிடக் கூடாது.

இந்தப் புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது, கிறிஸ்துவின் பலத்தினால் பாடுகளைத் தாங்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் சேர்ந்து அவர்களின் பாடுகளில் நடக்கவும் கடவுள் உங்களுக்கு கிருபை யைத்தர வேண்டுமென்று என்று ஜெபியுங்கள்.



## 1. நாம் சோதனையில் இருக்கையில் தேவன் நம் மீது சிந்தைக்கொள்கிறாரா?

“எல்லாவற்றையும் தம் கட்டுப்பாட்டில் வைத் திருக்கும் அன்பின் தேவன், இதுபோன்ற ஒரு விஷயம் எனக்கு நடக்க எப்படி அனுமதிப்பார்?” இப்படியாக குதிரையிலிருந்து விழுந்ததால் கை, காலில் பலத்த காயம் அடைந்த ஒரு இளம் பெண் அவளுடைய போதகரிடம் கேட்டாள். அவர் ஒரு கணம் அமைதிகாத்து, பின்னர், “மருத்துவர்கள் உங்கள் சருமத்தின் மீதிருந்த காயங்களை அழுத்ததைக் கொடுக்கும்போது உங்களுக்கு மிகவும் வேதனையாக இருந்ததா?” என்று கேட்டார் அதற்கு அவள் “வலி பயங்கரமாக இருந்தது,” என்று பதிலளித்தாள்.

“அப்படி அந்த காயங்களை அழுத்த மருத்துவரை உங்கள் தந்தை அனுமதித்தாரா?” என்று அவர் மேலும் கேட்டார். அதற்கு அவள், “ஆம், அது அவசியமானது தான்” என்று பதிலளித்தாள். போதகர் தன்னுடைய கேள்விகளை தொடர்ந்தார், “தந்தை உங்களை நேசித்தப்படியால் தான் அந்த மருத்துவரை காயத்தின் மேல் அழுத்தம் தர அனுமதித்தார் அல்லவா?” என்று கேட்டார். ”தேவன் என்னை நேசிப்பதால், அவர் என்னை காயப்பட அனுமதித்தார் என்று நீங்கள் கூறுகிறீர்களா?” என்று அவள் அதிர்ச்சியாக வினவினாள்.

போதகர் தலையசைத்துக்கொண்டே இவ்வாறு பதிலளித்தார். "'தற்போது நான் கூறிய கருத்து என்னுடையது. ஆனால் தேவனிடமிருந்து வந்த இந்த ஐந்து வார்த்தைகள் உங்களை ஆறுதல்படுத்தட்டும். சோகமான அல்லது விரும்பத்தகாத ஒவ்வொரு சூழ்நிலைக்குப் பின்னும், ஒரு நேர்மறையான மறு பக்கம் உள்ளது. உங்களுக்கு நேரிட்ட இந்த நிகழ்வு ஒரு எதிர்பாராத சோகம் அல்ல. இந்த சோதனையை தேவன் திட்டமிட்டார். நீங்கள் அவருடைய பிள்ளை யாக இருந்தால், அவர் உங்களை சிறந்த சேவைக்கு ஆயத்தப்படுத்துவார்."

ஷேக்ஸ்பியர் இவ்வாறு கூறினார், "நோய் வாய்ப்பட்ட நிலையில்,' நான் என் வலியிலிருந்து தேறி வருகிறேனா என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை ஆனால் நான் சிறப்பான ஒரு வலியை பெற்றிருக்கிறேன்." அதைபோன்றே, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாகிய நாமும், "நான் எப்போது இந்த சோதனையிலிருந்து வெளியேறு வேன்? "என்று சொல்வதை விட. "இந்த சோதனை யின் மூலம் நான் சிறப்பாக தேர்ச்சிப் பெறுகிறேனா?" என்று கேட்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இதில் கவலைப்படக்கூடிய விஷயம் என்ன வென்றால், பல கிறிஸ்தவர்களின் பதில் இப்படியாக இருப்பதில்லை. அவர்களின் கேள்வி என்னவென் றால், "நான் சிக்கலில் இருக்கும்போது தேவன் என் மீது கவனம் செலுத்துகிறாரா அல்லது சிந்தைக் கொள்கிறாரா? என்பதாகும். நாம் சோதனையில் இருக்கையில் தேவன் நம் மீது சிந்தைக் கொள்கிறாரா? இந்த கேள்விக்கு வேதகண்ணோட் டத்தில் பதிலளிக்க, மாற்கு 4:35-41ல் பதிவு செய்யப்பட்டுள்ள, காற்றையும் கடலையும் இயேசு





அமைதிப்படுத்திய அறிமுகமான சம்பவத்தைப் பார்த்து, அதிலிருந்து சில உண்மைகளைக் கற்றுக்கொள்வோம்.

35 அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை
நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள்
என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர்
படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள்.
36 வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது.
அப்பொழுது, பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு
நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.
37 கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை
வைத்து நித்திரையாயிருந்தார். 38 அவர்கள் அவரை
எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது
உமக்குக் கவலையில்லையா என்றார்கள். 39 அவர்
எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரை
யாதே, அமைதலாயிரு என்றார். 40 அப்பொழுது
காற்று நின்றுபோய், மிகுந்த அமைதலுண்டாயிற்று.
அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்
கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்
போயிற்று என்றார். 41 அவர்கள் மிகவும் பயந்து:
இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக்
கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்
கொண்டார்கள்.

கலிலேயாவில் ஒரு பரபரப்பான ஊழியத்தை முடித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு, கலிலேயா கடலைக் கடந்து கெரசனேபகுதிக்குச் செல்லும்படி கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கட்ட ளையிட்டார் [35, 36]. இருப்பினும், அவர்கள் தங்கள் பயணத்தின் போது கடுமையான புயலை எதிர்கொண் டனர் [37].

மிகுந்த பயத்தால் பிடிக்கப்பட்ட சீஷர்கள் நித்திரைக் கொண்டிருந்த இயேசுவிடம், நீர் எங்கள் மீது கவலைக்கொள்ளவில்லையா? என்று கேள்வி எழுப்பினார்கள் [38]. இயேசு எழுந்து, காற்றையும் கடலையும் அமைதிப்படுத்தினார், சீஷர்களின் விசுவாசமின்மையை கண்டித்தார் [39-40]. இயற்கையின் மீதான இயேசுவின் அசாதாரண வல்லமையைக் கண்டதும், சீடர்கள் மிகுந்த அச்சமடைந்தனர் [41].

இந்த சம்பவம் இயற்கை அசாதாரண சக்திகளின் மீது கிறிஸ்துவின் வல்லமையை வெளிப்படுத்துகிறது என்றாலும், ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையில் வரும் சோதனைகளைப் பற்றியும் மற்றும் சோதனைகளின்போது அவர்கள் மீதான தேவனுடைய அக்கறையை பற்றியும் 4 உண்மைகளை இது கற்பிக்கிறது.

**1. கிறிஸ்தவர்களுக்கு சோதனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை [வச. 35-37].**

புயல் வருவதை இயேசு முன் கூட்டியே அறிந்திருந்தாரா? நிச்சயமாக, அவர் அறிந்திருந்தார்! மேலும் அவர் சீஷர்களை அந்த புயலின் மையப்பகுதிக்குள் கடக்கச் செய்தார்! அவர்களுக்கான அன்றைய பயிற்சி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த புயலின் அனுபவம் இருந்தது. கீழ்ப்படியாமையால் மட்டுமே புயல்கள் வருவதாக பலர் நினைக்கிறார்கள், ஆனால் இது எப்போதும் அப்படி இருப்பதில்லை. ஆம், கீழ்ப்படியாமையால் யோனா புயலில் சிக்கினார். ஆனால் இங்கு நாம் பார்க்கும் சீஷர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால் அந்த புயலில் சிக்கினார்கள்! அவர்கள் அனைவரும் இயேசுவைப்





பின்பற்றுவதற்காக தங்கள் வீடுகளையும் வேலைகளையும் விட்டுவிட்டு, பல சோதனை களை எதிர்கொண்டனர். நீதிமானாக இருந்தபோதிலும் சோதனைகளைச் சந்தித்த யோபுவை இது நமக்கு நினைவூட்டுகிறது [யோபு 1:8; 2:3].

கர்த்தருக்குக் கீழ்ப்படிவதும், அவருக்காக சேவை செய்வதும் சோதனைகளிலிருந்து தப்பிக்கும் உத்தரவாதத்தை நமக்கு அளிக்காது. கிறிஸ்தவர்களாகிய நம்மை கர்த்தர் சோதனைகளிலிருந்து எப்போதும் பாதுகாப்பதில்லை, ஆனால், சில சமயங்களில் அவற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில நேரங்களில், அவர் புயலை அமைதிப்படுத்தலாம். மற்ற நேரங்களில், அவர் புயலை வீசசெய்து, தமது பிள்ளைகளை அமைதிப்படுத்தக்கூடும். நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், விளைவுகளைப் பொருட்படுத்தாமல்; “கிறிஸ்து இல்லாமல் கரையில் இருப்பதைவிட, புயலின் நடுவே கிறிஸ்துவுடன் படகில் இருப்பது மிகச் சிறந்தது, பாதுகாப்பானது!”

**2. சோதனைகளின்போது தேவன் நம்முடன் கூட இல்லாதிருப்பதுப்போன்று தோன்றலாம் [38].**

சங்கீதக்காரன், “கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்? ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருக்கிறீர்” [சங்கீதம் 10:1] மற்றும் “ஆண்டவரே, விழித்துக்கொள்ளும்; ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்.” [சங்கீதம் 44:23] என்று கதறுகிறார்.

அதேபோல், சீஷர்களின் சோதனை நேரத்தின் போது இயேசு அலட்சியமாகவும் அக்கறையற்ற வராகவும் இருப்பது போல காணப்பட்டது, “போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலை யில்லையா? என கூறுவதற்கு வழிநடத்தியது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், “தேவனே, நீர் என்னை நேசிப்பது உண்மையானால்,

இந்த சோதனையின் ஊடாக செல்ல என்னை ஏன் அனுமதிக்கிறீர்? நீர் அதை பார்த்துக்கொண்டிருக் கிறீரா?” என்று கேட்க வைக்கிறது. அதற்கான சரியான பதில் இதுதான்: தேவன் எப்போதும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு போதும் நம்மைத் தனியாக விட்டுவிடுவதில்லை, ஆனால் வாழ்க்கையின் இருள் சூழ்ந்த நேரங்களிலும் கூட நாம் அவரை விடாமுயற்சியுடன் விசுவாசிக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஏசாயா 50:10, “உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்ச மில்லாத தினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்” என்று நமக்கு நினைவூட்டு கிறது.

**3. தேவனிடம் கிட்டிச் சேருவதற்கு சோதனைகள் நமக்கு உதவிச் செய்கின்றன [38].**

அற்ப விசுவாசமாக இருந்தபோதிலும், புயலின் அனுபவம் சீஷர்களை கிறிஸ்துவுக்கு நெருக்கமாக ஈர்த்தது. அவர்கள் அவரை நோக்கிப்பார்த்த விதம் தவறாக இருந்தபோதிலும், இந்த புயலின் அனுபவத்தால் அவர்கள் அவரிடம் மேலும் கிட்டிச் சேர்ந்தனர். அவர்களுடைய விண்ணப்பங்களால் அவரை தொந்தரவு செய்ததற்காக கர்த்தர்





அவர்களைக் கடிந்துக்கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் கலக்கத்துடனும் மற்றும் அச்சத்துடனும் இருந்தற்காக கண்டித்தார். ஆம், சோதனைகள் ஒரு நபரை தேவனிடமிருந்து விலகி இருக்கும்படி இருதயத்தை கடினப்படுத்தலாம். இருப்பினும், தேவனுடைய பிள்ளைகளைப் பொறுத்தவரை, சோதனைகள் எப்போதும் அவரிடம் கிட்டிச் சேர வைக்கின்றன. தேவனுடைய வார்த்தையை நேசிப் பதற்கு சோதனைகள் நமக்கு உதவுகின்றன, மேலும் அவருடன் ஜெபத்தில் அதிக நேரம் செலவிட ஊக்கு விக்கின்றன.

**4. சோதனைகள் தேவனுடைய பண்புகளைப் பற்றிய நமது புரிதலை அதிகரிக்கின்றன [39-41].**

இந்த அனுபவத்தின் மூலம், சீஷர்கள் தேவனுடைய அன்பையும், எல்லாவற்றிற்கும் மேலான வல்லமையைப்பற்றியும் அதிகமாக புரிந்துக்கொண்டார்கள். நாமும் கூட, வாழ்க்கையின் சோதனைகள் மூலம் இத்தகைய புரிதலில் வளர முடியும். இந்த விலைமதிப்பற்ற சத்தியங்கள் அனைத்தும் தேவன் எல்லா காலங்களிலும் தம் பிள்ளைகளை கவனித்துக்கொள்கிறார், அவர்கள் மீது சிந்தை கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இப்படி ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கை யிலும் சோதனைகள் மற்றும் சோதனைகளின் சமயத்தில் தேவனுடைய கவனிப்பு பற்றிய 4 சத்தியங்களின் குறிப்புகளை நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். விசுவாச கிறிஸ்தவராக மாறுவது ஒரு பிரச்சனையற்ற வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்காது. ஒரு எழுத்தாளர் இப்படியாக கூறுகிறார்:

“சாத்தான் நாம் அறிந்துக்கொள்ள வேண்டிய முக்கியமான செய்தியிலிருந்து மிகவும் நுட்பமாக நம்மை திசை திருப்பிவிட்டான், தேவனுடைய பிரதான நோக்கமாகிய பாவிகளை கிறிஸ்துவில் நீதிமான்களாக்கி, எதிர்வரும் கோபாக்கினை யிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்ற நற்செய்தியை அறிவிப்பதற்கு பதிலாக, உலக வாழ்க்கையிலன் இடையுறு நம்மை விடுவித்து, அதன் மூலமாக வரும் பிரச்சனைகளுக்கான தீர்விலிருந்து வரும் மகழ்ச்சியை தேடும்படி நம்மை பழக்கப்படுத்தியிருக்கிறான். கிறிஸ்துவில் நம் முடைய எல்லா பிரச்சனைகளுக்கு தீர்வு தருகின்ற ”அற்புதமாக திட்டத்தை” வெளிப்படுத்தி, கிறிஸ்து வில் நம்மை மகிழ்வித்து, இந்த உலக வாழ்க்கையின் இடையூறுகளிலிருந்து நம்மை மீட்பது என்ற ”சுவிசேஷத்திற்கு” நம்மை பக்குவப்படுத்திவிட்டான். கிறிஸ்துவில் இப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தேடுபவர்கள் வழியாக விசுவாசத்திற்கு வருபவர்கள் தங்கள் பெறுகின்ற மகிழ்ச்சியே தேவனுடைய அன்பின் சான்று என்று தவறாக நினைப்பார்கள். சோதனைகள் மத்தியில் அவர்கள் மகிழ்ச்சி அவர்கைளை விட்டு அகலும்போது தேவன் தங்களை கைவிட்டுவிட்டார் என்று நினைத்துக்கொள்வார்கள். ஆனால், தேவனுடைய அன்பின் அடையாளமாக சிலுவையை நோக்குபவர்கள் அவர் மீது வைத்திருக்கும் தங்கள் அர்ப்பணிப்பை ஒருபோதும் சந்தேகிக்க மாட்டார்கள்.”



1. நாம் சோதனையில் இருக்கையில்
தேவன் நம் மீது சிந்தைக்கொள்கிறாரா?

வாழ்க்கையின் புயல் போன்ற சோதனையின் சமயத்திலும் கூட தேவன் நம்முடைய இருதயத்தின் முழு நம்பிக்கைக்கு தகுதியானவர் என்று அவ ருடைய பிள்ளைகள் விசுவாசிக்க வேண்டும். நரகத்தி லிருந்தும் சாத்தானிடமிருந்தும் நம்மை விடுவிப்ப தற்கு கிறிஸ்துவை விசுவாசித்தோமானால், நம் முடைய அன்றாட பிரச்சினைகளுக்கு அவரை விசு வாசிப்பது கடினமாக இருக்க போவதில்லை. விசு வாசம் பயத்தை வெளியே விரட்டுகிறது, பயம் விசுவாசத்தை வெளியே துரத்துகிறது.

நம்முடைய விடாமுயற்சியின்மைக்காக நாம் மனந்திரும்பி, “என் நம்பிக்கையின்மையைக் கடக்க எனக்கு உதவுங்கள்!” என்று நாம் அவரிடம் கூக்குர லிட வேண்டும். “விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்” [மாற்கு 9:24] என்று நாம் கண்ணீரோடு கூப்பிடும்போது, நல்ல ஆண்டவர், அவருடைய பரிசுத்த ஆவியானவரின் மூலம் வாழ்க்கையின் இருள் சூழ்ந்த நேரங்களில் கூட, இந்த பின்வரும் வார்த்தைகளின் உண்மையை அனுபவிக்க நமக்கு உதவுவார், “உம்மை உறுதி யாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மை யே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்” [ஏசாயா 26: 3].

நினைவில் கொள்வோம்: கீழ்ப்படிதலின் காரண மாக வரும் சோதனைகள் எப்போதுமே கிறிஸ்து நம்முள் வாசமாக இருப்பதை உறுதி செய்கின்றன! நம்மில் வாசமாக இருக்கும்போது, புயலைப்பார்த்து நாம், “ஆம், என் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து நான் கஷ்டத்தில் இருக்கும் போதும் என்னைக் கவனித்துக்கொள்கிறார்!” என்று நம்பிக்கை யுடன் சொல்லலாம்.

## 2. நீங்கள் பாடுகளை அனுபவிக்கும்போது ஆச்சரியப்பட வேண்டாம்

1500களின் நடுப்பகுதியில், வேதம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் வேதத்தை ஆங்கிலத்தில் கிடைக்கப் பெற்ற முதல் இடங்களில் ஹாட்லி நகரம் ஒன்றாகும். டாக்டர் ரோலண்ட் டெய்லர் அவர்கள் ஹாட்லி நகரத்தில் தேவனுடைய வார்த்தையை உண்மையாகப் பிரசங்கித்த ஒரு போதகவர். எதிர்பார்த்தபடியே, லண்டனில் உள்ள பிஷப் மற்றும் தலைமை நீதிபதி முன் ஆஜராகும்படி அவருக்கு உத்தரவிடப்பட்டது. அவர் ஒரு மதவெறியர் என்று குற்றம் சாட்டப்பட்டார், மேலும் வேதத்தின் மீதான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளலாம் அல்லது தொழுமரத்தில் உயிருடன் கட்டப்பட்டு எரிக்கப்படலாம். இந்த இரண்டில் ஒரு வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

“நான் சத்தியத்தைப் பிரசங்கிப்பதில் இருந்து விலகமாட்டேன், அவருடைய வார்த்தைக்காக உபத்திரவப்படுவதற்கு தகுதியானவனாக என்னை அழைத்ததற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்” என்று தைரியமாக இவ்வாறு பதிலளித்தார். அவர் உடனடியாக ஹாட்லி நகருக்கு தொழுமரத்தில் உயிருடன் கட்டப்பட்டு எரிக்கப்படுவதற்காக திருப்பி அனுப்பப்பட்டார். வழியில், அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார், பார்க்கும் எவரும் அவர் விருந்

தொன்றிற்கு அல்லது திருமணத்திற்குப் போகிறார் என்று நினைத்திருக்கக் கூடும். அவருடைய பாதுகாவலர்களிடம் அவர் சொன்ன வார்த்தைகள் அவர்களை அடிக்கடி அழவைத்தது, அவர் அவர்களுடைய தீய மற்றும் பொல்லாத வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பும்படி ஊக்கத்துடன் அழைத்தார். அவர் மிகவும் உறுதியானவராக, அச்சமற்றவராக, மகிழ்ச்சியானவராக, மரிப்பதில் விருப்பமுள்ளவராக இருப்பதைக் கண்டு வியந்தனர்.

அவர் எரிக்கப்படும் இடத்தை அடைந்ததும், டாக்டர் டெய்லர் அங்கு கூடியிருந்த தனது சபையினர் அனைவரிடமும் கண்ணீருடன், "தேவனின் பரிசுத்த வார்த்தையையும், அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்களையும் தவிர வேறு எதையும் நான் உங்களுக்குக் கற்பிக்கவில்லை. பரிசுத்த வேதாகமம் ஆசீர்வதிக்கப்பட்ட புத்தகம். என் இரத்தத்தால் அதை முத்திரையிட நான் இன்று இங்கு வந்திருக்கிறேன்" என கூறினார்.

அவர் முழங்காலிட்டு, ஜெபம் செய்து, தொழுமரத்திற்குச் சென்றார். அவர் அந்த நேரத்தில் தொழுமரத்தை முத்தமிட்டு, அதற்கு எதிராக நின்று, கைகளை ஒன்றாகக் குவித்து, கண்களை பரலோகத்தை நோக்கி ஏறெடுத்தார். அவர் தொடர்ந்து ஜெபித்தார். அவர்கள் அவரை சங்கிலிகளால் பிணைத்து, கட்டைகளை அந்த இடத்தில் வைத்தார்கள். அவர்கள் நெருப்பை ஏற்றியபோது, டாக்டர் டெய்லர் தனது இரு கைகளையும் உயர்த்தி, தேவனை நோக்கி, "பரலோகத்தின் நீங்கள் பாடுகளை அனுபவிக்கும் போது ஆச்சரியப்பட வேண்டாம் இரக்கமுள்ள





தந்தையே, என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம், என் ஆத்துமாவை உம் கரங்களில் ஏற்றுக் கொள்ளும்" என்று கூறினார்.

அழுகையோ, அசைவுகளோ இல்லாமல், கைகளை கட்டிக் கொண்டு நெருப்பில் நின்றார். அவர் அந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து உடனே மரிக்கும்படியாக, அந்த நகரத்தைச் சேர்ந்த ஒருவர் நெருப்பை நோக்கி ஓடி வந்து, நீண்ட கைப்பிடியைக் கொண்ட கோடரியால் அவரது தலையில் ஓங்கி அடித்தார். டெய்லர் உடனடியாக மரித்தார் அவரது சடலம் தீயில் விழுந்தது.

இந்த சம்பவத்தையும் இதைப் போன்ற பல வரலாற்று நிகழ்வு சம்பவங்களையும் படிக்கும்போது, டெய்லர் போன்றவர்கள் இப்படிப்பட்ட துன்பங்களைச் சகிக்க என்ன காரணம் என்று யோசிக்கிறோம். இதற்கான ஒரு காரணம் என்னவென்றால், கிறிஸ்தவ வாழ்க்கையானது உபத்திரவத்திற்கான அழைப்பு என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள், அதனால் தான் துன்பம் வந்தபோது அவர்கள் ஆச்சரியப்படவில்லை என்று நான் நம்புகிறேன். 1 பேதுரு 4:12ல் உள்ள வார்த்தைகளை அவர்கள் மனதில் கொண்டிருந்தார்கள், "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாதீர்கள்."

கவனியுங்கள், பேதுரு, "ஆச்சரியப்பட வேண்டாம்" என்று கூறித் தொடங்குகிறார். இது ஒரு கட்டளை. "கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதியாக துன்பத்தை எதிர்நோக்குங்கள்" என்று அவர் கூறுகிறார். நீங்கள்

பாருங்கள், சோதனைகளைச் சந்திக்கும்போது அதிர்ச்சியைக் காண்பிப்பதே சாதாரண மனித எதிர்வினை, "விசித்திரமான ஒன்று" எனக்கு நடக்கிறது.

இருப்பினும், தகவலறிந்த கிறிஸ்தவருக்கு அது அப்படி இருக்கக்கூடாது. சோதனைகள் வரும்போது நாம் ஆச்சரியப்படக்கூடாது; மாறாக, நாம் அதை எதிர்பார்க்க வேண்டும். துன்பங்களை எதிர்பார்க்க வேண்டும் என்றும், சோதனைகள் வரும்போது ஆச்சரியப்படக்கூடாது என்றும் பைபிள் மீண்டும் மீண்டும் நமக்கு நினைவூட்டுகிறது.

வேறு யாருமல்ல, கர்த்தராகிய இயேசுவிடமிருந்து சில உதாரணங்கள் இங்கே.

> மத்தேயு 5:11 "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்."

> மத்தேயு 10:34-36 "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே."

> மாற்கு 10:29-30 "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது."





> யோவான் 15:20 "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்."

மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் இந்த உண்மையை நமக்கு நினைவூட்டுகிறார்கள். 2 தீமோத்தேயு 3:12ல் "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள்." என்று பவுல் நமக்குச் கூறுகிறார். 1 யோவான் 3:13ல் "என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்" என்று யோவான் நமக்கு நினைவூட்டுகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தையோ அல்லது எபிரேய நிருபம் 11 வது அதிகாரத்தையோ வாசிக்கும்போது, சபையின் தொடக்க ஆண்டுகளில் தேவனுடைய மக்கள் அனுபவித்த கல்லெறிதல்கள், சிறைபிடிப்புகள், சவுக்கடிகள் மற்றும் படுகொலைகள் நமக்கு இதை தெளிவாக நினைவூட்டப்படுகின்றன. 1ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை தேவனுடைய மக்கள் உலகத்தின் கைகளில் பட்ட துன்பங்களுக்கு சபை வரலாறு சாட்சியமளிக்கிறது. மனித வீழ்ச்சியிலிருந்து, சாத்தானின் மக்களுக்கும் தேவனுடைய மக்களுக்கும் இடையே ஒரு நிலையான பகை உள்ளது. சாத்தான் தேவனுக்கு எதிராக நிற்பதால், தேவனையும் அவருக்காக நிற்கும் அனைவரையும்

வெறுக்கும்படி அவன் தன் பிள்ளைகளைத் தூண்டுவான். எனவே, இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் துன்பத்தின் யதார்த்தத்தைப் பற்றி நம்மை எச்சரிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

1 பேதுரு 4:12க்குத் திரும்புவோமாக. சில சமயங்களில் நாம் சந்திக்கும் சோதனைகளை பேதுரு இவ்வசனப்பகுதியில் விவரிக்கிறார். கிறிஸ்தவர்கள் சோதனைகளை எதிர்பார்ப்பது மட்டுமல்லாமல், அவற்றைக்கண்டு ஆச்சரியப்படக்கூடாது, சில சமயங்களில், இந்த சோதனைகள் தீவிரமாக அல்லது கடுமையானதாக இருக்கும். "அக்கினி" [எரிதல்] என்ற வார்த்தையின் அர்த்தம் இதுதான். பழைய ஏற்பாட்டில் அதே வார்த்தை "சூளை" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் பேதுருவின் நிருபத்தை பெற்ற கிறிஸ்தவர்கள் அனுபவித்த உபத்திரவத்தின் கடுமையையும், நம் காலத்தில் சிலர் அனுபவிக்கும் உபத்திரவத்தையும் அது விவரிக்கிறது.

இந்தக் கட்டத்தில், "இவ்வளவு கடுமையான துன்பத்தின் பயன் என்ன?" என்று ஒருவர் கேட்கலாம். அந்தக் கேள்விக்கு பேதுரு இந்த வார்த்தைகளால் பதிலளிக்கிறார், "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினி சோதனை வந்தது." துன்பம் நம்மைச் சோதிக்க வரும். உண்மையான விசுவாசம் சோதனைகள் மூலமாக மட்டும் நிலைத்திருக்கும். சோதனைகளை எதிர்கொள்ளும் போது தவறான விசுவாசம் வீழ்ச்சியடைகிறது. முன்னதாக, 1 பேதுரு 1:6-7ல், பொன்னானது நெருப் பால்





சோதிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுவதைப் போல விசுவாசியின் விசுவாசம் சோதிக்கப்பட்டு உபத்திரவத்தால் சுத்திகரிக்கப்படுவதைப் பற்றி பேதுரு கூறினார். நெருப்பு தங்கத்தின் தரத்தை வெளிப் படுத்துகிறது. அது உண்மையானதாக இருந்தால், அது நெருப்பில் போடப்படும் செயல் முறைக்குப் பிறகு இன்னும் தூய்மையாக விளங்கும். உண்மையான கிறிஸ்தவனுக்கும் அப்படியே நடக்கும். சோதனைகளுக்குப் பிறகு அவன் தூய்மையானவனாகிறான்.

விசுவாசிகளுக்கு உபத்திரவம் அவசியம் தேவை. அப்படியில்லையென்றால் வேறு எப்படி நாம் நமது குருவைப் போல் மாற முடியும்? நம் சத்துருக்களை நேசிக்கவும், நம்மை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யவும், நம்மைத் துன்புறுத்துபவர்களுக்காக ஜெபிக்கவும் வேறு எப்படி கற்றுக்கொள்வது? வேறு எப்படி நாம் மிகவும் அடக்கமாகவும், மென்மையாகவும், உடைக்கப்பட்டவர்களாகவும், மற்றவர்களின் தேவைகளுக்கு அதிக உணர்திறன் உடையவர்களாகவும் மாற முடியும்? சோதனைகள் நம்மை சுத்திகரிக்க தேவனால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளத்தவறும்போது, நமக்கு "புதுமையான ஒன்று நடப்பது போல் சோதனைகளுக்கு எதிர்வினையாற்றுவோம்" என்று பேதுரு கூறுகிறார்.

துரதிர்ஷ்டவசமாக, "எனக்கு புதுமையான ஒன்று நடக்கிறது" என்பது பல விசுவாசிகளின் பதிலாக இருக்கிறது. ஒருவேளை, கிறிஸ்தவ வாழ்க்கை

யானது ஆரோக்கியம், செல்வம் மற்றும் மகிழ்ச்சியுடன் கூடிய பிரச்சனையற்ற ஒன்று என்று அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்குமோ என்று தெரியவில்லை, அப்படியிருந்தால் அது வேதம் கற்பிக்கும் போதனைகளுக்கு நேர் எதிரானது. அத்தகையவர்கள் சோதனைகளை எதிர்கொள்ளும்போது அதற்கு சரியான மறு உத்தரவு அளிக்கும் வழியை அறிந்திருக்க மாட்டார்கள். அதனால்தான் மக்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு முன்பு அதற்கு செலுத்த வேண்டிய விலைக்கிரயத்தை கணக்கிடுவது முக்கியம்.

தம்மைப் பின்தொடர்வதற்கு முன் மக்கள் அதன் விலைக்கிரயத்தை கணக்கிட வேண்டும் என்று இயேசுகிறிஸ்துவே கூறியிருக்கிறார் [லூக்கா 14:26-35]. விசுவாசத்திற்கு விலை கொடுக்க வேண்டியிருக்கும்போது ஓடிப்போகும் அரை மனதுள்ள சீஷர்களை உருவாக்குவதில் அவர் ஒருபோதும் ஆர்வம் காட்டவில்லை. சோதனைகள் வரும்போது தப்பி ஓடுபவர்கள், கற்பாறை நிலத்தில் விழுந்த விதையைப்போல உணர்ச்சிபூர்வமான அடிப்படையில் கிறிஸ்துவுக்கு பதிலளிப்பவர்கள். அத்தகைய மக்களைப்பற்றி இயேசு பின்வருமாறு விவரிக்கிறார், "16 அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும், 17 தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்" [மாற்கு 4:16-17].





மறுபுறம், விலைக்கிரயத்தைக் கணக்கிடுபவர்கள் தங்கள் முழு பாவத்தையும். பரிதபிக்கப்பட்ட நிலையையும் உணர்ந்து, பரிசுத்த ஆவியால் செயல்படுத்தப்படும் கிறிஸ்துவின் நிபந்தனைகளின்படி அவரிடம் வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றவர்கள், சோதனைகள் வரும்போது சகித்துக் கொள்வார்கள், "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக்கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" [லூக்கா 8:15]. அவர்கள் துன்பத்தை எதிர்பார்க்கிறார்கள், சோதனைகள் வரும்போது ஆச்சரியப்படுவதில்லை. அதனால் அவர்கள் தாங்கிக்கொள்கிறார்கள்!

துன்பத்தை எதிர்பார்த்தும், அதைக் கண்டு ஆச்சரியப்படாமலும் இருக்க, பரிசுத்த ஆவியானவர் வழியாய் கர்த்தர் நமக்கு நினைவூட்டும்படி தொடர்ந்து மன்றாடுவோம். நாம் இயேசுவுக்காக வாழும்போது பல்வேறு வடிவங்களில் நிராகரிப்பும் உபத்திரவமும் வரும். இவ்விதமான விவிலியப் புரிதலைக் கொண்டிருப்பது குறைந்தது இரண்டு காரியங்களையாவது நிறைவேற்றும்:

(1) சோதனைகளைச் சந்திக்கும்போது தேவனுக்கு எதிராக முறுமுறுப்பதை அது தடுக்கும்.

(2) பிலிப்பியர் 1:29ல் பவுல் நமக்கு நினைவூட்டுவது போல, "இயேசுகிறிஸ்துவுக்காகப் பாடுபடுவதும் அதை ஒரு பாக்கியமாகக் கருதுவதும் நம் இருதயங்களை வலுப்படுத்தும்" [பிலிப்பியர் 1:29]!**3.**

## 3. இயேசு சிலுவையில் சந்தித்த 3 உபத்திரவங்கள்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்க்கை முழுவதும் உபத்திரவம் நிறைந்ததாக இருந்தது. இருப்பினும், இந்த கட்டுரையானது அவர் தமது இரத்தத்தை சிந்தியதன் மூலம் நாம் பெற்ற மீட்பிற்காக, சிலுவையில் அவர் அனுபவித்த சரீர, ஆவிக்குரிய, மற்றும் உணர்ச்சி ரீதியான 3 வகை உபத்திரவங்களை மையமாகக் கொண்டுள்ளதை விவரிக்கிறது.

### 1. சரீரரீதியான உபத்திரவம்

இயேசுவின் சரீரரீதியான உபத்திரவங்களைப் பற்றி அதிகம் பேசாத ஒரு போக்கு விசுவாசிகளிடையே காணப்படுகிறது. இது ஏன் இப்படி காணப் படுகிறது என்பதற்கு 2 காரணங்களை என்னால் சிந்திக்க முடிகிறது.

**காரணம் #1**

“அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்” [மாற்கு 15:24] என்று வெறுமனே கூறுவதைத் தவிர, சிலுவையில் அறையப்படும் முறையைப் பற்றிய பல விவரங்கள் வேதத்தில் கூறப்படவில்லை. தேவனே இந்த வகையான மரணதண்டனையைப் பற்றி வேதத்தில் அதிக விவரங்களைக் கொடுக்காததால், நாம் அதை சிந்திக்க மறுக்கிறோம்.

**காரணம் #2**

நிச்சயமாக, இயேசுவின் சரீரரீதியான உபத்திரவம் பயங்கரமானது என்றாலும், அந்த நேரத்தில் மற்ற மனிதர்களும் அதே அனுபவத்தை பெற்றிருந்ததால் அது தனித்துவமானது அல்ல என எண்ணுகிறோம். எனவே, சிலுவையில் அறையப்படுவதைப் பற்றிய விவரங்களை சற்று சிந்திப்போம்.

எனவே சிலுவையில் அறையப்பட்டதன் கொடூரமான தன்மையைப் பற்றிய விவரங்களைப் புரிந்துகொள்வதற்கு சில நிமிடங்கள் எடுத்துக் கொள்வது நல்லது என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் இயேசு கிறிஸ்து அப்படித்தான் கொல்லப்பட்டார்.

சிலுவையில் அறையப்பட்டு மரண தண்டனை அளிப்பது என்பது இயேசுவின் காலத்திற்கு சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பே பெர்சியர்களால் நடை முறைப்படுத்தப்பட்டிருந்தது. பிற்காலத்தில் கிரேக்கர் களும் இதைப் பின்பற்றினர். ஆனால் ரோமானியர்கள் அதை முற்றிலும் புதிய நிலைக்கு கொண்டு சென்றனர். மிகவும் கடினமான குற்றவாளிகளுக்கு தண்டனையளிக்க சிலுவையில் அறையப்படும் முறையை அவர்கள் தெரிவுச் செய்தனர். நீங்கள் ரோமுக்கு எதிராக நடந்தால் இதுதான் நடக்கும்! என்ற செய்தியை மக்களுக்கு இதன் மூலம் அவர்கள் அறிவித்தனர். அதனால்தான் ரோம அரசாங்கம் பலர் பயணிக்கும் பொதுவான இடத்தில் மக்களை சிலுவையில் அறைந்தது. குற்றவாளிகள் அவதிப்படு வதைப் பார்த்த பயணிகள், பல நேரங்களில் ரோமை எதிர்க்கத் துணியாதீர்கள்! என்ற வெளிப்படையான எச்சரிக்கையைப் பெற்றார்கள்.





**சிலுவையில் அறையப்படும் செயல்முறை.**

தேவையான முதன்மை பொருட்கள் 2 தனித்தனி மரத்துண்டுகள் மற்றும் 3 ஆணிகள். 2 மரத்துண்டுகள் ஒரு குறுக்கு [+ படங்கள் அடிக்கடி குறிப்பிடுவது போல அல்லாமல்] T போல உருவாக்கப்படும். குறுக்குக் கற்றை [Patibulum பாடிபுலம்] என்று அழைக்கப்பட்டது. செங்குத்து கற்றை அல்லது இடுகை [Stipes ஸ்டைப்ஸ்] என்று அழைக்கப்பட்டது.

இந்த செயல்முறை முதலில் குற்றஞ்சாட்டப் பட்டவரை உலோகத் துண்டுகளால் அல்லது எலும்பு களின் துண்டுகளால் ஒரு திடமான மரக்கைப் பிடியுடன் இணைக்கப்பட்ட குறுகிய பட்டையான சாட்டையால் அடிக்கப்படுவதாகும். இப்படி சாட்டை யால் அடிப்பதால் ஒரு மனிதனைக் கொல்லலாம் அல்லது நிரந்தரமாக ஊனமாக்கிவிடலாம், ஏனெனில் அது முதுகு மற்றும் பக்கவாட்டில் உள்ள சதையைக் கிழித்துவிடும். குற்றவாளி பின்னர் குறுக்குக் கற்றையை நகரத்தின் வழியாக சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு கொண்டு செல்லும்படி கட்டாயப்படுத்தப்படுவார். ஒருவர் தன்னுடைய சிலுவையைச் சுமந்து செல்வது என்பது மரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அது ஒரு வழிப் பயணம் மறுபடியும் திரும்ப வாய்ப்பில்லை என்பதை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது! கிறிஸ்துவின் விஷயத்தில், கசையடி மிகவும் மோசமாக இருந்தது, அது அவருடைய சிலுவையை முழு பாதையிலும் சுமக்க முடியாமல் போனது [மாற்கு 15:21].

குற்றவாளி சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு வந்தவுடன், குறுக்குக் கற்றை செங்குத்து கற்றையின் மேற்புறத்தில் இணைக்கப்படும். பீம் களில் ஒன்றில் துளை இருக்கும், மற்றொன்று ஒரு சதுர ஆப்பு கொண்டதாக இருக்கும், எனவே அவற்றை எளிதாக இணைக்கவும், அடுத்தடுத்த பயன்பாட்டிற்கு பிரிக்கவும் கூடும். ஒன்றாக இணைக் கப்பட்ட சிலுவை பின்னர் தரையில் மட்டமாக போடப்படும். குற்றவாளி பின்னர் தன் அனைத்து ஆடைகளையும் கழற்றுவார், இதனால் அதிக அவமானத்திற்கு ஆளாவார்.

சில சமயங்களில், வலியின் விளைவுகளைத் தடுக்க, குற்றவாளிகளுக்கு சில போதை பானங்கள் கொடுக்கப்படும். இது குற்றாவளியின் மீதான கருணையால் செய்யப்படாமல், அவர்கள் அதிகமாக எதிர்த்து வீரர்களுக்கு வேலையை கடினமாக் காதபடிக்கு கொடுக்கப்பட்டது. குற்றவாளி பின்னர் சிலுவையின் மரத்தில் இரத்தம் தோய்ந்த வெற்று முதுகுடன் சிலுவையில் வைக்கப்படுவார். அதுவே மிகவும் வேதனையாக இருக்கும்.

எவ்வளவு நேரம் உபத்திரவத்தை நீடிக்க வீரர்கள் விரும்புவார்கள் என்பதைப் பொறுத்து, குற்றவாளி கயிறுகளால் கட்டப்படுவார் அல்லது ஆணிகளால் அடிக்கப்படுவார். வெளிப்படையாக, இயேசுவின் விஷயத்தில், அவர் ஆணிகளால் அறையப்பட்டார் [யோவான் 20:24-27]. குற்றவாளியின் கைகள் நீட்டப் பட்டு ஒவ்வொரு கையிலும் ஒரு ஆணியாக குறுக்குக் கற்றையின் மீது அடிக்கப்படும். ஆணிகள் மணிக்கட்டில் அடிக்கப்படும், [படங்கள் பெரும்பாலும்





தவறாக சித்தரிக்கப்படுவது போல] உள்ளங்கையில் அல்ல. அந்த வகையில், ஆணிகள் சதையிலிருந்து கிழிக்கப்படாது மற்றும் பாதிக்கப்பட்டவரின் கை களை விட்டகலாது. 3வது ஆணி இரண்டு கால் களிலும் [பாதம் மற்றும் கால்களுக்கு இடையே உள்ள சந்திப்பில்] அடிக்கப்படும். அந்த வழியில், பாதங்கள் செங்குத்து கற்றைக்கு இணைக்கப்படும். குற்றஞ் சாட்டப்பட்ட மனிதனின் குறிப்பிட்ட குற்றம் ஒரு பலகையில் எழுதப்பட்டு சிலுவையில் இணைக்கப் படும். அவ்வகையில் அந்த நபர் என்ன குற்றம் செய்தார் என்பது அந்த வழியாக செல்லும் அனைவருக்கும் தெரியப்படுத்தப்படும்.

வீரர்கள் சிலுவையைத் தூக்கி, செங்குத்தாக இருக்க ஆழமான குழிக்குள் விடுவார்கள். சிலுவை கீழே விழும் போது ஏற்படும் சலசலப்பு, தலை வெடித்துச் சிதறுவது போன்ற வலியைக் கொண்டு வரும். பின்னர் கற்பனை செய்ய முடியாத மற்றும் பயங்கரமான வலியின் மணிநேரங்களும் நாட்களும் கூட தொடங்கும்! முன்கைகள் மரத்துப் போகும், தோள்கள் தங்கள் இணைப்பிலிருந்து இழுக்கப் படுவதைப் போல உணரும். மார்பு குழி மேல் நோக்கியும் வெளிப்புறமாகவும் இழுக்கப்படும், இது சுவாசிப்பதை கடினமாக்கும்.

மேலும் ஒரு மூச்சை இழுக்க, குற்றவாளி உள்ளுணர்வாக தனது கால்களால் தன்னை மேலே இழுப்பார். இது குற்றவாளிக்கு மற்றொரு சுவாசத்தைப் பெற உதவும் அதே வேளையில், மிகவும் வேதனையாகவும் இருக்கும். இது எப்படி யென்றால், இந்த முயற்சிக்கு உடலின் எடையை

கால்களை வைத்திருக்கும் ஆணிகளின் மீது போடுவது, முழங்கைகளை வளைப்பது மற்றும் மணிக்கட்டு வழியாக இயக்கப்படும் ஆணிகளை மேல்நோக்கி இழுப்பது தேவைப்படும். இது நரம்புகளில் மிகப்பெரிய வலியை ஏற்படுத்தும் ஒருவர் நெருப்பில் செல்வது போன்ற வலி இது.

மேலும் ஒவ்வொரு மூச்சிலும், கிழிந்த குற்றவாளியின் முதுகு மரச் சிலுவையில் உராய் வதால் மிகுந்த வலியை ஏற்படுத்தும். கால்கள் வலுவிழந்து, தசைப்பிடிப்பும் நடுக்கமும் ஏற்படும் போது, குற்றவாளி நிவாரணத்திற்காக தனது முதுகை வளைப்பார். கைகள், மார்பு, முதுகு மற்றும் கால்களில் ஏற்படும் வலியை சமாளிப்பதற்கான ஒரே வழி இந்த நிலை மாற்றமாகும். இதற்கிடையில், உயிர்வாழுவதற்கான விருப்பம் குற்றவாளியை வலியால் அழ வைக்கும். சிலுவையில் அறைப் பட்டவர் மிகவும் சோர்வடைந்து, அதிக நீரிழப்பையும் மற்றொரு மூச்சை இழுக்க முடியாத அளவுக்கு உடல் ரீதியாக பலவீனமாகும் வரை அது தொடரும். இறுதியில் சில மணிநேரங்களுக்குப் பிறகு அல்லது சில நாட்களுக்குப் பிறகு மரணம் நிகழும், இது பொதுவாக இரத்த இழப்பினால் வந்ததல்ல; மூச்சுத் திணறலால் வந்ததாகும்.

எனவே, இது உங்களுடைய பாவங்களுக்காகவும் என்னுடைய பாவங்களுக்காகவும் நமது கர்த்தர் அனுபவித்த சரீர ரீதியான உபத்திரவங்களின் ஒரு பார்வையாகும். இயேசுவின் சரீர ரீதியான, உபத்திர வத்தின் இரண்டாவது அம்சத்தைப் பார்ப்போம்.





**2. ஆவிக்குரிய உபத்திரவம்**

சரீரரீதியான துன்பங்கள் எவ்வளவு பயங்கர மானதோ [உண்மையிலேயே பயங்கரமானது], இந்த ஆவிக்குரிய உபத்திரவமும் நம் கர்த்தருக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏனென்றால், ஒரு எழுத்தாளர் கூறியது போல், சிலுவையில் இயேசு “நம்முடைய எல்லா பாவங்களுக்காகவும் குற்றத்தை சுமக்கும் உளவியல் வேதனையை” அனுபவித்தார்.

சில சமயங்களில் நாம் பாவம் செய்தோம் என்பதை உணரும் போது மிகப்பெரிய குற்ற உணர்வை அனுபவிக்கிறோம். குற்ற உணர்வின் பாரம் நம் இருதயத்தை கனக்க செய்கிறது. நாம் பாவிகளாக இருக்கிறோம், முதலில், அத்தகைய வலியை நாமே உணர்ந்தால், ஒருபோதும் பாவம் செய்யாத நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்! அவர் இந்த பூமியில் வாழும் போது பரிபூரண பரிசுத்தமாக இருந்தார். பாவமான வார்த்தைகளோ, செயல்களோ இல்லை. ஒரு கெட்ட எண்ணம் கூட இல்லை! அவர் பாவத்தை வெறுத்தார், மேலும் பாவத்தின் எண்ணத்தைக் கூட அவர் எதிர்த்தார். ஆனாலும், அவர் வெறுத்த அனைத்தும், அவருடையதல்லாத அனைத்தும் அவர் மீது முழுவதுமாக ஊற்றப்பட்டன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம்முடைய பாவங்கள் அனைத்தும் அவர் மீது முழுமையாக ஊற்றப்பட்டன. வேதம் இதை மிகத் தெளிவாகக் கூறுகிறது.

ஏசாயா 53:6 "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

ஏசாயா 53:12 "அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து..."

யோவான் 1:29 "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"

2 கொரிந்தியர் 5:21 "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"

எபிரெயர் 9:28 "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு..."

1 பேதுரு 2:24 "அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்"

இந்த வசனங்கள் கிறிஸ்து சிலுவையின் மீது ஒரு பாவி ஆனார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. அவர் எந்தப் பாவத்தையும் செய்ததற்காக சிலுவையில் அறையப்படவில்லை, அவர் ஒருபோதும் குற்றமற்றவர் [யோவான் 8:46; 1 பேதுரு 2:22]. அவர் அந்த பாவங்களைச் செய்ததைப் போல நடத்தப்பட்டார், இதனால் தண்டனையைத் தாங்கினார். அதன் விளைவாக, அவர் மீது விசுவாசம் வைக்கும் அனைவரும் தங்கள் பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும். எப்படியென்றால், இயேசுகிறிஸ்து ஏற்கனவே அவர்களுக்குப் பதிலாகப் பாடுபட்டு, அவர்களுடைய விடுதலைக்கான விலையைத் தம் இரத்தத்தால் செலுத்தினார்.





"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படிவராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று இயேசுவே கூறியிருக்கிறார் [மத்தேயு 20:28]. மீண்டும், மீட்கும்பொருள் என்பது நம் பாவங்களுக்காக அவருடைய இரத்தத்தின் மூலம் விலைக்கிரயம் செலுத்தப்பட்டத்தைக் குறிக்கிறது. அது மீட்புச் சொற்கள். சிலுவையில் இரத்தத்தைச் சிந்தியதன் மூலம், இயேசு நம்முடைய பாவத்திற்கான குற்றத்தை மட்டும் சுமக்கவில்லை, மாறாக நமக்கு பதிலாக, பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபம் அனைத்தையும் தம் மீது சுமந்துக்கொண்டார்.

1 யோவான் 2:2 "நமது பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே."

ரோமர் 3:25 "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்"

சிலுவையில் பாவங்களுக்காக தேவனுடைய கோபத்தை உள்வாங்குவதன் மூலம், இயேசு தம்மை விசுவாசிப்பவர்கள், தங்கள் பாவங்களுக்காக ஒருபோதும் தேவனுடைய கோபத்தை அனுபவிக்க கூடாது என்ற ஏற்பாட்டைச் செய்தார். எனவே, இது உங்களுடைய பாவங்களுக்காகவும், என் பாவங்களுக்காகவும் இயேசு சிலுவையில் அனுபவித்த ஆவிக்குரிய உபத்திரவத்தின் ஒரு பார்வையாகும்.

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரபிரகாரமான மற்றும் ஆவிக்குரிய அம்சத்தைப் பார்த்த பிறகு, சிலுவையில் அவர் அனுபவித்த உபத்திரவத்தின் 3வது மற்றும் இறுதி அம்சத்தை–உணர்ச்சிரீதியான உபத்திரவத்தை சுருக்கமாகப் பார்ப்போம்.

**3. உணர்ச்சிரீதியான உபத்திரவம்**

உணர்ச்சிரீதியான உபத்திரவம் எனும்போது, சிலுவையில் இயேசு அனுபவித்த கைவிடப்பட்ட உணர்வை நான் குறிப்பிடுகிறேன். அனைவரும் அவரை கைவிட்டனர். நீங்கள் வாழ்க்கையில் ஒரு கடினமான நேரத்தை கடந்து செல்கிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். உங்கள் மனைவி, குழந்தைகள் மற்றும் நண்பர்களால் கைவிடப்பட்ட நீங்கள் தனியாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது நீங்கள் யாரையாவது உடன் வைத்திருக்க விரும்பு கிறீர்களா? இதற்கான பதில் வெளிப்படையானது. நெருங்கிய ஒருவர் கூட இருந்தால் அத்தகைய பெரும் சோதனையின் போது உதவிகரமாக இருக்கும். எனினும், யாரும் அனுபவிக்க முடியாத மிகப் பெரிய உபத்திரவத்தின் போது இயேசு தனியாக இருந்தார்!

முதலாவதாக, அவர் தமது நெருங்கிய 11 நண்பர் களால் கைவிடப்பட்டார். யூதாஸின் துரோகத்தின் வலியை அவர் ஏற்கனவே உணர்ந்திருக்க வேண்டும். மேலும் அவருடன் இருப்பதாக உறுதியளித்த 11 பேரும் அவர் கைது செய்யப்பட்டபோது அவரைக்





கைவிட்டனர். இரண்டாவதாக, எவரும் எதிர் கொள்ளக்கூடிய மிகப்பெரிய உணர்ச்சிகரமான வலியை பிதாவாகிய தேவன் அவரைக் கைவிட்ட போது எதிர்கொண்டார். சிலுவையில், இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களைச் சுமந்தபோது, பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையிலான பரிபூரண ஐக்கியம் [உறவு அல்ல] இந்த நேரத்திற்கு முன்பு நித்தியமாக இருந்த ஒரு ஐக்கியம் தற்காலிகமாக முறிக்கப்பட்டது குறிப்பாக மதியம் மற்றும் 3 மணி வரை. அதைத்தனியே தாங்கிய தம் குமாரன் மீது தேவன் கோபத்தைக் கொட்டிக்கொண்டிருந்த நேரம் அது.

உண்மையில், உணர்ச்சிகரமான துன்பம் மிகவும் அதிகமாக இருந்தது, இது இயேசுகிறிஸ்து மிகவும் பரிச்சயமான "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" [மத்தேயு 27:46]. என்ற இந்த கூக்குரலின் வார்த்தைகளைப் படிக்கும்போது, உங் களுடைய பாவங்களுக்காகவும் என்னுடைய பாவங் களுக்காகவும் அவர் எவ்வளவு ஆழமான வலியை யும் உணர்ச்சிகரமான வேதனையையும் அனுபவித் தார் என்பதை நாம் ஒரு சிறிய பார்வை யைப் பெறலாம்.

ஆகவே, நம்மை மீட்பதற்காக இயேசு சிலுவையில் அனுபவித்த சரீர, ஆவிக்குரிய மற்றும் உணர்ச்சி ரீதியான உபத்திரவங்களை நாம் பார்த்தோம்.

**சிந்தனைக்காக.**

அடுத்த முறை, நாம் பாவம் செய்வதற்கான சோதனையை எதிர்கொள்ளும்போது, நம்மை மீட்பதற்காக தம்முடைய இரத்தத்தைச் சிந்தியபோது, நம்முடைய கர்த்தர் சிலுவையில் அனுபவித்த பல்வேறு வகையான உபத்திரவங்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்போம். பாவத்தின் சோதனைக்கு 'இல்லை' என்று சொல்ல அந்த பிரதிபலிப்பு நம்மை கட்டாயப்படுத்தட்டும்.

நம்முடைய இரட்சகர் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருப்பதை அறிந்து, ஆழ்ந்த வேதனையில் கூக்குரலிடுவதையும் அறிந்து, அதே நேரத்தில் நாம் இவ்வளவு காலமாக நேசித்த பாவங்கள் உட்பட, பாவங்களையும் போற்று வதையும், விட்டு விட்டு சிலுவையைப் பார்க்க முடியுமா?

இது சிந்தனைக்கு அப்பாற்பட்டது!

நம்முடைய இரட்சகருக்கு என்ன செய்யப்பட்ட தென்று அறிந்து, பாவங்கள் மீதான வெறுப்பு, அதாவது அவைகளை விலக்கி வைக்க நம்மைத் தூண்டும் ஒரு வெறுப்பில் வளர இந்த நாளிலிருந்து நம் இருதயங்கள் ஒரு பரிசுத்தமான தீர்மானத்துடன் நகர்த்தப்படட்டும். மேலும், நம் அருமை ஆண்ட வராகிய இயேசுவை இன்னும் அதிகமாக நேசிக்கவும், பொக்கிஷமாகக் கருதவும் நம் இருதயங்களும் தூண்டப்படட்டும்.



## 4. நீங்கள் கர்த்தரால் கைவிடப்பட்டதாக உணரும்போதும் அவர் உங்களை நினைவுகூருகிறார்

நீங்கள் கர்த்தரால் கைவிடப்பட்டதாக உணரும் போதும் அவர் உங்களை நினைவுகூருகிறார் தொடர்ச் சியான கடின சூழ்நிலைகளின் மத்தியில் தேவனால் கைவிடப்பட்டதாக நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக் கிறீர்களா? ஒருவேளை அது பொருளாதாரச் சிக்கல் களிலா, உடல்நலப் பிரச்சினைகளிலா அல்லது குடும்பப் போராட்டங்களிலா? துன்பத்தின் தன்மை எதுவாக இருந்தாலும், இப்படி உணரும்போது உங்கள் பதில் என்னவாக இருந்தது?

(1) தேவன் மீது ஏமாற்றம்

(2) அவர் மீது கோபம்

(3) மனச்சோர்வு மற்றும் மன அழுத்தம்

(4) ஏற்ற காலத்தில் விடுதலை தருவார் என்று பொறுமையாக காத்திருப்பது.

ஆனால் இதை செய்வதை விட சொல்வது எளிதானது. சோதனைகளில் இருந்து நாம் விடுபட வில்லை எனத் தோன்றும்போது, அத்தகைய தெய்வீகப் பிரதிபலிப்பை எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும்? இந்த வேதாகம உண்மையை ஏற்றுக் கொள்வதில் பதில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன்:

தேவன் தம் பிள்ளைகளை மறப்பதில்லை. அவர்கள் தம்மால் கைவிடப்பட்டதாக "உணர்ந்தாலும்" அவர் அவர்களை நினைவில் கொள்கிறார்!

**தேவன் தம்முடைய ஜனங்களை நினைவுக் கூர்ந்ததின் உதாரணங்கள்.**

**நோவா.** "தேவன் நோவாவை... நினைத்தருளினார்" ஆதியாகமம் 8:1ல் கர்த்தர் தம்முடையவர்களை நினைவுகூருவதை நாம் முதன்முதலில் வாசிக்கிறோம்.

இந்த வார்த்தையானது மிகவும் இருண்ட பின்னணியில் பிரகாசிக்கும் ஒளியாக நிற்கிறது.இதற்கு முந்தின வசனம் "ஜலம் பூமியின் மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது." [ஆதியாகமம் 7:24] என்று நமக்கு கூறுகிறது. முழு உலகமும் வெள்ளத்தால் அழிந்துப்போனது. நோவாவும் பேழையில் இருந்த அனைவரும் வெளியே வரமுடியாமல் இன்னும் உள்ளே அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் பேழையில் அடைக்கப்பட்டதிலிருந்து, குறிப்பாக அவர்கள் பேழையில் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்பதை ஒருவர் உணரும்போது அவர்களின் மனதில் ஓடிய எண்ணோட்டமென்ன என்பதை கற்பனை செய்து பார்க்க முடியும். பூமியில் ஜலப்பிரளயம் வந்து நோவா பேழையில் பிரவேசித்த ஒரு வாரத்திற்கு பின்னர் நோவாவுக்கு 600 வயது என்று ஆதியாகமம் 7:6,11 கூறுகிறது, மற்றும் ஆதியாகமம் 8:13-15 வசனங்கள் அவன் 601 வயது சென்ற சில காலம் கழித்து பேழையை விட்டு வெளியே வந்தான் என்று கூறுகிறது. எனவே, அவர்கள் பேழைக்குள் இருந்த மொத்த காலமும் ஒரு





வருடத்திற்கு சற்று அதிகமாகவே இருந்தது! சுற்றியுள்ள அனைத்தும் மரித்துக்கொண்டிருந்ததால், அது ஒரு நீண்டதொரு காலமாகவே இருந்தது!

இருப்பினும் தேவன் நோவாவை நினைவு கூர்ந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "**நினைவு கூர்ந்தார்**" என்ற வார்த்தை நோவாவை குறித்து நினைவாற்றல் இழந்ததைப் போல தேவன் மறந்து விட்டார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக இது "**இரக்கத்துடன் நினைவு கூருதல், விண்ணப் பங்களை நிறைவேற்றுதல், பாதுகாத்தல், விடு வித்தல்**" ஆகியவற்றைக் குறிக்கிறது. இங்கு நினைவுக்கூர்ந்தார் என்று கூறப்பட்டிருப்பது நோவாவை ஜலப்பிரளயத்திலிருந்து விடுவிப்பதாகக் தேவன் வாக்குத்தத்தம் அளித்ததைக் குறிக்கிறது [ஆதியாகமம் 6:17-18]. இப்போது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நடைமுறைப்படுத்தினார்.

**ஆபிரகாம்.** "தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, ஆபிரகாமை **நினைத்து**, "லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்தச் சமபூமியின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்" [ஆதி19:29]. ஆபிரகாம் தன் உறவினன் லோத்துக்காக (ஆதியாகமம் 18:16-33) செய்த வேண்டுக்கோளைக் கேட்ட தேவன், சோதோம் மற்றும் கொமோரா ஆகிய இரண்டு நகரங்களை அழித்தபோது, லோத்தை தம்முடைய தயவிரக்கத்தால் காப்பாற்றினார்.

**எகிப்தில் இஸ்ரவேலர்கள்.** யாத்திராகமத்தில், தேவனுடைய ஜனங்கள் அடிமைகளாக எகிப்து

தேசத்தில் உபத்திரவப்படுகையில், அவர்கள் “அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத் தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டியது. தேவன் அவர்கள் பெருமூச்சைக்கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை **நினைவுகூர்ந்தார்.** தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார் [யாத்திரா கமம் 2:23-25]. மேலும் தேவன், தம்முடைய தயவிரக்கத்தால், ஜனங்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவரும்படியாக மோசேயை எழுப்பினார்.

**அன்னாள்.** 1 சாமுவேல் 1:11ல், அன்னாள் என்ற பக்தியுள்ள பெண்ணைப் பற்றி வாசிக்கிறோம், ஆனால் அவள் குழந்தை இல்லாதவள், “சர்வவல்ல மையுள்ள கர்த்தரிடம்” தன்னுடைய “துன்பத்தை” “பார்த்து” “ஒரு குமாரனைக்” கொடுத்து தன்னை **“நினைவுகூரும்படி“** மன்றாடுவதைப் பற்றி வாசிக் கிறோம். பின்னர் அதே அதிகாரத்தில், “கர்த்தர் அவளை **நினைந்தருளினார்**” [1 சாமு 1:19] மற்றும் “அவள் கர்ப்பவதியாகி”, “ஒரு குமாரனைப் பெற்று”, “கர்த்தரிடம் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள்.” [1 சாமு 1:20] என்பதைக் காண்கிறோம்.

**சங்கீதம்.** தேவன் தம்முடைய மக்கள் துன்பத்தில் இருந்தபோது அவர்களை நினைவுகூர்ந்து அவர்களை விடுவித்தார் அல்லது சில சமயங்களில் தம்முடைய மக்களை அவர்களுடைய பாவங்களுக்காக தண்டிப் பதிலிருந்து மனந்திரும்பினார் என்பதை சங்கீதங்கள் மீண்டும் மீண்டும் பதிவு செய்கின்றன.





சங்கீதம் 98:3 “அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவு கூர்ந்தார்.”

சங்கீதம் 105:42 “அவர் தம்முடைய பரிசுத்த வாக்குத்தத்தத்தையும், தம்முடைய தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்தார்.“

சங்கீதம் 106:45 “அவர்களுக்காகத் தமது உடன் படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபை யின்படி மனஸ்தாபப்பட்டார்.”

ஜனங்கள் அடிக்கடி தேவனைப் புகழ்ந்துப்பாடியதில் ஆச்சரியமில்லை - இது போன்ற ஒரு உதாரணத்தை சங்கீதம் 136:23 நாம் பார்க்கலாம். “நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.“

**சிலுவையில் மனந்திருந்திய கள்ளன்.** சிலுவையில் மனந்திரும்பிய கள்ளனுக்கு இயேசுகிறிஸ்து அளித்த பதிலானது, தேவன் மக்களைக் இரக்கத்துடன் நினைவுகூர்ந்தற்கான வேதத்திலுள்ள உள்ள அனைத்து எடுத்துக்காட்டுகளிலும் இருதயத்தை மிகவும் தூண்டக்கூடிய சித்திரமாகும். இதில் வரும் காட்சியானது இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கி, நம் பாவங்களைச் சுமந்து, மிகுந்த வேதனையில் தவிக்கும் பின்னணியாகும்.

அந்தச் சூழ்நிலையில், சிலுவையில் அறையப் பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன், “இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்” (லூக்கா 23:42). அங்கே இயேசுகிறிஸ்துவின் அதிர்ச்சி யூட்டும் பதிலை நீங்கள் கவனியுங்கள். “இயேசு

அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடேனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக்கா 23:43). நாளை யல்ல, அடுத்த மாதம் அல்ல, இன்னும் சில வருடங்கள் அல்ல, ஆனால் இயேசு மனந்திரும்பிய வனிடம் "இன்று" தன்னுடன் "பரதீசியில்" இருப்பா யென்று வாக்குறுதி அளித்தார்.

மனந்திரும்பிய கள்ளன் அந்த வார்த்தைகளைக் கேட்டபோது எவ்வளவு சந்தோஷத்தை அனுபவித் திருப்பான் என்று கற்பனை செய்து பாருங்கள்! மேலும், சில மணிநேரங்களுக்குப் பிறகு அவன் மரித்து பரலோகத்திற்குச் சென்றபோது, இயேசு கிறிஸ்து ஏற்கனவே அவனுக்காகக் காத்திருந்த இடத்தில் அவன் அனுபவித்த சொல்ல முடியாத மகிழ்ச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்! சகோதர சகோதரிகளே, விடுதலைக்காக தம்மை நோக்கிப் பார்ப்பவர்களை தேவன் இப்படித்தான் நினைவு கூருகிறார்!

**தேவன் எதை நினைவுகூருவதில்லை.**

தேவன் தம்முடைய மக்களை நினைவு கூரு வதற்கு மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் போதாது என்றால், கீழே கூறப்படும் சில காரியங்கள் கலங் கிய இருதயங்களுக்கு நம்பமுடியாத ஆறுதலைத் தருகிறது. தம்முடைய மக்களை "நினைவில்" வைத் திருக்கும் அதே தேவன், தம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, மன்னிப்புக்காகத் தம்மிடம் திரும்பும் அனைவரின் பாவங்களையும் ஒருபோதும் **<u>நினைவு கூரமாட்டார்</u>** என்று உறுதியளிக்கிறார்.



4. நீங்கள் கர்த்தரால் கைவிடப்பட்டதாக உணரும்போதும் அவர் உங்களை நினைவுகூருகிறார்

எபிரெயர் 10:17 "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்." என்ற இந்த வாக்குத்தத்தத்தை பதிவு செய்கிறது, மேலும் நம்முடைய பாவங்களை இனி **<u>ஒருபோதும் நினைவு கூரமாட்டேன்</u>** என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்த தன் அடிப்படை இதுதான்: இயேசு கிறிஸ்து "பாவங் களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென் றைக்கும் ஒரே பலியாக [தம்மை] ஒப்புக்கொடுத்தார்" [எபி 10:12].

நம்முடைய பாவங்கள் அனைத்தும் இயேசுவின் இரத்தத்தின் கீழ் அடக்கம்பண்ணப்பட்டுள்ளன. எபிரேயர் 10:18ல் "இவைகள் மன்னிக்கப்பட்ட துண்டா னால், இனிப் பாவத்தினிமித்தம் பலிசெலுத்தப்படு வதில்லையே." என்று மிகத் தெளிவாகக் கூறுவதி னால், நாம் நியாயத்தீர்ப்புக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை, அதுவே நம் அனைவருக்கும், குறிப்பாக நாம் தேவனால் கைவிடப்பட்டதாக உணரும் காலங்களில் ஊக்கமளிக்கும் மிக முக்கிய மான ஆதாரம்! தம்முடைய பிரசன்னத்திலிருந்து நம்மைத் துண்டித்துவிடும் விதத்தில் நம்முடைய பாவங்களை ஒருபோதும் "நினைவில்" கொள்ள மாட்டேன் என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்திருக் கிறார். என்ன ஒரு மகிழ்ச்சி! என்ன ஒரு ஆறுதல்!

**தேவன் எதை நினைவுகூருகிறார்.**

இருப்பினும், இந்த மகிழ்ச்சியையும் ஆறுதலையும் இயேசுகிறிஸ்துவை நிராகரிப்பவர்களால் அனுபவிக்க முடியாது. அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்

கப்படாமல் மரித்துவிடுவதால், எதிர்காலத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ள நேரிடும். அந்த நேரத்தில், தேவன் அவர்களின் எல்லா பாவங்களையும் நினைவில் கொண்டு, அக்கினிக் கடலில் அவர்களை நித்திய தண்டனைக்கு அடிப்படையாக கொண்டு வருவார், அக்கினிக் கடல் என்பது நரகத்தை விவரிக்கும் மற்றொரு சொல்லாகும். வெளிப்படுத்தல் 20:11-15 இதை குறித்த விவரங்கள் கொடுக்கிறது.

11 பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங் காணப்படவில்லை. 12 மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். 13 சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். 14 அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். 15 ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.





வசனம் 13ன் முடிவில், "யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்ற கூற்று ஒரு முக்கியமான சத்தியத்தை நமக்குக் கற்பிக்கிறது. இன்று ஒரு மனிதன் செய்யும் பாவங்கள் மறக்கப்படாது, ஆனால் அவன் மன்னிக்கப்படாமல் மரித்தால் அந்த பாவங்கள் எதிர்காலத்தில் தண்டனைக்கு அடிப்படையாக கொண்டுவரப்படும்.

இதன் பொருள் என்னவென்றால். ஒவ்வொரு பாவ சிந்தனையும், வார்த்தையும், செய்த செயலும் நியாயத்தீர்ப்பில்கொண்டு வரப்படும். மேலும், 100% சரியான விஷயங்களைச் செய்யத் தவறியதும் இதில் அடங்கும்! அவைகள், மறுமை நாளில் ஒருவர் தாங்களாகவே சுமக்க வேண்டிய பெரும் பாவங்கள்! உண்மை என்னவென்றால், யாரும் தங்கள் பாவங்களுக்கான முழு விலைக்கிரையத்தையும் தாங்களாகவே செலுத்த முடியாது, ஏனென்றால் யாரும் சரியானவர்கள் அல்ல. அதனால்தான் இயேசு கிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் நித்திய நித்தியத்திற்கும் அக்கினி கடலில் விலை கொடுக்கிறார்கள்.

எனவே, தெரிவு தெளிவாக உள்ளது.

மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தில், ஒருவர் இன்னும் இந்த உலகில் உயிருடன் இருக்கும்போதே இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவிடம் வந்துவிட்டால், அவர்களின் பாவங்களின் முழு விலைக்கிரயமும் செலுத்தப்படும், மேலும் எதிர்காலத்தில் இயேசு கிறிஸ்து அவர்களின் பாவங்களை நினைவில் கொள்ளமாட்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள

லாம். அந்த வழியில், அவர்கள் பரலோகத்தில் இயேசுகிறிஸ்துவோடு நித்தியத்தை கழிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அல்லது ஒருவர் இந்த உலக வாழ்வில் இயேசுகிறிஸ்துவை நிராகரித்து, தங்கள் எல்லா பாவங்களையும் சுமந்துகொண்டு, எதிர் வரும் நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்துவை நீதிபதியாக எதிர்கொள்ளலாம். அந்த நாளில், நரகம் என்றும் அழைக்கப்படும் அக்கினிக் கடலுக்கு அவர்களைக் கண்டனம் செய்யும் போது, இயேசு ஒவ்வொரு பாவத்தையும் நினைவுகூருவார். அங்கே, நித்திய காலத்திற்கும் தேவனால் கைவிடப்படுவதன் அர்த்தம் என்ன என்பதை அவர்கள் அனுபவிப்பார்கள்.

நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? இயேசு கிறிஸ்து உங்கள் இரட்சகராக உங்களை இரக் கத்துடன் நினைவுகூருகிறாரா அல்லது உங்கள் பாவங்களை உங்கள் நீதிபதியாக இயேசுகிறிஸ்து நினைவுகூருவாரா?



## 5. சோர்வை தோற்கடித்தல்

நித்தியம் என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்த கத்தில், எழுத்தாளர் ஜோ ஸ்டோவெல் ஒரு உண்மைக் கதையை விவரிக்கிறார். டுவான் ஸ்காட் மற்றும் ஜேனட் வில்லிஸ் தம்பதியினர் ஒன்பது குழந்தைகளின் பெற்றோர். சிகாகோவின் தெற்குப் பகுதியில் உள்ள மவுண்ட் கிரீன்வுட் பகுதியில் பள்ளி ஆசிரியராகவும் பகுதி நேர ஊழியராகவும் டுவான் இருந்தார். அவர்கள் கர்த்தருக்கும் தங்கள் குடும்பத்துக்கும் மிகவும் அர்ப்பணிப்பு மிக்க தம்பதிகள். சுற்றியுள்ள உலகின் பேராசையால் தங்களை கெடுத்துக்கொள்ளாமல், குடும்பத்தை வளர்ப்பது மற்றும் சபையில் மந்தையை மேய்ப்பது போன்ற சில விஷயங்களுக்கு அவர்கள் மகிழ்ச்சி யுடனும் திருப்தியுடனும் தங்களை அர்ப்பணித் தார்கள்.

ஒரு நாள், ஸ்காட், ஜேனட் தம்பதியினர் தங்களுடைய ஆறு பிள்ளைகளுடன் வடக்கே மில்வாக்கிலிருந்த தங்கள் பிள்ளைகளில் ஒன்றை பார்ப்பதற்காக புதிய வேனில் ஏறினர். அவர்கள் மாநிலங்களுக்கு இடையே வடக்கு நோக்கிச் சென்றுக்கொண்டிருந்தப்போது, முன்னால் சென்றுக் கொண்டிருந்த ஒரு டிரக்கிலிருந்து பெரிய உலோகத் துண்டொன்று விழுந்து, அவர்களின் எரிபொருள் தொட்டியின் அடிப்பகுதியைத் துளைத்து, வாயுவைப் பற்றவைத்தது. உடனே தீ மளமளவென அவர்களின்

வேனில் பரவியது. ஸ்காட்டும் ஜேனட்டும் மட்டுமே உயிர் பிழைத்தனர்; தீயானது மற்ற ஆறு குழந்தை களையும் விழுங்கிவிட்டது.

இது போன்ற நிகழ்வுகள் நம்மை கேள்விகளைக் கேட்க வைக்கின்றன: அவை ஏன்? எதற்கு? தேவன் ஏன் அவர்களுக்கு குழந்தைகளைக் கொடுத்தார், பின்னர் திடீரென்று அவர்களைப் பறித்தார்? ஏன், பொறுப்பற்ற மற்றும் தவறான பெற்றோர்கள் நிறைந்த உலகில், அத்தகைய தெய்வீக பெற்றோரைக் கொண்ட ஒரு குடும்பத்தில் இது நடக்க தேவன் எப்படி அனுமதித்தார்? வெளிப்படையாகச் சொல்வதென்றால், தேவன் இப்படி நடக்க ஏன் அனுமதிக்கிறார் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். இது போன்ற ஒரு நிகழ்வு தேவன் மீது நமக்குள்ள நம்பிக்கையை சிதைத்துவிடுவதுமல்லாமல், நமது நம்பிக்கையின் அடித்தளத்தையே உலுக்குகிறது.

ஆயினும்கூட, இந்த ஒத்திசைவற்ற உலகத்தின் சூழ்நிலைகள் மத்தியிலும், பல விசுவாசிகள் தேவன் இருக்கிறார் என்றும் அவருடைய வல்லமையின் மீது அசைக்க முடியாத விசுவாசத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். தேவன் இதற்கு அப்பாற்பட்ட ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட உலகத்தை அவர்களுக்கு வாக் களித்துள்ளார். அதுதான் ஸ்காட் மற்றும் ஜேனட்டின் முன்னோக்குப் பார்வையாக இருந்தது. ஜேனட் வில்லிஸ் எரிந்து கொண்டிருந்த மினிவேனைத் திரும்பிப் பார்த்து, வருத்தத்துடன் கத்தினாள். அவளது கணவரின் தொடுதல் சற்று ஆறுதலாக இருந்தது. இந்த நிகழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு முன்னோக்குப்பார்வை அவருக்கு இருந்தது- உண்மையில் அது நாம் காணும் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டது. ஸ்காட் அவளது தோளைத் தொட்டு





இவ்வாறு கூறினார், “ஜேனட், இதற்குத்தான் நாம் ஆயத்தப்படுத்தப்பட்டோம், ஆனால் அது சற்று சீக்கிரமாக நடந்திருக்கிறது, அவர்கள் கர்த்தருடன் இருக்கிறார்கள்.”

சிகாகோ ட்ரிப்யூன் என்ற செய்திதாளின் முதல் பக்க செய்தியில், “மில்வாக்கி பகுதியில் உள்ள மருத்துவமனையில் தீக்காயங்களுடனும், கட்டுகளு டனும், அதிக உடல் வலியுடனும், புதன்கிழமை யன்று நிருபர் கூட்டத்தில் பேசிய இந்த தம்பதியினர், அவர்களின் ஒன்பது குழந்தைகளில் ஆறு பேருடைய இழப்பின் மூலம் தங்களுடைய சந்தேகத்திற்கு இடமில்லாத விசுவாசம் எவ்வாறு அவர்களைத் தாங்கினது என்பதை குறித்து அசாதாரண கருணை யையும் தைரியத்தையும் வெளிப்படுத்தினர்.” நிருபர்கள் கூட்டத்தில், ஸ்காட் அவர்கள் இவ்வாறு கூறினார், “தேவனுக்கு நோக்கங்கள் உள்ளன, அவருக்கு காரணங்கள் உள்ளன என்று எனக்குத் தெரியும்… அவர் எங்கள் மீதும் எங்கள் குடும்பத்தின் மீதும் தம்முடைய அன்பை வெளிப்படுத்தியுள்ளார். கர்த்தர் நல்லவர் என்பதில் எங்கள் மனதில் எந்த சந்தேகமும் இல்லை, எல்லாவற்றிலும் அவரை துதிக்கிறோம்.” நாம் காணும் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட ஏதோவொன்றுடன் ஸ்காட் அவர்கள் ஒரு தெளிவான தொடர்பில் இருந்தார்.

ரோமர் 8:18ஆம் வசனத்தில் பார்க்கும்போது இதேபோன்ற கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்ள அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு உதவுகிறார், “ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல வென்று எண்ணுகிறேன்.” “எண்ணுகிறேன்” என்ற வார்த்தையின் அர்த்தம் “கணக்கில் எடுத்துக்

கொள்வது" அல்லது "ஒரு பதிவேட்டில் வைத்துக் கொள்வது" என்பதாகும். "பாடுகள்" என்ற சொல், இவ்வுலகில் கிறிஸ்துவுக்காக வாழ்வதால் ஒருவர் அனுபவிக்கும் உள்ளான மற்றும் வெளிப்புற பிரச் சனைகளைக் குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பவுல் "சிந்தித்து" இந்த முடிவுக்கு வந்தார்:

**எதிர்கால மகிமையின் உறுதியானது தற்போதைய சோர்வுகளிலிருந்து நம்மை விடுவிக்கிறது.**

பவுலுக்கு பாடுகள் ஒன்றும் புதிதல்ல. சராசரி விசுவாசிகள் ஒருபோதும் சந்திக்காத கடுமையான பாடுகளை அவர் அனுபவித்தார். அவரது சொந்த வார்த்தைகளின்படி, ஒரு சிறிய பட்டியலை கவனிக்கவும்:

> "அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிக மாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்ட வன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்ட வன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்ட வன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறி யுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்ட ணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந் தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்தி





> ரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோ தரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயா சத்திலும், வருத்தத்திலும் அநேகமுறை கண் விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத் திலும் இருந்தேன். இவை முதலானவைகளை யல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?" [2 கொரிந்தியர் 11:23-29].

என்ன ஒரு பட்டியல்! ஆனாலும், அவர் முறு முறுத்ததில்லை அல்லது குறை கூறினதில்லை. எனவே, அடுத்த முறை விசுவாச வாழ்க்கை சோதனைகள் இல்லாததாக அமைய வேண்டும் என்று நினைக்கும் போது, பவுலின் பாடுகளின் பட்டியலையும் அதற்கு அவர் பதிலளித்ததையும் நினைவு கூர்வோம்.

யோபுவை ஞாபகம் இருக்கிறதா? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல் லாப்புக்கு விலகுகிற மனிதனாக யோபுவை தேவன் கூறினார் [யோபு 1:1]. ஆனாலும், யோபு சொல்ல முடியாத அளவு பாடுகளை அனுபவித்தார். சாத்தான் கூறினதுப் போன்று அவர் ஒருபோதும் தன் விசுவாசத்தை இழக்கவுமில்லை தன்னுடைய துன்பங்களுக்காக தேவனை சபிக்கவுமில்லை. பவுலைப் போலவே தன் விசுவாசத்தை கைவிடவுமில்லை [யோபு 1:11].

சோதனைகளின் நடுவில் இப்படி ஒரு நேர்மறையான பதிலைக் கொண்டிருப்பதன் ரகசியம்

என்ன? இந்த நிகழ்கால வாழ்க்கையைத் தாண்டிய ஒரு கண்ணோட்டம் அவர்களிடம் இருந்தது. யோபு, தனது பாடுகளின் தீவிரமான தருணங்களில் கூட, தன்னம்பிக்கையுடன் சொல்ல முடியும், “25 என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். 26 இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். 27 அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகின்றன!” [யோபு 19:25-27].

“பவுலே, நீ இதையெல்லாம் கடந்து செல்கிறாய்? இந்த பாடுகளும் கூட மதிப்புள்ளதா?” என்று நாம் கேட்டால், இப்படியாகத்தான் அவர் கூறுவார்: “நமக்கு வெளிப்படுத்தப்படவிருக்கும் மகிமையின் மீது நான் என் கண்களை வைத்திருக்கிறேன். அதனால்தான் இப்போது வரும் பாடுகளை மனம் தளராமல் சகித்துக்கொள்கிறேன்.” பவுல் பேசும் எதிர்கால மகிமை யாது? வரவிருக்கும் மகிமையின் ஒரு பகுதியாக வேதம் இரண்டு எதிர்கால உறுதிகளை வெளிப்படுத்துகிறது.

**1. நாம் இயேசுவைப் போல் மாற்றப்படுவோம்.**

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தைப் போன்ற புதிய மகிமையான சரீரம் நமக்கு இருக்கும். பவுல் பிலிப்பியர் 3:20-21ல் இவ்வாறு எழுதுகிறார், “20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்





கொண்டிருக்கிறோம். 21 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.”

ஒரு நாள், இந்த அழியக்கூடிய, பாவத்தால் பாதிக்கப்பட்ட, நோய்வாய்ப்பட்ட நமது சரீரம், ஒரு புதிய, அழியாத முழுமையான மற்றும் பாவமற்ற சரீரமாக மாற்றப்படும். கிறிஸ்து தம் மக்களுக்காக மீண்டும் வரும்போது அது நடக்கும். அந்த நேரத்தில், நாம் இனி பாவம் செய்ய முடியாது, எந்த நோயையும் அனுபவிக்க முடியாது. இந்த நிகழ்வை விசுவாசிகள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இறுதி மீட்பு என்று வேதம் அழைக்கிறது! ஆகவே தான், தற்காலிக பூமிக்குரிய பாடுகளின் பாதிப்பினால் விசுவாசிகள் சோர்வடைய வேண்டியதில்லை.

**2. முழு பிரபஞ்சமும் மாறும்.**

விசுவாசிகள் மட்டுமல்ல, இந்த முழு பிரபஞ்சமும் எதிர்காலத்தில் மாற்றப்படும். “நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின” என்று வெளிப்படுத்தல் 21:1 கூறுகிறது. அந்த நேரத்தில், இனி துன்பமோ துக்கமோ இருக்காது. இதற்கு அடுத்த சில வசனங்களுக்குப் பிறகு கூறப்பட்டிருக்கும் ஆறுதல் வார்த்தைகளைக் கவனியுங்கள், “அவர்களுடைய கண்ணீர்யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின.” [வெளிப்படுத்தல் 21:4].

அந்த மகிமையான எதிர்காலத்தில் மட்டுமே விசுவாசியானவர்கள் நோய், துன்பம், துக்கம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விடுபடு வார்கள். அந்த புதிய உலகில் அநீதி இருக்காது, ஏனென்றால் அது "நீதி வாசமாக இருக்கும் இடமாகும்" [2 பேதுரு 3:13]. இந்த தற்போதைய பிரபஞ்சம் தற்காலிகமானதால் தேவன் அதை அழித்து புதிய உலகமாக மாற்றும்போது, நாம் காணும் இந்த உலகம் ஒரு நாள் அக்கினிக்கு இரையாகும் [2 பேதுரு 3:7,10].

ஆகவே, எதிர்கால மகிமை என்பது கிறிஸ்துவைப் போல உருவாக்கப்படுவதும், அவரை ஆராதிப்பதும், ஒரு புதிய பிரபஞ்சத்தில் ஐக்கியம் கொள்வதும் அடங்கும், அங்கு இனி பாவம், துன்பம் மற்றும் துக்கம் இருக்காது. நித்திய மகிழ்ச்சி மட்டுமே இருக்கும்.

**இறுதி சிந்தனைகள்.**

பிரபல நாத்திகர் ஜீன்-பால் சார்த், தான் மரிப்பதற்கு சற்று முன்பு, விரக்தியின் உணர்வுகளை கடுமையாக எதிர்த்ததாகவும், "நான் நம்பிக்கையுடன் இறப்பேன் என்று எனக்குத் தெரியும்" என்று தனக்குத்தானே கூறிக்கொள்வதாகவும் அறிவித்தார். பின்னர் ஆழ்ந்த சோகத்தில், "ஆனால் நம்பிக்கைக்கு ஒரு விரக்த்தின் அடித்தளம் தேவை" என்று கூறினார்.

இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவ நம்பிக்கைக்கு தேவனுடைய வார்த்தையாகிய கன்மலை போன்ற உறுதியான அடித்தளம் உள்ளது. கிறிஸ்தவ நம்பிக்கை என்பது "லாட்டரியை வெல்வேன் என்று





நம்புகிறேன்" என்பது போன்ற நம்பிக்கை அல்ல. இது "எனக்கு நிச்சயமாக தெரியும்" என்ற வகையை சேர்ந்த நம்பிக்கை. இது "இருக்கலாம் என்று கூறுவதல்ல," ஆனால் "இருக்கும்" வகையான நம்பிக்கை.

பவுலுக்கும், யோபுக்கும், ஸ்காட் மற்றும் ஜேனட்க்கும் அந்த மாதிரியான நம்பிக்கை இருந்தது. அப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கும் எனக்கும் இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவைப் போல உருவாக்கப்படுவோம் என்றும், அவர் ஒரு புதிய பிரபஞ்சத்தைக் கொண்டு வருவார் என்றும் தேவன் வாக்குறுதி அளிக்கிறார். இந்த சத்தியங்களை நாம் தொடர்ந்து தியானிக்கும்போது, நமது விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது [ரோமர் 15:4], இதனால் நாமும் இந்த தற்போதைய வாழ்க்கையின் சோர்வை வெற்றிகரமாக வெல்ல முடியும்.

ஆனபடியால், ஒருவர் தன்னை "விசுவாசியாக" காட்டிக் கொண்டாலோ அல்லது கிறிஸ்தவ விசுவாசத்தை நிராகரித்தாலோ அவர்களின் எதிர்காலம் பயங்கரமானது. தேவனுடைய உண்மை யான பிள்ளைகளுக்கு மகிமை காத்திருக்கும் அதே வேளையில், மற்றவர்கள் அல்லது கீழ்ப்படி யாமையின் பிள்ளைகள் என்று அழைக்கப் படுபவர்களுக்கு நித்திய துன்பம் காத்திருக்கிறது [எபேசியர் 5:6]. அக்கினிக் கடலில் தேவனின் கடுமையான, இறுதியான நித்திய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ள அவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் [வெளிப்படுத்தல் 20:11-15]. அதனால்தான், அத்தகைய மனிதர்கள் தங்கள் பாவங்களை விட்டு இப்போதே கிறிஸ்துவிடம் வந்து விட வேண்டும். அப்போதுதான்

எதிர்காலத்திற்கான உறுதியான மற்றும் பிரகாசமான நம்பிக்கை இருக்க முடியும், இது தற்போதைய துன்பங்களைச் சரியாகச் சமாளிக்க ஒருவருக்கு உதவுகிறது.

விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளும் நாம் ஏன் இவ்வுலகில் பாடுகளில்லாத வாழ்க்கையை நாட வேண்டும்? ஆரோக்கியம், செல்வம் மற்றும் செழிப்பு ஆகியவற்றை ஒவ்வொரு விசுவாசியின் உரிமை களாக ஊக்குவிக்கும் தவறான போதனைகளுக்கு ஏன் பலியாக வேண்டும்? இத்தகைய தவறான போத னைகள் வேதத்தின் தெளிவான போதனைகளுக்கு முரணாக இல்லையா?

"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தி யாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படு வார்கள்." [2 தீமோத்தேயு. 3:12] என்பதை நினைவில் கொள்ளவேண்டும். தம் நாமத்தின் நிமித்தம் அவமா னங்கள், நிராகரிப்புகள் மற்றும் பிற வகையான துன்பங்களை அனுபவிப்பவர்களை "பாக்கியவான்கள்" என்று இயேசு அழைத்தார் [மத்தேயு 5:10-12]. எபிரேயர் 11:35-39ல் பட்டியலிடப்பட்டுள்ள பவுலும், யோபுவும் பிற அறியப்படாத விசுவாசி களும், தங்கள் விசுவாசத்திற்காக மெச்சப்பட்டிருந்தும், இத்தகைய துன்பங்களைச் சந்தித்திருக்கையில், பாடுகளுக்கு விதிவிலக்கானவர்கள் என்று எது நம்மை நினைக்க செய்கிறது? வெறுமனே நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோமா?

சோதனைகளுக்காக ஜெபிக்குமாறு நான் பரிந்துரைக்கவில்லை. ஆனால் பாடுகள் தவிர்க்க முடியாதது என்பதை நாம் உண்மையாக ஏற்றுக்





கொள்ள வேண்டும், ஏனென்றால் நாம் பிரச்சனைகள் நிறைந்த உலகில் வாழ்கிறோம் [யோபு 5:7; யோவான் 16:33]. தேவனுடைய பிரசன்னம் தம்முடைய பிள்ளைகளுடன் இருக்கும் அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்களிக்கிறார், [எபிரேயர் 13:5-6]. இனிமேல் இந்த உண்மைகளை நினைவில் வைத்துக் கொள்வோம்:

பாடுகள் தவிர்க்க முடியாதது, அவைகள் எதிர்காலத்தில் நமக்குக் காத்திருக்கும் கற்பனைக் கெட்டாததும் கிருபையுள்ளதுமான நன்மைகளுக்கு செலுத்த வேண்டிய ஒரு சிறிய விலையாக இருக்கிறது. நமது தற்போதைய பாடுகள் கடல் போன்ற எதிர்கால மகிமையுடன் ஒப்பிடும்போது ஒரு துளி நீர் போன்றது. இந்த உண்மைகளைத் தழுவி மகிழ்ச்சியுடன் முன்னேறுவோம்! இல்லையெனில், ஏமாற்றமும், துக்கமும் அடைவோம். தேவனோடும் , மற்றவர்களோடும் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கை யின் மீதும் கசப்பால் நிரப்பப்படுவோம்.

இன்றும் கூட சில விசுவாசிகள் ஏன் இத்தகைய நேர்மறையான சிந்தையை உடையவர்களாக இருக்கிறார்கள்? ஏனென்றால், அவர்களுக்கு பரலோகம் உண்மையானது, விசுவாசிகளுக்கு எதிர்கால மகிமையும் உண்மையானது. அதுவே அவர்களை இவ்வுலகப் பொருட்களால் மயங்கி விடாதப்படி தடுக்கிறது. இது போன்ற ஒரு பார்வையே ஸ்காட் வில்லிசை இப்படி அறிவிக்கத் தூண்டியது, "ஜேனட்டும், நானும் வாழ்க்கையைப்

பற்றிய குறுகிய பார்வையை கொண்டிருக்கவில்லை என்பதை உணருங்கள். நாங்கள் நெடிய பார்வையை கொண்டுள்ளோம், அதில் நித்திய ஜீவனும் அடங்கும்." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர்கள் தற்காலிகத்தை நித்தியத்தின் கண்ணாடிகள் மூலம் பார்த்தார்கள், அதனால்தான் அவர்கள் ஏமாற்றத்தால் நசுக்கப்படவில்லை.

ட்ரிப்யூன் செய்திதாளின் தலையங்கம் இந்த வார்த்தைகளுடன் முடித்ததில் ஆச்சரியமில்லை:

கடந்த வாரம் ஸ்காட், ஜேனட் வில்லிஸ் தம்பதியினர் சந்தித்த இழப்புக்கு இரண்டு சாத்தியமான பதில்கள் மட்டுமே உள்ளன; ஒன்று முழுமையான விரக்தி; மற்றொன்று கேள்விக்கு இடமில்லாத நம்பிக்கை. வில்லிசைப் பொறுத்தவரை, விரக்தி ஒரு விருப்பமாக இருக்கவில்லை.

அதுவே நமது கண்ணோட்டமாகவும் இருக்க வேண்டாமா?



## 6. மனநிறைவைப் பற்றிய மூன்று தவறான கருத்துக்கள்

ஒரு இளம் பெண் தன் தாயிடம், "இந்தக் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் எனனென்ன பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். ஜானிக்கு ஹாம்பர்கர் பிடிக்கும், ஜேனுக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும், வில்லிக்கு வாழைப்பழம் பிடிக்கும், அம்மாவுக்கு கோழிக்கறி பிடிக்கும்." என்றாள். அவளுடைய பட்டியலில் தான் இல்லாததால் எரிச்சல் அடைந்த தந்தை, "என்னைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே? எனக்கு என்ன பிடிக்கும்?"

என கேட்டார், அதற்கு அந்த அப்பாவி இளம் பெண், "எங்களிடம் இல்லாத அனைத்தையும் உங்களுக்கு பிடிக்கும்" என்று பதிலளித்தாள். இந்தக் கூற்றைப் பார்த்து நாம் சிரிக்கலாம் என்றாலும், நாம் நேர்மை யானவர்களாக இருக்கும் பட்சத்தில், விசுவாசிகளான நம்மில் பலரும் இந்த தந்தையை ஒத்திருப்போம். மனநிறைவு பிரச்சினை தொடர்பாக பல தவறான கருத்துக்களை நாம் கொண்டிருப்பதால் இந்த எண்ணோட்டம் உள்ளது.

இந்த தலைப்பு தொடர்பான 3 பொதுவான தவறான கருத்துகளையும் அவை ஒவ்வொன்றிற்கும் வேதத்தின் பதில்களையும் முன்னிலைப்படுத்த இந்த பதிவு முயல்கிறது.

## தவறான கருத்து # 1. மனநிறைவு அவ்வளவு பெரிய பிரச்சனையல்ல

பொதுவாக, வாழ்க்கையில் விரும்பத்தகாத சாதாரண பதில்களை கூறி அதிருப்தியை வெளிப்படுத்துகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நானும் ஒரு மனிதன் தான். நான் அங்கும் இங்கும் அலைந்தாடுகிறவன் என எண்ணிக்கொள்கிறோம்.

வேதத்தின் பதில்: எப்படியானாலும், தேவன் இந்த அதிருப்தியை ஒரு “சாதாரணமாக” கருதியிருந்தால், மனநிறைவாக இருப்பதை பற்றி பல கட்டளைகளை அவர் ஏன் கொடுக்கிறார்?

“உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்” [லூக்கா 3:14],

“உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்” [எபிரேயர் 13:5],

“பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” [லூக்கா 12:15].

விசுவாசிகளாகிய நாம், தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறுவது பாவம் என்று ஏற்றுக்கொள்கிறோம். அப்படியிருப்பதால், மனநிறைவை பின்பற்ற தவறுவதை நாம் பாவமாகக் கருத வேண்டாமா? எனவே, மனநிறைவை கொண்டிருப்பது ஒரு பெரிய விஷயமாகும், அது மறைத்து வைக்க வேண்டிய ஒன்றல்ல.

தேவன் ஏன் அதிருப்தியை பாவம் என அழைக்கிறார் என்பதை குறித்த ஆழமான பார்வை மிகவும் தெளிவாக மனதில் இரு காரணங்களை புலப்படுத்துகிறது.





a. மனநிறைவின்மை தேவனுடைய இராஜரீகத்தை குற்றம் சுமத்துகிறது. நம் வாழ்வின் சூழ்நிலைகள் மீது அதிருப்தியை வெளிப்படுத்துவது, தேவன் நமக்கு எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை குறித்து கேள்வி கேட்பதின் நுட்பமான வடிவமாகும். சிருஷ்டிகள் சிருஷ்டிகருடைய செயல்களை பாவம் என்று கூறுவதாகும்.

b. மனநிறைவின்மை தேவனுடைய நன்மையை குற்றம் சுமத்துகிறது. நம் வாழ்வில் ஏற்படும் சூழ்நிலைகளில் அதிருப்தியை வார்த்தைகளில் சொல்லாவிட்டாலும் அணுகுமுறையால் வெளிப் படுத்தும்போது, நாம் இப்படித்தான் கூறுகிறோம்: “தேவனே, இந்த குறிப்பிட்ட சூழ்நிலையில் நீர் எனக்கு நல்லவராக இருக்கவில்லை. நீர் நல்லவராகவும் அன்பாகவும் இருந்தால், ஏன் நான் விரும்புவதைக் கொடுக்கவில்லை அல்லது நான் விரும்பாததை என் வாழ்க்கையிலிருந்து நீக்கவில்லை?” சோதனைகளில் இருந்து விடுபட தேவனிடம் மன்றாடுவது பாவம் இல்லை என்றாலும், அவருடைய நன்மையை கேள்வி கேட்பது பாவமாகும்.

குறிப்பு : நாம் தேவன் விரும்புகிற அளவிற்கு அவருடைய பூரமாணபிள்ளைகள் என்ற நிலை இன்னும் வராததால் நமது ஆவிக்குரிய வாழ்வில் அதிருப்தி அடைவது நல்லது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உங்களிடம் உள்ளதைக் கொண்டு திருப்தியடையுங்கள், ஆனால் ஆவிக்குரிய வாழ்வில் ஒருபோதும் திருப்தியாக இருக்காதீர்கள். நம்மைச் சுற்றிலும் பாவம் பெருகுவதையும், இயேசு

கிறிஸ்துவின் நாமம் அவமதிக்கப்படுவதையும் பார்க்கும்போது அதிருப்தி அடைவதும் நல்லது. இந்த பகுதிகளில் அதிருப்தியை அனுபவிப்பது பாவம் அல்ல, இது கிறிஸ்தவர்களுக்கு இயற்கையான பிரதிபலிப்பாக இருக்க வேண்டும்.

**தவறான கருத்து # 2 மனநிறைவானது சூழ்நிலை களை அடிப்படையாக கொண்டது.**

எனது தற்போதைய சூழ்நிலைகள் மட்டும் மாறினால் வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எத்தனை முறை நினைத்திருக்கிறோம்? நாம் திருமணமாகாதவர்களாக இருந்தால், திருமணம் செய்து கொள்ள விரும்புகிறோம்; திருமணமானா வர்களாக இருந்தால், நாம் இன்னும் தனியாக இருந்திருந்தால் நலமாக இருக்கும் என எண்ணுகிறோம். குழந்தை இல்லாவிட்டால் குழந்தை வேண்டும் என்றும்; நமக்கு குழந்தைகள் இருந்தால், ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழுந்தையும் வேண்டும் என விரும்புகிறோம். நாம் பெற்ற குழந்தைகள், சிறந்தவர்களாக இருக்க விரும்பு கிறோம். இப்படி பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. "நான் இருக்கும் தற்போதைய நிலையை விட வேறு நிலை இருந்திருந்தால் சிறப்பாக இருக்கும்" என்பது இருதயத்தின் நிலையான கூக்குரலாகத் தெரிகிறது. ஒரு சுவாரஸ்யமான மேற்கோள் இந்த உண்மையை நன்றாக வெளிப் படுத்துகிறது, "மனிதன் ஒரு முட்டாள் என்பது மாறாத பிரமாணமாக இருக்கிறது. சூடாக இருக்கும்போது, அவன் குளிர்ச்சியை விரும்புகிறான். குளிர்ச்சியாக





இருக்கும்போது, அவன் சூடாக இருக்க விரும்பு கிறான். எப்போதும் இல்லாததையே விரும்புகிறான்." இந்த விளக்கம் நமக்கு நன்றாக புரிகிறதா?

தன் நண்பர்களுக்கு பெரிய மற்றும் ஆடம்பரமான வீடுகள் இருந்ததால், அவர்கள் மீது பொறாமை கொண்ட ஒரு மனிதனைப் பற்றிய கதை ஒன்று சொல்லப்படுகிறது. எனவே அவன் தனது வீட்டை ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனத்தாரிடம் கொடுத்தான், அதை விற்றுவிட்டு அதை விட ஒரு பெரிய வீட்டை வாங்க திட்டமிட்டான். சிறிது நேரம் கழித்து, அவன் செய்தித்தாளின் ஒரு பகுதியைப் படித்துக் கொண்டிருந்தபோது, தனக்கு சரியானதாகத் தோன்றிய ஒரு வீட்டின் விளம்பரத்தைப் பார்த்தான். அவன் உடனடியாக ரியல் எஸ்டேட் நிறுவனத்தாரை அழைத்து, "இன்றைய செய்தித்தாளில் விவரிக்கப் பட்டுள்ளதைப் போன்ற ஒரு வீட்டைத் தான் நான் தேடுகிறேன். கூடிய விரைவில் அதை வாங்க விரும்புகிறேன்!" என்று கூறினான். அதற்கு அந்த முகவர் அவனிடம் அந்த வீட்டைப் பற்றி பல கேள்விகளைக் கேட்டார், பின்னர் இவ்வாறு பதிலளித்தார், "ஆனால் ஐயா, நீங்கள் விவரிக்கும் அந்த வீடு உங்களுடையது தான்!"

வேதத்தின் பதில்: ஆதாமும் ஏவாளும் நம் நினைவிலிருக்கிறார்களா? அவர்கள் கற்பனை செய்யக்கூடிய சரியான சூழ்நிலையில் வாழ்ந்தனர், ஒரு மரத்தைத் தவிர உலகத்திலுள்ள அனைத் தையும் தங்கள் வசம் வைத்திருந்தனர் [ஆதியாகமம் 1:28, 2:15-16]. தேவன் தம்முடைய அன்பினால் அவர்கள் அனுபவிப்பதற்கு மிகவும் தாராளமாக கொடுத்திருந்தார்.

ஆயினும், சாத்தான் அவர்களை எப்படி அதிருப்தி அடையச் செய்தான் என்பதைக் கவனியுங்கள், "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" [ஆதி 3:1]. வேதத்தில் நமக்காகப் பதிவுசெய்யப்பட்ட முதல் கேள்வி சாத்தானின் வார்த்தைகளிலிருந்து வந்தது, அது தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவும், அவருடைய நற்குணத்தை சந்தேகிக்கவும் வடிவமைக்கப் பட்ட ஒரு கேள்வி.

சாத்தான் உணர்த்துவது இதுதான்: "அப்படியானால், உலகத்தில் உங்களுக்கு அனைத்தும் கொடுக்கப் படவில்லையா? தேவன் மிகவும் கஞ்சத்தனமானவர் அல்லவா? அவர் உங்களுடைய மகிழ்ச்சியின் நிறைவை கொள்ளையடிக்கவில்லையா?" அவர் களிடம் இருப்பதை விட்டுவிட்டு [அது எல்லாமே அதிகம்], அவர்களிடம் இல்லாதவற்றின் மீது கவனம் செலுத்த வைப்பதே அவனுடைய குறிக்கோளாகும் [இது ஒரே ஒரு மரத்தின் கனி மட்டுமே]. நம்மிடம் இருப்பதை விட நம்மிடம் இல்லாதவற்றில் கவனம் செலுத்துவது தான் எல்லா அதிருப்திக்கும் அடிப்படையாக இருக்கிறது!

துரதிர்ஷ்டவசமாக, ஆதாமும் ஏவாளும் சாத்தானின் வார்த்தைகளிலிருந்து வந்த இந்தப் பொய்க்கு அடிபணிந்தனர் உங்கள் சூழ்நிலைகள் மாறினால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என சாத்தான் கூறினதற்கு கீழ்படிந்தனர்! அதன் விளைவாக மகிழ்ச்சிக்கு பதிலாக, அவர்கள் துன்பத்தை கண்டனர் தேவன் வாக்களித்தது போலவே நடந்தது





பாவம் மற்றும் சாத்தானால் அளிக்கப்படும் பொய் யான வாக்குறுதிகளை விட தேவனுடைய வார்த்தை எப்போதும் மேன்மை யானது என்பதை இது நிரூபிக்கிறது.

இந்த முக்கியமான பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம். ஆதாமும் ஏவாளும் இந்த உலகத்தில் ஏறக்குறைய எல்லாவற்றையும் பெற்றிருந்தும் திருப்தியை அனுபவிக்கவில்லை, "தற்போது என்னிடம் இல்லாதவை இருந்தால் மட்டுமே நான் திருப்தி அடைவேன்" என்ற பொய் யான வாக்குறுதியை அளிக்கும் சிந்தனையிலிருந்து எச்சரிக்கையாக இருங்கள். எனவேதான் நாம் கர்த்தரிடம் "மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" என்று தொடர்ந்து மன்றாட வேண்டும் [சங் 119:37].

உண்மையான மனநிறைவு என்பது புறச் சூழ்நிலைகளில் இருந்து வருவதில்லை என்பதை நாம் உணர வேண்டும். இது தெய்வீகத்தை நமது முன்னுரிமையாகவும், நித்தியத்தை நமது முன் னோக்காகவும் கொள்வதிலிருந்து வருகிறது. "போது மென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்று 1 தீமோத்தேயு 6:6 கூறுகிறது. மேலும் ஆவிக்குரியவைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடனான உண்மையான உறவைத் தொடங்குகிறது. எனவே, நீங்கள் இன்னும் அவ்வாறு செய்யவில்லை என்றால், மனந்திரும்பு தலுடனும், விசுவாசத்துடனும் கிறிஸ்துவிடம் வாருங்கள். உங்களுக்கு எல்லாவற்றிலும் போதுமான வராக அவரைத் ஏற்றுக்கொள்ளுங்கள்.

**தவறான கருத்து # 3. விசுவாசிகளுக்கு மனநிறைவு இயற்கையாகவே வருகிறது.**

நாம் விசுவாசிகளாக மாறும்போது, உடனடியாக உலக விஷயங்களை வெறுக்க ஆரம்பித்து, கிறிஸ்துவில் திருப்தி அடைவோம். பாவமான மாம்ச இச்சைகளுக்கு இனி நாம் அடிபணிய மாட்டோம்.

வேதத்தின் பதில்: இது உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! ஆம், ஒரு விசுவாசியாக மாறுவது நம் மனநிலையில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவருகிறது. இருப் பினும், தொடர்ந்து பரிசுத்த ஆவிக்கு அடிபணிந்து, பாவ மாம்சத்தின் பசிக்கு 'இல்லை' என்று சொல்வது ஒரு நிலையான போராட்டமாக இருக்கிறது. அப் போஸ்தலனாகிய பவுலின் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்.

ரோம சிறையிலிருந்து பிலிப்பியருக்கு எழுது கையில், "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" [பிலி 4:11] என்று அவர் கூறினார். உங்களுக்கு புரிகிறதா? பவுல் திருப்தியாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதே சிந்தனையை அடுத்த வசனத்தில் அவர் மீண்டும் கூறுகிறார், "தாழ்ந்தி ருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரி பூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப் பட்டேன்." [பிலி 4:12]. இரண்டு வசனங்களில் இருமுறை, திருப்தியாக இருக்கக்கற்றுக்கொள் வதைப்பற்றி பேசுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் அற்புதமாக மனமாற்றம் அடைந்திருந்தப்போதிலும் மனநிறைவு அவருக்கு இயல்பாக வரவில்லை!





இது நமக்கு சற்று நம்பிக்கையை அளிக்கிறது. மனநிறைவு இயற்கையாக வருவதில்லை - ஆனால் அது கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. இது ஒரு செயல்முறை. மேலும், பவுலைப் போலவே நாமும், தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி, பரிசுத்த ஆவியானவரால் செயல்படுத்தப்பட்டு, நம்முடைய விடாமுயற்சியுடன் ஜெபம் செய்வதின் மூலம் திருப்தியாக இருப்பதன் ரகசியத்தைக் கற்றுக்கொள்ள தேவையான முயற்சியை மேற்கொள்ளலாம்.

பிலிப்பியர் 4:11ல் பவுல் பயன்படுத்தும் "மன நிறைவு" என்பதற்கான கிரேக்க வார்த்தை, "தன்னி றைவு" அல்லது "திருப்தி" என்பதைக் குறிக்கிறது. அவர் "மனநிறைவாக இருக்க கற்றுக்கொண்டார்" என்று குறிப்பிடுகிறார், அவருடைய காலத்து தேவனற்ற உலகம் இந்த வார்த்தையைப் இப்படியாக பயன் படுத்தியது, எந்தவொரு வெளிப்புற ஆற்றலின் உதவியும் இல்லாமல், தனது உள் மனித வலிமை யை மட்டுமே பயன்படுத்துவதன் மூலம் வாழ்க் கையின் அனைத்து அழுத்தங்களையும் அமைதியாக ஏற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்தை விவரிக் கிறது. இதற்கு நேர்மாறாக, எல்லா விசுவாசிகளும் எல்லா நேரங்களிலும் திருப்தியடைவதற்குத் தேவை யான அனைத்தும் கிறிஸ்துவிடமிருந்து வந்ததாக பவுல் தனது மனநிறைவை அடையாளம் காட்டுகிறார்.

“எத்தகைய சூழ்நிலையை எதிர்கொண்டாலும் மனநிறைவுடன் இருக்கும் இந்த ரகசியத்தை எப்படி கற்றுக்கொண்டாய்?” என்று பவுலிடம் கேட்டால், அவருடைய பதில், “எனக்கு திருப்தியை கொடுக்கும் கிறிஸ்துவிடமிருந்து எனக்குப் போதுமானது வருகிறது.” என்று கூறுவார். இதை அடுத்த வசனம் தெளிவுபடுத்துகிறது.

பிலிப்பியர் 4:13ல் உள்ள பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள், “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.” சில மொழிபெயர்ப்புகள் அதை, “கிறிஸ்து மூலமாகவோ அல்லது என்னைப் பலப்படுத்துகிற அவர் மூலமாகவோ நான் எல்லா வற்றையும் செய்ய முடியும்” என்று பொருள் படுத்துகிறது. துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், தாங்கள் நினைத்த எதையும் ஒருவர் செய்ய முடியும் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட வசனங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த வசனம் அப்படி போதிக்கவே இல்லை. பிலிப்பியர் 4:10-19 ஆகிய வசனங்களின் முழுச் சூழலும் மனநிறைவைப் பற்றியது.

எந்தச் சூழ்நிலையிலும் மனநிறைவுடன் வாழ்வதற்கான அவரது ரகசியம், எல்லா நேரங் களிலும் திருப்தியாக இருப்பதற்குத் தேவையான அனைத்தையும் வழங்கும் கிறிஸ்துவிடமிருந்து வந்து, அவர் போதுமானவராக இருந்ததை அடிப்படை யாகக் கொண்டது என்று பவுல் கூறுகிறார்.





எனவே, கிறிஸ்தவ புரிந்துக்கொள்ளுதலில், “திருப்தி அடைவது” என்பது கிறிஸ்துவைக் கொண்டி ருப்பதால் மட்டுமே முற்றிலும் திருப்தி அடை வதாகும். நாம் மனநிறைவை அடைய விரும்பினால் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மிடம் கிறிஸ்து இருக்கிறார் இம்மைக்குரிய ஜீவனுக்கும் மறுமைக்குரிய ஜீவனுக்கும் உரிய எல்லாம் நம்மிடம் இருக்கிறது. பொருள் சார்ந்த விஷயங்கள் ஏராளமாக இருந்தாலும் கூட நம்மிடம் கிறிஸ்து இல்லையென்றால் நமக்கு எதுவும் இல்லை.

**இறுதி சிந்தனைகள்.**

விசுவாசிகளாகிய நாம், நரகத்தைத் தவிர வேறு எதற்கும் தகுதியில்லாத நம்மைப் போன்ற பாவிகளை இரட்சித்தற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இருப்பினும், இப்படிப்பட்ட ஜெபத்தை முடிப்பதற்கு முன்பே, நம் வாழ்வில் தவறு என்று நினைக்கும் விஷயங்களை அவர் எவ்வாறு சரிசெய்ய வேண்டும் என்று தேவனுக்கு நாம் கூறுகிறோம். நம் வாழ்வில் ஏதேனும் தீமை நடந்தால், “நான் தேவனுக்கு உண்மையாக இருந்தும் எனக்கு இது எப்படி நேர்ந்தது? அதிக பாவம் செய்கிற மற்றவர்கள் என்னை விட அதிக நன்மைகளை ஏன் பெறுகிறார்கள்? மேலும் நான் ஏன் பிரச்சனைகளில் அல்லது நிறைவேறாத கனவுகளில் சிக்கிக் கொள்கிறேன்?” என்று நாம் நினைக்கிறோம், எந்தவொரு நன்மையையும் பெறத் தகுதியற்ற பாவிகள் என்று நாம் கூறினாலும், சில உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஒரு போக்கு இருக்கலாம். நம்மிடம் எவ்வளவு மாய்மாலம் உள்ளது என்பதை நம்மால் பார்க்க முடிகிறதா?

1 தீமோத்தேயு 6:8, இவ்வாறு கூறுகிறது, “உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.” பிலிப்பியர் 4:19, இவ்வாறு கூறுகிறது, “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் [நம்முடைய தேவைகளை அல்லது கோரிக்கைகளை அல்ல] கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். என் தேவன் கிறிஸ்து இயேசு வுக்குள் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி உங்கள் தேவைகளையெல்லாம் நிறை வேற்றுவார்” என்பதை இந்த வசனங்களிலிருந்து நாம் முடிவு செய்யலாம். நாம் எந்த நன்மைக்கும் தகுதியற்ற வர்களாக இருந்தாலும் தேவன் எப்போதும் நம் தேவைகள் அனைத்தையும் வழங்குகிறார் என்ற நிலையான நினைவூட்டலுடன் வாழ்க்கையைப் பார்ப்பது நாம் திருப்தியாக இருக்க உதவும். அத்தகைய பார்வை நமது பெருமையை நசுக்க உதவுகிறது [இது எப்போதும் நல்ல விஷயம்].

அன்புள்ள விசுவாசிகளே, ஒருவேளை நீங்கள் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் குணமடையாமல் இருக்கலாம். நீங்கள் பொருளா தாரத்தில் ஏழ்மையானவராக, வாழ்க்கையில் ஒருபோதும் முன்னேறாமல் இருக்கலாம். நீங்கள் திருமணமாகாமல், வாழ்நாள் முழுவதும் தனிமை யில் இருக்கலாம். நீங்கள் நோய்வாய்ப்பட்ட குழந்தை யின் பெற்றோராக, உங்கள் குழந்தையை வாழ்நாள் முழுவதும் பராமரிப்பதை எதிர்கொண்டிருக்கலாம். உங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் உங்களை





ஒருபோதும் நேசிக்காத ஒரு கடினமான சூழலில் இருக்கலாம். அதையெல்லாம் மீறி, “ஆண்டவரே, நீங்கள் எனக்கு எதைக் கொடுத்தீர்களோ அல்லது எதைத் தடுத்தீர்களோ, அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு முழுமையாக திருப்தியடைய நான் ஆயத்தமாக இருக்கிறேன்” என்று நீங்கள் சொல்ல ஆயத்தமா? அதிருப்தியால் உம்மை துக்கப்படுத்த நான் விரும்பவில்லை. தயவுசெய்து எனக்கு உதவும், நீர் என்னை அன்புடன் வைத்த எல்லா சூழ்நிலை களிலும் உம் நாமம் மகிமைப்பட்டது.” அதுவே உண்மையான மனநிறைவின் சாராம்சம்!

வாழ்வில் நமக்கு வேண்டியதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்வோம். நம் வாழ்வில் உணரப்படும் அனைத்து எதிர்மறைகளையும் தொடர்ந்து ஒத்திகை பார்ப்பது அதிருப்தியின் தீயை எரியூட்ட மட்டுமே உதவும். சில சமயங்களில் நாம் நமது ஆசீர்வாதங்களை எண்ண மறந்து பிரச்சனை களை எண்ணிப்பார்ப்பதில் மிகவும் பிஸியாக இருக்கிறோம். அதிருப்தியின் உணர்வைக் கொன்று, மனநிறைவின் உணர்வை வளர்ப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று, பிலிப்பியர் 4:8ன் கொள்கையைப் பயன்படுத்துவதாகும்: “கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெ வைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.”

இயேசுகிறிஸ்துவுடனான தனது உறவையும், உண்மை, ஒழுக்கம், நீதி மற்றும் பரிசுத்தம் என வேதம் வரையறுக்கும் பண்புகளை பற்றி தொடர்ந்து சிந்திக்கும் விசுவாசி உண்மையான மனநிறைவையும் ஆத்துமாவுக்கு சமாதானத்தை வழங்கும் தேவனுடைய பிரசன்னத்தையும் அனுபவிப்பான் [பிலி 4:7,9].

நம் வாழ்வில் வீழ்ச்சிக்காக தேவன் ஒருபோதும் எதையும் செய்யமாட்டார் அல்லது அனுமதிக்க மாட்டார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது எப்போதும் அவருடைய மகிமைக் காகவும், நமது இறுதி நன்மைக்காகவும் செய்கிறார். ஆம், வாழ்க்கையின் இரகசியங்களை நாம் அடிக்கடி புரிந்து கொள்ளமாட்டோம், உண்மையில், நம் தேவன் நம் வாழ்வின் அனைத்து விவகாரங்களின் மீதும் இராஜரீகம் கொண்டவர் என்பதையும், அவர் மிகவும் நல்ல தேவன் என்பதையும் நாம் உணர வேண்டும், நமக்கு எது தேவையில்லை, நமக்கு எது சிறந்தது என்பதை அவர் அறிவார். நாம் வெறுமனே அவரில் இளைப்பாறினால் போதுமானது. இந்த உண்மைகளை நாம் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டால், நம் இருதயத்தின் நிலையை கற்பனை செய்துபாருங்கள் அது எப்போதும் திருப்தி உணர் வோடு இருக்கும்!

எபேசியர் 1:3 இவ்வாறு கூறுகிறது, “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.” கொலோசெயர் 2:10 இவ்வாறு கூறுகிறது, “மேலும்





சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.” நாம் எப்படி இருக் கிறோம் அல்லது நம்மிடம் என்ன இருக்கிறது அல்லது இல்லை என்பதைப் பற்றி உலகம் என்ன கூறினாலும், கிறிஸ்துவுடனான நமது உறவின் விளைவாக நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் பரிபூரணமானவர்கள் என்றும் தேவன் கூறுகிறார். நம்மிடம் இப்போது எதுவும் இல்லை, ஆனால் எதிர்காலத்தில் எதற்கும் குறைவுபடாது. தேவன் “உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்து வந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்.” [ஏசாயா 46:4] என்று தேவன் நமக்கு வாக்களிக்கிறார். இத்தகைய அழகான உறுதிமொழிகள் மூலம், “கர்த்தர் என் மேய்ப்பராக இருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்” [சங்கீதம் 23:1] என்று எப்போதும் மகிழ்ச்சியுடன் கூற வேண்டும் அல்லவா?

## 7. தேவனுக்காக காத்திருத்தல்

தேவனுக்காக காத்திருத்தல்“தேவன் தம்முடைய நோக்கங்களை நமது வாழ்க்கையில் நிறைவேற்று வதற்காகக் காத்துக்கொண்டிருப்பதே நாம் எதிர் கொள்ளும் மிகப்பெரிய பிரச்சனையாகும்; தேவனுக்கு காத்திருப்பதை விட ஒரு தவறான காரியத்தைச் செய்வதற்கு நாம் காத்திருப்பதில்லை” என்ற வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை!

கிறிஸ்தவ வாழ்க்கையின் உண்மைகளில் ஒன்று யாதெனில், நம்மில் எவருக்கும் காத்திருப்பது இயற்கையான விருப்பமாக இருப்பதில்லை. நாம் எல்லாவற்றையும் பெற விரும்புகிறோம். ஆனால், உடனடியாக அதைப் பெற விரும்புகிறோம்! காத்திருக்கத் தவறியதற்காக வேதனையான விளைவுகளை அடிக்கடி அனுபவித்தாலும், நாம் இன்னமும் அந்த பாவத்தைச் செய்ய முனைகிறோம். அனைத்தையும் அறிந்த தேவன் நம்முடைய இந்தப் போக்கையும் முழுமையாக அறிந்திருக்கிறார். அதனால்தான், நாம் அவருக்காகக் காத்திருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அவசரப்பட கூடாது என்பதை பற்றியும் அவர் தமது வார்த்தையில் அடிக்கடி கூறியிருக்கிறார்.

## தேவனுக்கு காத்திருத்தல் என்றால் என்ன?

இது சோம்பேறியாக இருப்பது அல்லது செயலற்று இருப்பது என்று அர்த்தமல்ல. மாறாக, “தேவன் மூலமாக மட்டுமே நமக்கு எல்லாம் கிடைக்கப்பெறும் என்று தீவிரமாக நம்புதல்” என்பது இதன் பொருள். நமது ஞானம், செல்வம், பலம், மனிதர்களுடனான தொடர்புகள் ஆகியவற்றை நம்புவதிலிருந்து தேவனை மட்டுமே நம்புவதற்கு மாறுவதாகும்.

ஒரு சூழ்நிலையை மாற்றுவதற்கு முயற்சிப்பது அல்லது காத்திருப்பது மிக நீண்டது என்று முணுமுணுப்பது சமாதானத்தை இழக்கச் செய்து, மிகுந்த துயரத்தைத் தவிர வேறு எதையும் கொண்டு வராது. ஜார்ஜ் மெக்டொனால்ட் இவ்வாறு சரியாக கூறியிருக்கிறார், “தேவன் இல்லாமல் மனிதன் எதைச் செய்தாலும், அவன் மோசமாகத் தோல்வியடைய வேண்டும் அல்லது இன்னும் மோசமான வெற்றியை பெற வேண்டும்.”

வெய்ன் ஸ்டைல்ஸ் என்பவர் “தேவனுக்காக காத்திருத்தல்” என்ற அவரது சிறந்த புத்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

> நாம் முதலில் மகிழ்ச்சியை விரும்புகிறோம்; ஆனால்; தேவன் பரிசுத்தத்தை விரும்புகிறார். நாம் இன்பத்தை விரும்புகிறோம்; தேவன் தூய்மையை விரும்புகிறார். சிகப்பு சிக்னலில் காத்திருக்க வேண்டிய சூழலில், நாம் அந்த சிக்னலைத் தவிர்த்தால், சில சமயங்களில் விபத்தில் சிக்கக்கூடும். காத்திருப்பது நேரத்தை வீணடிப்பதாகத் தோன்றுவதால், நாம் தேவனுடைய நேரத்திற்கு முன்பாக காரியங்களை நடப்பித்தால், காயப்படுவோம். காத்திருப்பு என்பது சூழ்நிலைகளை மாற்றுவதை விட தேவன் நம்மை மாற்றுகிற ஒரு செயல் முறையாகும்.





ஒருவேளை, கர்த்தருக்காகக் காத்திருப்பதன் விளைவாக நீங்கள் சோர்வாகவும் களைப்பாகவும் காணப்படலாம். “இது எவ்வளவு காலம், ஆண்டவரே?” என்பது உங்கள் நிலையான அழுகையாக இருக்கலாம். நீங்கள் கிட்டத்தட்ட இந்த வாழ்க்கை வேண்டாம் என்ற கைவிடப்பட்ட கட்டத்திலும் இருக்கலாம்! ஏசாயா 64:4-5ஐ மையமாகக் கொண்டு கர்த்தருக்காகக் காத்திருப்பதன் விளைவாக வரும் ஆசீர்வாதங்களை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

> “4 தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்ற முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை. 5 மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்.”

தேவன் தமக்காகக் காத்திருப்பவர்களின் சார்பாக [4b] அவர்களுக்கு உதவ வருவதன் மூலம் [5a] செயல்படுகிறார் என்பதை இந்தப் பகுதி தெளிவாகக் கூறுகிறது. எவ்வாறாயினும், தேவன் நம் சார்பாக செயல்பட விரும்பினால், கீழே பட்டியலிடப்பட்டுள்ள 2 குணாதிசயங்கள் நம் வாழ்க்கையை அடையாளப் படுத்த வேண்டும் என்றும் அது கூறுகிறது.

1.தேவனின் குணாதிசயத்தைப் பற்றிய உயர்வான பார்வையை நாம் கொண்டிருக்க வேண்டும் [4a]

2.நாம் ஒரு பரிசுத்தமான வாழ்க்கையைத் தொடர வேண்டும் [5a]

இதில் நமக்கு புதிய கருத்துக்கள் எதுவும் காணப்படாவிட்டாலும், கர்த்தருக்காகக் காத்திருக்க நம்மை ஊக்குவிக்கும் ஒரு நல்ல நினைவூட்டல் இது.

**1. தேவனின் குணாதிசயத்தை நாம் உயர்வாகக் கருத வேண்டும் [4a]**

ஏசாயா 64:4ன் முதல் பகுதி என்ன கூறுகிறது என்பதைக் கவனியுங்கள், "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றமுதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை." ஏசாயா தேவனைப் பற்றிய உயர்ந்த பார்வையைக் கொண்டிருந்தார். இந்த வசனத்திற்கு முன், ஏசாயா கடந்த காலத்தில் நிகழ்ந்த தேவனின் செயல்களைக் குறிப்பிட்டார், குறிப்பாக மலைகளை நடுங்கச் செய்தார் என்று கூறுகிறார் [ஏசாயா 64:3]. தேவன் பத்து கட்டளைகளைக் கொடுத்தபோது சீனாய் மலை குலுங்கியதை இது குறிக்கிறது. வேதம் கூறும் தேவனை ஏசாயா வல்லமைமிக்க தேவனாகக் காண்கிறார், அவரைப் போல் யாரும் இல்லையென குறிப்பிடுகிறார். இந்த தேவன் தம்முடைய மக்களிடம் அன்பும் இரக்கமும் கொண்டவர் என்பதையும் அவர் அறிந்திருந்தார் [யாத்திராகமம் 34:6]. மேலும், தேவனின் குணாதிசயத்தைப் பற்றிய உயர்ந்த பார்வையை அவர் கொண்டிருந்ததால், தேவன் தமது மக்களை சந்திப்பார் என்று அவர் நம்பினார்.





ஏசாயாவைப் போல் அல்லாமல், சிலுவையின் இந்தப் பக்கத்தில் வாழும் நாமும் அதே போன்று அல்லது அதைவிட அதிக நம்பிக்கையாக இருக்க வேண்டும். இயேசுவின் மூலம், தேவனின் குணாதிசயத்தைப் பற்றிய தெளிவான சித்திரம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய குணாதிசயத்தைப் பற்றிய புரிதலானது, தெய்வ நம்பிக்கையுடன் காத்திருக்கும்படி நம்மை ஊக்குவிக்க வேண்டும். எனவே, தேவனின் குணாதிசயங்களை பிரதிபலிப்பதன் மூலம் அவருடைய குணாதிசயத்தைப் பற்றிய உயர்ந்த பார்வையை வளர்ப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்தக்கடவோம்.

**2. நாம் பரிசுத்தமான வாழ்க்கையைத் தொடர வேண்டும் [5a]**

ஏசாயா 64:5ன் முதல் பகுதி, "மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழி களில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்" என்று கூறுகிறது. "மகிழ்ச்சியுடன் நீதியை செய்கிறவர்கள், [தேவனின்] வழிகளை நினைவில் கொள்பவர்களுக்கு" உதவ தேவன் வருகிறார் என்ப தைக் கவனியுங்கள். மகிழ்ச்சியான இருதயத்துடன் பரிசுத்த வாழ்க்கையைத் தொடரும் மக்கள் தேவனின் உதவியைப் பெறுவார்கள். அவருடைய குணாதி சயங்களில் நம்பிக்கையுடன் அவரது கட்டளை களுக்கு அடிபணிவது அவருக்கு காத்திருப்பதன் ஒரு பகுதியாக கைகோர்த்துச் செல்கின்றன.

ஏசாயாவின் நாளில் வாழ்ந்த மக்கள் தேவனின் விடுதலையை அனுபவிக்காததற்குக் காரணம், அவர்கள் பாவத்தில் வாழ்ந்தார்கள், “நாங்களோ, அவைகளுக்கு விரோதமாக எப்பொழுதும் பாவஞ் செய்தபடியினாலே, தேவரீர் கடுங்கோபங்கொண்டீர்; இன்னமும் தப்பியிருக்கிறோம்!” [ஏசாயா 64:5] கூடுதலாக, அவர்கள் தேவனுடைய நாமத்தை கூப்பிடவுமில்லை [ஏசாயா 64:7]. அவர்களுக்கு ஜெப வாழ்க்கையும் இல்லை. அவர்கள் ஜெபித்து உபவாசம் இருந்தபோதும், அது ஒரு வெளிப்புறச் சடங்காக மட்டுமே இருந்தது. தேவன் அத்தகைய மாய் மாலத்தை நிராகரித்தார் [ஏசாயா 58]. பாவமானது அவர்கள் சார்பாக தேவனை செயல்படவிடாமல் தடுத்தது “உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது” [ஏசாயா 59:2]. அதே போல நீங்களும் நானும் பாவத்தில் வாழ்ந்தால் தேவன் நம் சார்பாக செயல்படுவார் என்று எதிர் பார்க்க முடியாது. பாவம் தேவனின் ஆசீர்வாதத்தை எப்போதும் தடுக்கிறது! இருப்பினும், “நாம் பரிசுத்தத்தை நாடினால், அவர் மனமகிழ்ச்சியுடன் நீதிமான்களுக்கு உதவுவார்” என்று நாம் உறுதியாக நம்பலாம். அதனால் தான் நாம் பரிசுத்தத்தைத் தொடர வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அதை நோக்கித்தான் நாம் செல்கிறோம். நாம் தேவனுக்காகக் காத்திருக்கும்போது அவர் நம் சார்பாகச் செயல்பட வேண்டுமென்றால், அவருடைய குணத்தைப் பற்றிய உயர்வான பார்வையை நாம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் பரிசுத்தத்தைத் தொடர வேண்டும்.





## இறுதி சிந்தனைகள்.

கர்த்தருக்காகக் காத்திருக்கும்போது நாம் அடிக்கடி சோர்வடைகிறோம். நாம் அவரை சந்தேகிக்க ஆரம்பிக்கிறோம். நாம் விரும்பியபடி காரியங்கள் எதுவும் நடக்காததால் கோபமும் எரிச்சலும் அடைகிறோம்! நாம் மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படவும் கூடும். துன்மார்க்கர் செழிப் பதையும் நீதிமான்கள் துன்பப்படுவதையும் கண்ட ஆசாப் அதைத்தான் செய்தார் [சங்கீதம் 73]. நீதியுள்ள தேவன் இராஜரீகம் செய்கிறார் என்பதை மறந்துவிடுவது எளிது! நாம் மிகவும் சோம்பேறியாக கூட ஆகலாம். “தேவனைச் சேவிப்பதால் என்ன பிரயோஜனம்? அவர் என்னைப் பற்றி கவலைப்பட வில்லை, நான் இவ்வளவு காலமாக காத்திருந்தேன், அவர் வரவில்லை, ஏன் அவருக்கு சேவை செய்ய வேண்டும்?” போன்ற எண்ணங்கள் நம்மை கட்டுப்படுத்த ஆரம்பிக்கலாம்.

நாம் அவருக்காகக் காத்திருக்கும் போதும் தேவன் செயல்படுகிறார் என்பதை மறந்து விடுகிறோம். அவர் நம் குணத்தை வடிவழைக்கிறார். நாம் மனந்திரும்பி அவற்றை விட்டு விலகும்படியாக அவர் நம் இருதயத்தின் விக்கிரகங்களை வெளியரங்கப்படுத்து கிறார். அவர் நம்மில் பொறுமை, சகிப்புத் தன்மை, பணிவு மற்றும் இரக்கத்தை வளர்த்து வருகிறார், அதனால் நாம் மற்றவர்களின் வலி மற்றும் போராட்டங்களுக்கு உணர்திறன் உடையவர் களாக அவர்களுக்கு திறம்பட ஊழியம் செய்ய முடிகிறது.

கூடுதலாக, தேவனுக்கு காத்திருக்கும் போது நம்

வாழ்வின் மீது அவருடைய இராஜரீகத்தை ஒப்புக்கொள்ள அவர் நமக்குக் கற்பிக்கிறார். அவர் குயவர், நாம் களிமண் என்று நமக்கு எடுத்துரைக் கிறார். அவர் அனைவரையும் ஆள்பவர். அவர் விரும்பியதை, எப்படி விரும்புகிறாரோ அப்படி செய்கிறார். சுய நிகழ்ச்சி நிரலின்படி செய்யுமாறு யாரும் அவரை வற்புறுத்த முடியாது. இந்த சத்தியங்களை நாம் முழு மனதுடன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

ஜான் பைபர் இவ்வாறு சரியாக கூறியிருக்கிறார், “தமக்காகக் காத்திருப்பவர்களுக்காக தேவன் கிரியைச் செய்வதன் மூலம் தம்மை உயர்த்திக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.” வாரன் வியர்ஸ்பே, “தேவன் அவசரத்தில் இல்லை” என்ற புத்தகத்தில், “நீங்களும் நானும் செய்யக்கூடிய சிறந்த விஷயம் என்னவென்றால் நம் கைக்கடிகாரங்கள் மற்றும் நாட்காட்டிகளைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, தேவனின் முகத்தை விசுவாசத்துடன் பார்த்து, அவர் வழியில், அவருடைய காலத்தில் செயல்பட அவரை அனுமதிக்க வேண்டும்.”

அடுத்தப்படியாக, காத்திருப்பு என்பது தெய்வபக்தி, முதிர்ச்சி மற்றும் உண்மையான ஆவிக்குரிய வாழ்வின் சிறந்த ஆசிரியராகவும் பயிற்சியாள ராகவும் இருக்கலாம். எனவே, நாம் எவ்வளவு காலம் காத்திருந்தோம் என்பதைத் திரும்பிப் பார்க்க வேண்டாம் அல்லது எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியிருக்கும் என்று முன்னோக்கிப் பார்க்க வேண்டாம். எரிச்சல், கோபம், ஊக்கம், அல்லது பயம் ஆகியவற்றை அடைய வேண்டாம், அதன் மூலம் நமது சமாதானத்தையும், நம்மைச் சுற்றியுள்ள மக்களின் சமாதானத்தையும் கெடுத்துக் கொள்ள





வேண்டாம்-நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு எதிர் மறையான சாட்சியத்தைக் காட்ட வேண்டாம்.

நமக்குச் சாதகமாக, வேகமாகச் செயல்பட்டால் தான் தேவன் நல்லவரா?

பதில் 'ஆம்' என்றால், நாம் தேவனை ஆளுகை செய்பவராக அனுமதிக்காமல், அவர் விரும்பியபடி நம்மை வடிவமைக்க அனுமதிக்காமல், நாம் விரும்பு வதைப் பெற தேவனைப்பயன்படுத்துகிறோம் என்பதை இது வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்ட பாவ மனப்பான்மைக்கு நாம் வருந்த வேண்டும். அவருக்குப் பிரியமான விதத்தில் காத்திருப்பதற்கு தேவையான பலத்திற்காக அவர் மீது சார்ந்திருப் போம். நாளை தினத்தைப் பற்றி கவலைப்பட தேவை யில்லை. அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் [மத்தேயு 6:34]. இன்றைக்கு நாம் காத்திருக்க தேவன் பலத்தையும் கிருபையையும் தருகிறார். நாளை வந்தால் அது இன்று என்றே மாறிவிடும், அந்த நாளுக்கு அவருடைய கிருபை போதுமானதாக இருக்கும். 'இல்லை' என்ற பதிலில் கூட இன்னமும் தேவன் நம் நன்மைக்காகவும் அவரது இறுதி மகிமைக்காகவும் நம் சார்பாக செயல்படுகிறார் என்று நம்ப கற்றுக்கொள்ளலாம்.

எனவே, வேதம் கூறும் தேவனுக்காக காத்திருக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இந்த அற்புதமான “தேவன்” வேறு யாரையும் போலல் லாமல் “தமக்காகக் காத்திருப்பவர்களின் சார்பாகச் செயல்படுகிறார்.” அவர் உண்மையில் “நன்மையைச் சந்தோஷமாகச் செய்கிறவர்களுக்கும், [அவருடைய] வழிகளை நினைவுகூருகிறவர் களுக்கும் உதவி செய்கிறார்.”

## 8. துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்

துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு விசுவாசியான அமெரிக்க இளம் பெண் ஒருத்தி ஈராக்கில் படுகொலை செய்யப்பட்டாள். அவள் செய்த குற்றமென்ன? அங்குள்ள அகதிகளுக்கு சுத்தமான தண்ணீரை கொடுத்து உதவ தான் அங்கு சென்றாள். ஆச்சரியப் படும் விதமாக, ஒருவேளை அவள் கொல்லப்பட்டால் தனது சபை படிக்கும்படி ஒரு கடிதம் எழுதியி ருந்தாள். அதில் "தேவன் அழைக்கும்போது, எனக்கு எந்த வருத்தமும் இல்லை, நான் ஒரு இடத்தில் இருக்கும்படிக்கு அழைக்கப்படவில்லை, மாறாக, அவரிடம் இருக்க அழைக்கப்பட்டேன். இதற்கு கீழ்ப்படிவதே என் நோக்கமாக இருந்தது, துன்பப் படுவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான், அவருடைய மகிமை என் வெகுமதியாக இருந்தது. அவருடைய மகிமையே என் வெகுமதியாக இருக்கிறது." என்று எழுதப்பட்டிருந்தது

அவள் தனது நல்லடக்கத்தைக் குறித்து தனது போதகருக்கு இந்த வார்த்தைகளை எழுதினார்: தைரியமாக இருங்கள், ஜீவனைக் காக்கும், வாழ்க்கையை மாற்றும், நித்திய நற்செய்தியை தொடர்ந்து பிரசங்கியுங்கள். நம்முடைய பிதாவுக்கு மகிமையையும் கனத்தையும் கொடுங்கள்.

2 கொரிந்தியர் 15:5ஆம் வசனம் உட்பட, தனக்குப் பிடித்த சில வேதாகமப் பகுதிகளை அவள் பட்டியலிட்டாள், அதில், "பிழைத்திருக்கிறவர்கள் இனித்தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக் காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத் திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தா ரென்றும் நிதானிக்கிறோம்" என்று கூறுகிறது. மற்றொன்று ரோமர் 15:20, "மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள், காண்பார் களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்து கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே" என்று கூறுகிறது. முடிவில், "இயேசுவை அறிந்து அவருக்குச் சேவை செய்வதில் உள்ள மகிழ்ச்சியை போன்று வேறொரு மகிழ்ச்சியில்லை" என்று எழுதியிருந்தாள்.

அவருடைய மகிமையே என் வெகுமதி! இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவருக்கு சேவை செய்வதிலுள்ள மகிழ்ச்சியைப் போன்று, வேறு எதிலும் மகிழ்ச்சி கிடையாது! இந்த கடைசி பாக்கியத்தின் சாராம்சத்தை இந்த பெண்மணி புரிந்துகொண்டாள் என்பதை அந்த வார்த்தைகள் வெளிப்படுத்துகிறதல்லவா? இதன் விளைவாக, இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள பல சீஷர் களைப்போலவே, அவளும் தனது பூமிக்குரிய வாழ்க்கையை இழந்தாலும், நித்திய வாழ்க்கையைப் பெற்றாள். அவள் இப்போது, தேவனோடு இருப்பதன் மகிழ்ச்சியும், அவரை நித்தியமாக வணங்கு வதுமாகிய தன்னுடைய வெகுமதியைப் பெற்றி ருக்கிறாள்.





**துன்பத்தின் யதார்த்தம்.**

இந்த வசனங்களில், கர்த்தராகிய இயேசு அவருடைய கட்டளைகளின்படி வாழும்போது நாம் துன்புறுத்தலைச் சந்திப்போம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். இச்சூழலில், இதுவரை பாக்கியங் களில் விவரிக்கப்பட்டுள்ள "எதிர்-கலாச்சார வாழ்க் கையை வாழ்வதால் நாம் வாழ்வதால் நிராகரிப்பை எதிர்கொள்வோம். இயேசுகிறிஸ்து "ஒருவேளை", "துன்பப்படுவீர்களானால்" என்று கூறவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். மக்கள் "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்லும்போது" என்று கூறுகிறார் [மத்தேயு 5:11]. அவரைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் அவருடைய கட்டளைகளை நிறை வேற்றியதற்காக பின்னடைவைச் சந்திப்பதற்கான காலத்தைக் குறிக்கிறது. ஒரு மனிதன் எங்கு வாழ்கிறார் அல்லது எதிர்கொள்ளும் தனித்துவமான சூழ்நிலைகளைப் பொறுத்து பின்னடைவின் அளவு வேறுபடலாம், ஆனால் துன்புறுத்தலின் உண்மை இங்கே வலியுறுத்தப்படுகிறது.

ஆக மொத்தம், நாம் அவருடைய கட்டளைகளைப் பின்பற்றும்போது, உலகமும், சாத்தானும் நம்மைப் பின்தொடர்ந்து வலியை உண்டாக்குவார்கள் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். துன்பப்படுவது ஒரு இனிமையான தலைப்பு அல்ல. ஆனால், இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்ற முயலும் அனைவருக்கும் இது இன்னும் முக்கியமான தலைப் பாகவே இருக்கிறது. ஏன்? ஏனெனில் இயேசுகிறிஸ்து, அடிக்கடி தமது ஊழியத்தில் நேர்மையுடன், தம்மைப் பின்பற்றுபவர்கள் எதிர்கொள்ளும் துன்பப்படுதலின்

யதார்த்தத்தைப் பற்றி பேசினார். அவரைப் பின் தொடர்வதற்கு என்ன விலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அதில் இங்கே சில உதாரணங்கள் கொடுக்கப் படுகின்றது.

> மத்தேயு 10:22 "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்..."

> மாற்கு 8:34 "...ஒருவன் என் பின்னே வரவிரும் பினால், அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்."

> லூக்கா 14:27 "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயி ருக்கமாட்டான்."

> யோவான் 15:20 "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங் கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத் தினதுண் டானால், உங்களையும், துன்பப்படுத்து வார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக் கொண்டதுண் டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளு வார்கள்."

எனவே, துன்பப்படுதலைப் பற்றி இயேசுகிறிஸ்து மீண்டும் மீண்டும் எப்படிப் பேசினார் என்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம், ஏனெனில் அது ஒரு முக்கியமான விஷயமாகும்.

ஆனால் இந்த விஷயத்தை இயேசுகிறிஸ்து மட்டும் முக்கியமாகக் கருதவில்லை. அப்போஸ் தலர்களும் கூட முக்கியப்படுத்தினார்கள்!





> அப்போஸ்தலர் 14:22 "நாம் அநேக உபத்திரவங் களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்."

> 2 தீமோத்தேயு 3:12 "அன்றியும் கிறிஸ்து இயேசு வுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."

> 1 பேதுரு 4:12 "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்..."

வெளிப்படுத்தல் புத்தகத்தில் கூட, அந்திக்கிறிஸ்து அதிகாரத்திற்கு வரும்போது, விசுவாசிகள் தங்கள் விசுவாசத்திற்காக மிகப்பெரிய துன்பத்தை அனுபவிப் பார்கள் என்று நமக்குச் சொல்லும் யோவானின் வார்த்தைகளைப் படிக்கிறோம்.

> வெளிப்படுத்தல் 13:10 "சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தி னாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல் லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறு மையும் விசுவாசமும் இதிலே விளங்கும்."

**துன்பத்திற்கான காரணம்.**

"துன்பத்திற்கு ஆளாக நேரிடும்" என்று கர்த்தர் போதிப்பது மட்டுமின்றி, இந்த துன்பத்திற்கான காரணத்தையும் கூறுகிறார். வசனம் 10ல் கவனிக்கவும், அவர் "நீதியின் காரணமாக துன்புறுத்தப்படுவதை" பற்றி பேசுகிறார். வசனம் 11ன் கடைசிப் பகுதியில், "என்னால்" துன்பப்படுவதைப் பற்றி பேசுகிறார். எனவே, "நீதி" என்பது இயேசு

கிறிஸ்துவுக்காக வாழ்வதையும், அவருடைய கட்டளைகளைப் பின்பற்றுவதையும் குறிக்கிறது. இது நம் பாவச் செயல்களால் வரும் துன்பம் அல்ல [1 பேதுரு 4:15], வீழ்ச்சியடைந்த உலகில் வாழ்வதால் எல்லா மக்களும் அனுபவிக்கும் பொதுவான துன்பமும் இதுவல்ல [ரோமர் 8:20-22]. இது குறிப்பாக இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியதற்காக வரும் துன்பமாகும்.

நாம் கிறிஸ்துவுக்காக வாழும்போது, எதிரியானவன் அமைதியாக இருக்க மாட்டான். இருளின் சாம்ராஜ்யம் திருப்பி பலமாகத் தாக்கும். விசுவாசிகள் ஏன் துன்புறுத்தப்படுவார்கள் என்று யோவான் 3:19-20ல் இயேசுகிறிஸ்து இவ்வாறு கூறுகிறார், "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது." ஒளியின் நோக்கமானது, இரகசியங்களை அம்பலப் படுத்துவதாகும்.

எனவே, விசுவாசிகள், அவிசுவாசிகளின் செயல்களை தங்களின் வார்த்தைகளாலும், தங்களின் வாழ்க்கையாலும் வெளிப்படுத்தும்போது, அதற்கு சரியான பதிலடியை எதிர்கொள்வார்கள். அவமானங்களையும், துன்புறுத்தல்களையும், எல்லாவிதமான தீமைகளையும் சந்திப்பார்கள்! விசுவாசிகளின் வாழ்க்கையை எந்த விதத்தில் துன்பப்படுத்த முடியுமோ, அந்த அளவிற்கு வார்த்தைகளினாலும், செயல்களினாலும் செய்வார்கள்.





**துன்பத்திற்கான நமது மறுமொழி.**

துன்புறுத்தப்படும்போது, நமது பதில் என்னவாக இருக்க வேண்டும்? வசனம் 12ன் முதல் பகுதியில் இயேசுகிறிஸ்து தெளிவான பதிலைத் தருகிறார்: "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்" [மத்தேயு 5:12]. மகிழ்ச்சிக்கான பாய்ச்சல் என்று இதை வேறுவிதமாகவும் மொழிபெயர்க்கலாம். இயேசுகிறிஸ்து அமைக்கவிருக்கும் இராஜ்ஜியத்தில் திரியேக தேவனுடன் இருப்பதானது ஏராளமான மகிழ்ச்சியே பதிலாக இருக்க வேண்டும். துன்புறுத்தப்படுதலுக்கு விசுவாசியின் பதிலைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் ஒருங்கிணைந்த கருப்பொருள் மிகுந்த மகிழ்ச்சி என்பதில் ஆச்சரியமில்லை.

துன்புறும் விசுவாசிகளுக்கு எழுதிய கடிதத்தில், "கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" [1 பேதுரு 4:13] என்று பேதுரு கட்டளையிட்டான். "[நாம்] நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று யாக்கோபு கூறுகிறான் [யாக்கோபு 1:2]. அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பிரசங்கித்ததற்காக மத அதிகாரிகளால் சட்டையால் அடிக்கப்பட்டபோது, "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்..." என்ற பதிலை அப்போஸ்தலர் 5:40-41 நமக்குத் தருகிறது. துன்பங்கள் இருந்தாலும், "இயேசுவே மேசியா என்ற நற்செய்தியைப் போதிப்பதையும் அறிவிப்பதையும் அவர்கள் ஒரு போதும் நிறுத்தவில்லை" [அப்போஸ்தலர் 5:42] என்று அடுத்த வசனம் நமக்குச் சொல்கிறது. அப்போஸ்தலர் 16:23-25, பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறையில் இருந்தபோது, "ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்" என்று கூறுகிறது.

மேற்கூறிய பதில்கள், ஆரம்பகால விசுவாசிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேதனையான அனுபவங்களுக்குப் பிறகும் தங்கள் விசுவாசத்தைக் கைவிடவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் அழைப்பில் உண்மையாக நிலைத்திருந்தார்கள். எதிர்பாராதவிதமாக , நம்முடைய பதில் பெரும்பாலும் நேர்மாறாக உள்ளது. சில சமயங்களில், கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருப்பதற்காக நாம் அதிக விலைக்கிரயம் கொடுத்துவிட்டோம் என்று நினைப்பதால், மிகுந்த துக்கத்தால் படுக்கையை விட்டு எழக்கூட முடியாமல் இருந்திருக்கிறோம். இது ஒரு அவமானம் போன்ற சிறிய விஷயமாக இருந்தாலும், நாம் பல நாட்கள் இப்படி துக்கப்பட்டிருக்கிறோம். ஏன் இப்படி ஒரு பதிலை தருகிறோம்? இங்கே சில காரணங்கள் உள்ளன: உலக சிந்தை நம்மில் மிக அதிகமாக காணப்படுகிறது; இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளத் தவறிவிடுகிறோம்; நான் என்னும் அகங்காரம்(ஈகோ) அதிகமாக காணப்படுகிறதினால் தான் “துன்புறுத்தப்படுதல்” என்ற வார்த்தையை சொல்வதற்கு கூட நாம் சரியாக விரும்புவதில்லை.

இருப்பினும், தேவனுடைய ராஜ்யத்தில் வாழ விரும்பும் அனைவருக்கும் ஏதோ ஒரு அளவு துன்புறுத்தப்படுவது தவிர்க்க முடியாதது என்பதை நினைவில் கொள்வோம் [2 தீமோத்தேயு 3:12]. அத்தகைய சந்தர்ப்பங்களில் நம்முடைய பதில் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆம், அடிக்கடி கண்ணீர் வரலாம். ஆனால், நமக்காக இத்தனை அடிகள் வாங்கியவருக்காகத்தான் அடி வாங்குகிறோம் என்று அறிந்து, உள்ளுக்குள் அந்த





ஆழ்ந்த மகிழ்ச்சியை அந்தக் கண்ணீர் தடுக்கக் கூடாது. மேலும், அந்தப் புரிதல், வேதனையின் ஆழ்ந்த அழுகைகளுக்கு மத்தியிலும் ஆழ்ந்ததும் நிலையானதுமான மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும். நாம், பவுல் கூறுவது போல், “துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாக” இருக்கிறோம் [2 கொரிந்தியர் 6:10].

**பாடுகளை சகிப்பதற்கான பலன்.**

இத்தனை துன்பங்களையும் கடந்து செல்லும் போது ஒருவர் கேட்கக்கூடிய ஒரு தர்க்கரீதியான கேள்வி இதுதான்: இதினால் என்ன பயன்? இறுதியில் எனக்கு என்ன கிடைக்கும்? இயேசுகிறிஸ்துவைப் பின்தொடர்வதில் இவ்வளவு வலிகள் அடங்கியிருந்தால் அது மதிப்புக்குரியதா? இதற்கு இயேசுகிறிஸ்து கொடுக்கும் பதில் மிகவும் நேரடியானது: “பரலோக ராஜ்யம் அவர்களுடையது” [மத்தேயு 5:10]. நான் வசனம் 12யும் நம்புகிறேன், “பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்” என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, அவர் அதையே 10ஆம் வசனத்திலும் குறிப்பிடுகிறார்.

துன்பத்தை அனுபவிக்க விரும்புபவர்கள் மட்டுமே பரலோகராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள். அவர்கள் மட்டுமே எதிர்காலத்தில் பரலோக ராஜ்யத்தில் பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் முன்னிலையில் வாழ்ந்து, கிறிஸ்துவின் இரத்தத்தால் தங்கள் பாவங்கள் கழுவப்பட்டதால் அவரை ஆராதிப்பார்கள். அதுதான் பலன்! அவர்கள் உண்மையில் “பாக்கியவான்கள்” [மத்தேயு 5:10]. அவர்கள் மீதுதான் தேவனுடைய அங்கீகாரமும் அவருடைய தயவும் தங்கியிருக்கின்றன!

உண்மையில், ஒரு வகையில், முழு பாக்கியங்களும் தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்வதைப் பற்றியதாகும். இயேசுகிறிஸ்து முதல் பாக்கியத்தைப் பேசிய மத்தேயு 5:3, கடைசி பாக்கியத்தைக் கூறிய மத்தேயு 5:10 ஆகிய இரண்டும் "பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்ற சொற்றொடருடன் முடிவடைவதைக் கவனியுங்கள். வசனங்கள் 3 மற்றும் 10க்கு இடையிலுள்ள அனைத்து பாக்கியங்களும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. எனவே, ராஜ்யத்தில் வாழ்வதில் கவனம் செலுத்தப்படுகிறது. இந்த வெகுமதியைத் தொடரும்படி நம்மை ஊக்குவிக்க, இயேசுகிறிஸ்து மத்தேயு 5:12ன் கடைசிப் பகுதியில், "உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தி னார்களே" என்று சேர்த்துக்கொள்கிறார். பழைய ஏற்பாட்டில் கூட தேவனுடைய மக்களுக்கு இது எப்போதும் மாதிரியாக இருந்து வந்திருக்கிறது. தனது சொந்த சகோதரன் காயீனால் துன்புறுத்தப்பட்ட ஆபேலிலிருந்து, தேவனுடைய சத்தியத்தைப் பேசிய தீர்க்கதரிசிகள் உட்பட, தேவனுடைய மக்கள் எப்போதும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

எனவே இயேசுகிறிஸ்து சொல்வது இதுதான்: நீங்கள் இதில் தனியாக இல்லை அல்லது இந்த துன்பம் புதியது அல்ல. தேவனைப் பின்தொடர்வதற்காக துன்புறுத்தல் எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் அதன் பலன் மதிப்புக்குரியது: நித்தியமாக தேவனுடன் வாழ்வதே அந்த பலன். அந்தக் காரணம் மட்டுமே ஆழ்ந்த துன்பத்தின் மத்தியிலும் கூட மிகுந்த மகிழ்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.





**இறுதிச் சிந்தனைகள்.**

நினைவில் கொள்வோம். மலைப்பிரசங்கம் முழுவதும் இந்த பாக்கியங்கள் உட்பட, இயேசு கிறிஸ்துவின் போதனைகள், விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளும் அனைவருக்கும் ஒரு கண்ணாடியாக விளங்குகிறது. ஆம், இந்தக் கட்டளைகளில் எதையும் நம்மால் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது. இயேசு மட்டுமே செய்தார்! அவருடைய கிரியைகளின் காரணமாகவே நாம் தேவனுக்கு முன் நீதிமான்களாக்கப்பட்டோம்!

எனினும், நாம் விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருப்பதால், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழ்கிறார். மேலும், நாம் தொடர்ந்து இயேசுகிறிஸ்துவைப் போல் மாற்றப்படுவதே அவருடைய பணியாக இருக்கிறது. எனவே, இந்தப் பண்புகள் நமக்குள் வெளிப்பட வேண்டும். இந்த வகையான நீதிக்கு அடிப்படை இருக்கும் இடத்தில், துன்புறுத்தல் இருக்கும். வீட்டிலோ, பணியிடத்திலோ, பள்ளியிலோ, கல்லூரியிலோ, சமூக உறவுகளிலோ அல்லது சபையிலோ கூட இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதினால் நிராகரிப்பைச் சந்திக்க நேரிடும். ஆனால் அது மிகுந்த மகிழ்ச்சிக்கு காரணமாக அமைய வேண்டும், ஏனென்றால் நாம் உண்மையில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்பதை இது காட்டுகிறது.

விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளும் பலர் எந்த துன்புறுத்தலையும் எதிர்கொள்வதில்லை, ஏனெனில் அவர்கள் அதிக நீதி காட்டவில்லை. இது உண்மையான தேவனுடைய நீதியல்ல. மாறாக, சுய நீதி மட்டுமேயாகும். அவருடன் ஐக்கியப்பட்டதால்

கிடைக்கும் நீதியான வாழ்க்கை தான் இயேசு கிறிஸ்து, இங்கே பேசும் நீதியின் அழைப்பாகும். அவர் தம் பிரசங்கத்தின் முடிவில் அத்தகைய வர்களை நோக்கி, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லு கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" [மத்தேயு 7:21] என்று கூறினார். மேலும், அன்பான வாழ்க்கை முறையைக் காட்டுபவர்கள் மட்டுமே அவருடைய ராஜ்யத்தில் இருப்பார்கள் என்பது பிதாவின் விருப்பம்.

இந்த பாக்கியங்களை இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளின்படி, வேறுவிதமாக கூறவதென்றால், ஆவியில் எளிமையானவர்கள், தங்கள் பாவங் களுக்காக வருந்துபவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள், நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள், இரக்கமுள்ள வர்கள், இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள் அதாவது துன்புறுத்தப்படுதலுக்கு தயாராக இருக்கிறவர்கள்- பரலோகராஜ்யத்தில் இருப்பார்கள். எனவே, பாவ மன்னிப்புக்காக நீங்கள் உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவிடம் திரும்பவில்லை என்றால், இனியும் தாமதிக்க வேண்டாம். உங்கள் பாவங்களை விட்டு விலகி, அவர் அளிக்கும் மன்னிப்பைத் தழுவுங்கள், அப்போதுதான் அவருக்காக துன்பப்படும் திறன் உட்பட, இந்த மகிழ்ச்சியான வாழ்க்கை முறையைத் தொடர உங்களுக்கு பெலன் கிடைக்கும்.

இதன் முக்கிய அம்சம் இதுதான்: விசுவாசத் திற்காக அதிகமாக துன்பப்படுவதே உண்மையுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் அருளப்பட்டிருக்கிறது, இயேசுகிறிஸ்துவும் துன்பப்பட்டார். பழைய மற்றும்





புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் துன்பப்பட்டனர். நாம் இதில் எப்படி வேறுப்பட்டு இருக்க முடியும்? பெரும்பாலும், துன்புறுத்தப்படுவது தேவனுக்கு நம்மீது உள்ள அதிருப்தியின் அடையாளம் என்று நினைக்கிறோம். இந்த அடிப்படையிலேயே செழிப்பு உபதேசம் பிரபலமாகிறது!

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் வித்தியாசமான ஒன்றைக் கூறுகிறான். அவன் பிலிப்பியர் 1:29ல் நமக்கு இவ்வாறு நினைவூட்டு கிறான், "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக் கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டி ருக்கிறது." "அனுமதி" என்ற சொல் "கிருபை அல்லது தயவு" என்ற பதத்திலிருந்து பெறும் வார்த்தையாகும். இது ஒரு "வரம்" என்ற கருத்தை கொண்டுள்ளது. கிறிஸ்துவின் மீதான விசுவாசம் [இந்த வசனத்தின் முதல் பகுதி] மற்றும் கிறிஸ்துவுக்காக துன்பம் அனுபவித்தல் [இந்த வசனத்தின் இரண்டாம் பகுதி] ஆகிய இரண்டுமே தேவன் தம்முடைய கிருபையால் நமக்கு அளித்த ஒரு "வரம்" ஆகும். ஒரு வரத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் நன்றி சொல்லிவிட்டு, மற்றொரு பகுதிக்கு நன்றி சொல்ல மறுப்பது எப்படி சரியாகும்? கிறிஸ்துவை விசுவாசிப்பது மட்டுமல்ல, அவருக்காகப் பாடுபடுவதும் ஒரு பாக்கியம்.

எனவே, நாம் அவமானங்களையும் நிராகரிப்பு களையும் எதிர்கொள்ளும்போது பதிலடி கொடுப் பதற்கு மாறாக, துன்பத்தை எதிர்கொள்ளும் போது நம்முடைய பதில் இதுவாக இருக்க வேண்டும்: "அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய் கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." [1 பேதுரு 2:23].

அன்பான வாசகர்களே, நாம் இந்த வாழ்க்கையை முடித்துக்கொண்டு இயேசுகிறிஸ்துவின் சந்நிதியில் சேரும்போது, அவருக்காக நாம் என்ன செய்தோம்? அது மரணத்திற்கு வழிவகுத்தாலும் அவர் நமக்காக அனுபவித்த பாடுகளின் அளவிற்கு நெருங்கவில்லை என்பதை நாம் உணர்வோம். அவர் பிதாவின் பிரசன்னம், பரலோக மகிமை அனைத்தையும் விட்டு பூமிக்கு வந்தார். பூமியில் இருந்தபோது சொல்ல முடியாத துன்பங்களைச் சகித்தார், இறுதியில் நாம் பெற தகுதியான அந்த அவமானகரமான மரணத்தை ஏற்க சிலுவைக்குச் சென்றார். நம்முடைய பாவங் களுக்காக அவர் பிதாவின் கோபத்தைச் சுமந்தார். அப்படியானால் அவருக்காக துன்பப்படு வதை நாம் ஏன் பாக்கியமாக கருத கூடாது?

எனவே, நாம் எதிர்கொள்ளும் நிராகரிப்புகள் மற்றும் அவமதிப்புகளைப் பற்றி சிந்தித்து, நம்மை நாமே இவ்வாறு கேட்டுக்கொள்வோம்: நாம் இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வதால் துன்பப்படு கிறோமா? அல்லது அது நமது பாவச் செயல்களின் விளைவா? அது முந்தையதாக இருந்தால், மகிழ்ச்சியடைவோம், தொடர்ந்து விடாமுயற்சியுடன் இருப்போம், இறுதியில் அது மதிப்புக்குரியதாக இருக்கும் என்பதை அறிவோம். அது பிந்தையது என்றால், தேவனிடம் நம் பாவங்களை அறிக்கை செய்வோம், நம் செயல்களுக்கு மனந்திரும்பி, இந்த போக்குகளை சமாளிக்க உதவும்படி அவரிடம் கேட்போம்.





**கையிருப்பு இல்லை, பின்வாங்கவில்லை, வருத்தம் இல்லை**

வில்லியம் போர்டன் என்பவர் 1904ல் சிகாகோவில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்றார். அவர் போர்டன் பண்ணையாரின் வாரிசாக இருந்தார். பட்டப்படிப்புக்காக, அவர் உலகம் முழுவதும் பயணித்ததற்காக ஒரு அசாதாரண பரிசைப் பெற்றார். இந்தப் பயணம் அவருக்கு எப்படி உதவிகரமாக இருந்தது என்று அவருக்கு அதை ஏற்பாடு செய்து கொடுத்தவர்கள் உணரவில்லை.

அந்த பயணத்தின் போது, வில்லியம் உலகெங் கிலும் சிலாக்கியமில்லாதவர்கள் மீதும், கிறிஸ்துவை அறியாதவர்கள் மீதும் ஒரு பாரத்தை உணர ஆரம்பித்தார். அவர் ஒரு மிஷனரியாக கிறிஸ்துவுக்கு சேவை செய்வதில் விருப்பம் தெரிவித்து வீட்டிற்கு எழுதினார். நண்பர்களும் உறவினர்களும் அவநம்பிக்கையுடன் நின்றாலும், போர்டன் தனது வேதத்தின் பின்புறத்தில் இரண்டு வார்த்தைகளை எழுதினார்: " எந்த தடையுமில்லை" **(No reserves).**

அவர் அமெரிக்கா திரும்பி, யேல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கே அவர் ஒரு முன்மாதிரி மாணவராக இருந்தார். கல்லூரி வாழ்க்கை வில்லியமின் தூதுப்பணி துறையில் ஆசையைத் தணிக்கும் என்று மற்றவர்கள் நினைத்திருந்தாலும், அது அதைத் தூண்டியது. அவர் ஒரு வேதாகம படிப்பைத் தொடங்கினார், அவருடைய முதல் ஆண்டு முடிவில் 150 மாணவர்கள் வேதவசனங் களைப் படிக்கவும் ஜெபிக்கவும் வாரந்தோறும் கூடினர். அவர் மூத்தவராக இருந்த நேரத்தில்,

யேலில் இருந்த ஆயிரத்து முந்நூறு மாணவர்களில் ஆயிரம் பேர் வாராந்திர வேதாகம படிப்பு மற்றும் ஜெபத்திற்காக கூடிவந்த சீஷர் குழுக்களில் இருந்தனர்.

அவர் தனது சுவிசேஷ முயற்சிகளை வெறுமனே யேலின் அழகிய வளாகத்தைச் சுற்றி மட்டுப்படுத்த வில்லை. அவரது இருதயம் அதற்கு வெளியேயும் சமமாக இருந்தது. அவர் யேல் ஹோப் மிஷனை (Yale Hope Mission) நிறுவினார். கனெக்டிகட்டின் நியூ ஹேவன் தெருக்களில் இருந்தவர்களுக்கு அவர் ஊழியம் செய்தார். அவர் கிறிஸ்துவின் ஊழியத்தை அனாதைகள், விதவைகள், வீடற்றவர்கள் மற்றும் பசியுள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டார், அவர் களுக்கு நம்பிக்கையையும் அடைக்கலத்தையும் வழங்கினார்.

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரிடம் அவர் அமெரிக்காவில் இருந்த காலத்தில் அவரை மிகவும் கவர்ந்தது எது என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார், “இளம் கோடீஸ்வரனாகிய வில்லியம் யேல் ஹோப் மிஷனில் கையேந்தி பிச்சைக்காக மண்டியிட்ட காட்சி” தன்னை வெகுவாய் கவர்ந்தது என்றார்.

போர்டன் யேல் பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றபோது, அவருக்கு பல இலாபகரமான வேலைகள் வழங்கப்பட்டன. பல உறவினர்களும் நண்பர்களும் விரக்தியடையும் வண்ணம், அந்த வேலைகளை ஏற்க அவர் மறுத்துவிட்டார். அதற்கு பதிலாக, அவர் தனது வேதத்தின் பின்புறத்தில் **“பின்வாங்க மாட்டேன்”** என்ற மேலும் இரண்டு வார்த்தைகளை எழுதினார்:



பின்பு அவர் பிரின்ஸ்டன் வேதாகம கல்லூரியில் நுழைந்தார், பட்டப்படிப்பு முடிந்ததும், சீனாவுக்குப் பயணம் செய்தார். முஸ்லீம் மக்களிடையே கிறிஸ்துவுக்கு சேவை செய்ய எண்ணி, அவர் அரபு மொழியைக் கற்கவும், ஆராயவும் எகிப்தில் தங்கினார். இருப்பினும், அங்கு இருந்தபோது, அவருக்கு முதுகெலும்பு மூளைக்காய்ச்சல் (Spinal Meningitis) ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் ஒரு மாதம் மட்டுமே உயிர் வாழ்ந்தார்.

இருபத்தைந்து வயதில், வில்லியம் போர்டன் மரித்துவிட்டார். கிறிஸ்துவை அறிந்துகொள்வதற் காகவும், அவரைத் தெரிந்துகொள்வதற்காகவும் போர்டன் எல்லாவற்றையும் நஷ்டமாக எண்ணினார். அவர் தனது முன்னோர்களிடமிருந்து பெறப்பட்ட ஆஸ்தியின் பயனற்ற தன்மையால் அங்கீகரிக்கப்பட மறுத்துவிட்டார், மாறாக இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் தனது மீட்கும் பொருளின் மகிமையை வாழ முயன்றார்.

அவரது மரணத்திற்குப் பிறகு அவரது வேதம் கண்டுபிடிக்கப்பட்டபோது, பின் பக்கத்தில் **“வருத்தம் இல்லை”** என்ற மேலும் இரண்டு வார்த்தைகளைச் சேர்த்து எழுதியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தங்களின் மீட்பின் விலையை அறிந்தவர்கள், தங்களை மீட்டவருக்காக வாழ்ந்த வாழ்வானது வருத்தமில்லாத வாழ்க்கை என்பதை அறிவார்கள்... வில்லியம் போர்டன் தன்னை மீட்டவருடன் செல்லத் தேர்ந்தெடுத்தார். நீங்கள் எப்படி?

## 9. கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரியமாய் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 காரணங்கள்

சாரா வின்செஸ்டரின் கணவர் துப்பாக்கிகள் தயாரித்து விற்பனை செய்யும் ஒரு அரிய வாய்ப்பைப் பெற்றவர். 1918ல் சளிக்காய்ச்சலால் அவர் மரித்த பின்னர், சாரா மரித்தவர்களைத் தொடர்புகொள்வதில் ஈடுபட்ட பில்லி சூனியக்காரர் களை நாடினாள். அவர்கள் மூலமாய் மரித்த கணவரை தொடர்புக் கொண்டபோது அவர் அவளிடம், “நீ உன் வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கும் வரை, மரணத்தை ஒருபோதும் எதிர்கொள்ள மாட்டாய்” என்று சொன்னதாகக் கூறப்படுகிறது. எனவே, அந்த பில்லி சூனியத்தை நம்பி, கட்டி முடிக்கப்படாத 17 அறைகள் கொண்ட ஒரு மாளிகை யை வாங்கி, அவள் அதை விரிவாக்கம் செய்ய தொடங்கினாள். தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 50 அமெரிக்க சென்ட்ஸ், (இன்றைய மதிப்பின்படி சுமார் 3700 இந்திய ரூபாய்கள்) சம்பாதிக்கும் நேரத்தில் சுமார் 5 மில்லியன் டாலர்கள் (இன்றைய மதிப்பின் படி சுமார் 37,24,25,000 இந்திய ரூபாய்கள்) செலவானது. இந்த திட்டம், அவள் 85 வயதில் மரிக்கும் வரை தொடர்ந்தது. இன்னும் 80 வருடங்கள் தொடர்ந்துக் கட்டக்கூடிய அளவுக்கு போதுமான பொருட்களை அவள் விட்டுச்சென்றாள். அந்த வீடு ஆயிரக்கணக் கான மக்களை மரண பயமாகிய அடிமைத்தனத் திற்கு ஒர் அமைதியான சாட்சியாக இன்றும்

நிற்கிறது. எப்படியாயினும், மக்கள் மரண பயத்தில் வாழத் தேவையில்லை என்பதற்கான காரணங்களை வேதம் தருகிறது. ஆனால் அந்த காரணங்களை விரி வாகப்பார்ப்பதற்கு முன், நமக்கு நாமே ஒரு எளிய கேள்வியைக் கேட்டு அதற்கு பதிலளித்துக்கொள் வோம்: மரணம் என்றால் என்ன? எளிய சொற்களில் கூறுவதென்றால் அது ஒரு பிரிவினை. இதுதான் அடிப்படையான பதில். இப்போது, வேதம் விவரிக்கும் மூன்று வகையான மரணங்களைக் குறித்து சற்று பார்ப்போம்.

**1.சரீர மரணம்** : இந்த மரணம் ஆத்துமாவை சரீரத்திலிருந்து பிரிப்பதாகும். "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று எபிரெயர் 9:27 நமக்குக் கற்பிக்கிறது. மனிதனுக்கு மறுபிறவி இல்லை என்று வேதம் தெளிவுபடுத்து கிறது. எல்லா மனிதர்களும் "ஒரு முறை மட்டுமே மரிக்கிறார்கள்" என்று வசனம் தெளிவாகக் கூறு வதை கவனியுங்கள், மரிப்பது பலமுறையல்ல.

**2. ஆவிக்குரிய மரணம்:** இந்த மரணம் ஆத்துமா வையும் சரீரத்தையும் தேவனுடைய ஜீவனிலி ருந்து பிரிப்பதாகும். எபேசியர் 2:1ஆம் வசனம் இயேசு கிறிஸ்து இல்லாத ஒரு நபரின் நிலையை நமக்கு நினைவூட்டுகிறது, "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தீர்கள்". நாம் அனைவரும் இந்த உலகத்திற்கு ஆவிக்குரிய ரீதியில் மரித்தே பிறக்கிறோம். இந்த நிலை சரீர மரணத்திற்கும் இறுதியில் நித்திய மரணத்திற்கும் வழிவகுக்கிறது இயேசு கிறிஸ்து ஒருவருக்குக் கொடுக்கக்கூடிய ஜீவனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் மரிக்க வேண்டியது அவசியம்.





**3. நித்திய மரணம்** : பூமியில் உயிருடன் இருக்கும் போது இயேசு கிறிஸ்துவை நிராகரித்ததன் காரணமாக இந்த மரணம் ஆத்துமாவையும் சரீரத்தையும் தேவனிடமிருந்து நித்தியமாய் பிரித்து விடுகிறது. அப்படிப்பட்டவர்களின் இறுதி முடிவை "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்." என்று வெளிப்படுத்தல் 20:15 நமக்குக் கற்பிக்கிறது. இந்த மரணத்தை அனுபவிப்பவர்கள் நித்தியமாய் நரகத்தில் வாழ்வார்கள்.

மரணத்தைப் பற்றிய இந்த அத்தியாவசிய புரிதலுடன், கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரிய மாய் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 காரணங்களைக் காண்போம்.

### காரணம் #1 உண்மையான கிறிஸ்தவர்கள் மேல் மரணத்திற்கு அதிகாரம் இல்லை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தபோது, அவர் மனிதனாக, மனித சரீரத்தை எடுத்துக் கொண்டு, பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார், நமக்கு பதிலாக பாவத்திற்கு மரித்து மீண்டும் உயிர்த்தெழுந் தார். இதன் விளைவாக, தங்கள் பாவ மன்னிப்புக்காக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எதிர் காலத்தில் எந்த தண்டனையையும் சந்திக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ முடியும். அவர்கள் ஒருபோதும் நித்திய மரணத்தை அனு பவிக்கமாட்டார்கள். அது மட்டுமல்லாமல், இவ் வுலகில் வாழும்போதும் அவர்கள் மரண பயத்தில் வாழத் தேவையில்லை, ஏனென்றால் இயேசு கிறிஸ்து "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே

அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடு வித்துவிட்டார்" [எபிரெயர் 2:15]. நாம் இங்கே பார்ப்போமானால், சரீர மரணம் என்பது அடுத்த வாழ்க்கைக்கு கடந்து போகுதலாகும் இது ஒரு விசுவாசி தேவனுடைய சமுகத்தில் என்றென்றும் வாழும் வாழ்க்கையாகும். இது நித்திரை செய்வது மற்றும் விழித்தெழுவது போன்றதாகும். கிறிஸ்தவரின் மரணத்தை "நித்திரை" என்று வேதம் விவரிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை [1 கொரி 15:51; 1 தெச 4:13]. உண்மையாகவே கிறிஸ்தவர்கள் மேல் மரணத்திற்கு அதிகாரம் இல்லை, மரணத்தை நாம் ஏன் தைரியமாக எதிர்கொள்ள வேண்டுமென்ப தற்கான முதல் காரணம் இதுதான்.

**காரணம் #2 மரணமானது ஒரு உண்மையான கிறிஸ்தவனுக்கு கர்த்தருடைய சமுகத்தை உடனடியாக அடைய உதவுகிறது.**

ஒரு உண்மையான கிறிஸ்தவன் மரிக்கையில் அவனுடைய சரீரம் கல்லறைக்கு செல்கிறது. இருப்பினும், அவனுடைய ஆத்துமா உடனடியாக கர்த்தருடைய சமுகத்திற்கு செல்கிறது. "இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்று பவுல் கூறினான் [2 கொரி 5: 8]. "இந்த தேகத்தை விட்டு குடிபோகுதல்" என்ற இந்த வார்த்தை சரீரத்திலிருந்து விலகும் ஆத்துமாவின் நிலையைக் குறிக்கிறது. மேலும் "கர்த்தரிடத்தில் குடியிருத்தல்" என்பது ஆத்து மா கர்த்தருடைய சமுகத்தில் இருப்பதை குறிக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கும்போது மனந் திரும்பிய கள்ளனுக்கு, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச்



9. கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரியமாய் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 காரணங்கள்

சொல்லுகிறேன்" என்று அவர் தாமே வாக்குத்தத்தம் பண்ணினார் [லூக்கா 23:43]. தேவனுடைய சமுகத்தில் இருப்பதற்கான வாக்குத்தத்தமானது தொலைதூர எதிர்காலத்திற்கான ஒரு சத்தியமல்ல மரித்த சில நாட்களுக்கு பிறகுமல்ல மாறாக "இன்று" என்ற வார்த் தையானது தேவனுடன் உடனடியாக இருப்பதைக் குறிக்கிறது.

ஒரு கிறிஸ்தவனின் ஆத்துமா கர்த்தருடன் தங்கியிருக்கும்படி செல்வதற்கு முன் அது சில காலம் காத்திருக்க வேண்டிய அவசியமுமில்ல, அதை தற்காலிகமாக தங்க வைக்க இடமும் தேவை யில்லை. சரீர மரணத்தைத் தொடர்ந்து உடனடியாக கர்த்தருடன் தங்கியிருக்கும்படி அது சென்று விடுகிறது. இதற்கு ஒரே விதிவிலக்காக, இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது, அச்சமயத்தில் உயிரோடிருந்து அவரைப் பின்பற்றுபவர்கள் அனை வரும் அந்த சரீர மரணத்தை அனுபவிக்காமல் அவருடன் உடனடியாக சென்று விடுவார்கள் [1 தெச 4:16-17]. கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரியமாய் எதிர்கொள்ள வேண்டுமென்பதற்கு இதுவே இரண்டாம் காரணம்.

**காரணம் #3 மரணமானது ஒரு புதிய மற்றும் பூரணமான சரீரத்தை தரித்துக்கொள்ள உண்மையான கிறிஸ்தவனுக்கு உதவுகிறது.**

நாம் இந்த உலகத்திற்கு வரும்போது கொண்டு வந்த சரீரமானது பாவத்திற்கும் வியாதிக்கும் உட்பட்டது. அதனால்தான் சரீர மரணம் நிகழ்கிறது. இருப்பினும், இயேசு கிறிஸ்து தம் மக்களுக்காக எதிர்காலத்தில் மீண்டும் வரும்போது, எல்லா உண்மையான கிறிஸ்தவர்களும் பரிபூரணமான,

புதிய, பாவமற்ற மற்றும் வியாதிகளற்ற சரீரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். மரித்து கர்த்தருடைய சமுகத்திற்கு சென்றுவிட்ட உண்மையான கிறிஸ்தவர்களின் ஆத்துமாக்கள் அவருடைய சமுகத்தில் இருந்தாலும் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின்போது புதிய சரீரங்களைப் பெற்றுக் கொள்வார்கள். வேதத்தில் இந்த நிகழ்வு "மகிமைப் படுத்துதல்" என்று அழைக்கப்படுகிறது. 1 கொரிந்தியர் 15:51-52 ஆகிய வசனங்கள் இந்த செயல்முறையை விளக்குகிறது, "51 இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். 52 எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்".

1 கொரிந்தியர் 15:42-44 ஆகிய வசனங்கள் எதிர்காலத்தில் நாம் பெறப்போகும் இந்த புதிய சரீரத்தைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தருகிறது. "42 ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு; 43 கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமை யுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; 44 ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு". இந்த புதிய ஆவிக்குரிய சரீரம், உயிர்த்தெழுந்த சரீரம், அழியாத அல்லது மகிமையான சரீரம் என்றும் அழைக்கப்படுகிறது. அதனால்தான் கிறிஸ்த



9. கிறிஸ்தவர்கள் மரணத்தை ஏன் தைரியமாய் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 காரணங்கள்

வர்களாகிய நாம் "நம் சரீர மீட்பிற்காக" ஆவலுடன் காத்திருக்கிறோம் [ரோமர் 8:23]. கிறிஸ்தவர்கள் மரணத்தை தைரியத்துடன் எதிர்கொள்ள வேண்மென்பதற்கான மூன்றாவது காரணம் இதுவே.

எனவே, விசுவாசிகள் ஏன் மரணத்தை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான 3 உறுதியான காரணங்களை நாம் மேலே பார்த்தோம். முதலாவதாக, மரணத்திற்கு நம்மீது அதிகாரம் இல்லை; இரண்டாவதாக, உடனடியாக கர்த்தருடைய சமுகத்திற்கு சேர மரணம் நமக்கு உதவுகிறது, இறுதியாக, மரணம் ஒரு புதிய மற்றும், பூரணமான சரீரதத்தைப் பெற உதவுகிறது.

இந்த பேருண்மைகள் கிறிஸ்தவருக்கு மரணத்தை தைரியமாக எதிர்கொள்ள உதவும். ஆனாலும், சில சமயங்களில், "எனக்கு என்ன நடக்கும்? நான் தகுதியற்றவானாகிவிடுவேனா? வியாதிகளை அனுபவிப்பேனா?" என்ற கேள்விகள் கிறிஸ்தவர்களைப் ஆட்கொள்கிறது, குறிப்பாக அவர்கள் வயதாகும்போது அல்லது ஒரு மோசமான வியாதியை எதிர்கொள்ளும்போது இப்படி சிந்திக்க வைக்கிறது. இவைகள் மிகவும் நியாயமான கவலைகள் என்றாலும், நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் பாதுகாப்பை உணர்ந்து மேலும் இவற்றிற்கு வேதத்தின்படி பதிலளிக்கப்பட வேண்டிதாயிருக்கிறது. "உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்து வந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்" என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார் [ஏசாயா 46:4].

ஒருவேளை சரீரப்பிரகாரமான துன்பங்களின் ஊடாக நாம் செல்ல வேண்டியது தேவனுடைய சித்தமாக இருந்தால், நம்முடைய பிதாவின் சித்தம் நமக்கு மிகச் சிறந்தது என்பதை அறிந்து, நாம் மேலும் அமைதியாகவும் அச்சமின்றி இருக்க வேண்டும். இந்த பூமிக்குரிய யாத்திரை வழியாக அவர் நம்மை பரலோகத்திலுள்ள இறுதி வீட்டிற்கு அழைத்துச் செல்வார் [பிலிப்பியர் 1:6]. ஒவ்வொரு நாளும் இந்த அனுபவத்தை கடந்துச்செல்லும்போது, நாம் கர்த்தருடன் இருப்பதற்கு கிட்டிச்சேருகிறோம். கடினமான காலங்களில் உண்மையாக விடாமுயற்சியுடன் இருக்க இது நமக்கு பேருதவியாக இருக்கும்!

இவை சிறப்பான சத்தியங்கள் என்றாலும், ஒருவர் உண்மை கிறிஸ்தவராக இல்லாவிட்டால் அவருடைய எதிர்காலம் மிகவும் இருண்டதாக இருக்கும். ஒரு அவிசுவாசி மரிக்கும் போது, அவனது சரீரம் கல்லறைக்குள் செல்கிறது என்று வேதம் சொல்கிறது, ஆனால் ஆத்துமா உபத்திரவத்தின் இடமாகிய ஹேடீஸுக்கு (H a d e s நரகத்தைப் போன்றதொரு இடம்) செல்கிறது. [லூக்கா 16:23]. அவிசுவாசிகளின் ஆத்துமாக்கள் இறுதி நியாயத்தீர்ப்பு நாள் வரை அங்கே இருக்கும், அவர்கள் நரகத்திற்குள் நித்தியமாய் தள்ளப்படுவதற்கு முன்பு இறுதி நியாயத்தீர்ப்பிற்காக தேவனுக்கு முன்பாக நிற்கும்படி உயிரோடு எழுப்பப்படுவார்கள். அவிசுவாசிகள் “யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்” என்று வெளிப்படுத்துதல் 20:13 கூறுகிறது. அவர்கள் மன்னிக்கப்படாத பாவங்களால், “அக்கினிக்கடலிலே [நரகத்தில்] தள்ளப்படுவார்கள்” [வெளி 20:14]. உண்மையாகவே, இது ஒரு பயங்கரமான மற்றும் சோகமான முடிவு!





இருப்பினும், வாழ்க்கையானது அந்த நிலையில் முடிவுக்கு வர வேண்டிய அவசியமில்லை. பாவங்களிலிருந்து விலகி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம், ஒருவர் ஆவிக்குரிய பிறப்பை அனுபவித்து, இந்த பயங்கரமான நியாயத்தீர்ப்பைத் தவிர்க்கக்கூடும், ஏனென்றால் பாவத்திற்காக தேவனுடைய நியாயத்தீர்ப்பை இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்மீது சுமந்துக்கொண்டார். “மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று யோவான் 5:25ல் இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம் அளித்திருக்கிறார். இந்த வசனத்தில் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு 3 வாக்குத்தத்தங்கள் உள்ளன:

(1) அவர்கள் இப்போது நித்திய ஜீவனை பெற்றிருக்கிறார்கள்.

(2) அவர்கள் செய்த பாவங்களுக்காக எதிர்காலத்தில் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ள மாட்டார்கள்.

(3) அவர்கள் ஆவிக்குரிய மரணத்தை கடந்து ஆவிக்குரிய வாழ்வு மற்றும் நித்திய ஜீவனுக்குள் வந்துவிட்டப்படியால் நித்திய மரணம் தவிர்க்கப்படுகிறது.

இவைகள் தனித்துவமான வாக்குத்தத்தங்கள. இவற்றை விசுவாசித்தால், இவைகள் ஒரு நபரை மரண பயத்திலிருந்து விடுவிக்கும். ஆம், மரணத்துடனான நம் சந்திப்பு தவிர்க்க முடியாதது. எந்த மருத்துவ திட்டமும் மரணத்தை வெல்ல முடியாது!, “அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது” என்று எபிரெயர் 9:27 தெளிவாக

கூறுகிறது. மரணம் என்பது அனை வருக்கும் நியமிக்கப்பட்ட ஒரு சந்திப்பு! ஒவ்வொரு மணி நேரத்திலும் சுமார் 10,000 பேர் மரிக்கின்றனர். சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ, நீங்கள் அந்த எண்ணிக்கையில் ஒருவராக இருப்பீர்கள்.

நீங்கள் மரிப்பதற்கு ஆயத்தமா? நிச்சயமாக, நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருந்தால் உங்களால் ஆயத்தமாக இருக்க முடியும்! ஏனென்றால், "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" [1 கொரிந்தியர் 15:55, 57], என்று ஒரு உண்மையான கிறிஸ்தவனால் மட்டுமே மகிழ்ச்சிப்பொங்க பாட முடியும்.



## 10. அழுகிறவர்களுடனே அழுங்கள்

ரோமர் 12:15ன் பிற்பகுதி, "அழுகிறவர்களுடனே அழுங்கள்" அல்லது "துக்கப்படுகிறவர்களுடன் துக்கப்படுங்கள்" என்று கட்டளையிடுகிறது. துக்கம் போன்ற சில விஷயங்கள் நம்மை நெருங்கிய நட்பில் இணைக்கின்றன. உங்கள் கடந்த காலத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், குறிப்பாக, நீங்கள் மகிழ்ச்சியின் உச்சத்தை அனுபவித்த அந்த தருணங் களையும், இருளின் ஆழமான பள்ளத்தாக்கில் நடந்த அந்த தருணங்களையும் பற்றி சிந்தியுங்கள். இப்போது, அந்த இரண்டு நேரங்களிலும் உங்களுடன் இருந்தவர்களை நினைத்துப் பாருங்கள். எந்த தருணம் உங்களுக்கு அதிகம் நினைவில் உள்ளது? அநேகமாக என்னைப் போல, பெரும்பாலும் அது இரண்டாவது தருணமாகத் தான் இருக்கும். அந்த இருண்ட பள்ளத்தாக்கு அனுபவங்களின் போது நமக்கு அருகில் இருந்தவர்களையும், இரவும் பகலும் கண்ணீர் நம் உணவாக இருந்த போது நம்முடன் இருந்தவர்களையும் நாம் அதிகம் நினைவில் கொள்கிறோம்; பின்வரும் கதை இந்த உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு பெண் பக்கத்து வீட்டு வேலைக்காரனை சந்தித்து, "உங்கள் அத்தையின் மரணத்தைக் கேட்டு நான் வருந்துகிறேன், நீங்கள் அவளை இழந்து தவிக்கிறீர்கள். உங்கள் அத்தையுடன் அவ்வளவு நெருக்கமாக இருந்தீர்கள்" என்று கூறினாள். அதற்கு

அந்த வேலைக்காரன் "ஆம், அவள் மரித்துப்போனது வருத்தம் தான். ஆனால், நாங்கள் அவ்வளவு நெருக்க மானவர்களாக இருக்கவில்லை." என்று கூற, அதற்கு அந்த பெண், ஏன்? என்று வினவினாள். அவன் "நீங்கள் என் அத்தையுடன் ஒன்றாகச் சிரித்துப் பேசுவதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்." என்று கூறினான்.

"ஆம், நாங்கள் அப்படித்தான் இருந்தோம் "நாங்கள் அறிமுகமானவர்கள், ஒன்றாகச் சிரித்தோம், ஒன்றாகப் பேசினோம், ஆனால். நாங்கள் ஒன்றாக கண்ணீர் சிந்தவில்லை. நண்பர்கள் ஆவதற்கு முன் எல்லோரும் ஒன்றாக அழுதிருக்க வேண்டும்" என்று அவளிடமிருந்து பதில் வந்தது.

அந்த கடைசி வார்த்தை சற்று கடினமானதாக தோன்றினாலும், அவைகள் சரியான வார்த்தைகளாக இருக்கிறது. கண்ணீர் மக்களை நெருங்கிய நட்பில் இணைக்கும் ஒரு பிணைப்பு, அது உடைக்க முடியாத இறுக்கமான பிணைப்பு! சக கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரோடு ஒருவர் ஐக்கியங்கொள்ள அழைக்கப் பட்டிருந்தாலும், அதாவது, நமது வாழ்வின் மகிழ்ச் சியையும், துக்கத்தையும் ஒன்றாகப் பகிர்ந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்தாலும், நம் முடைய துக்கங்களைப் பகிர்ந்து கொள்வதில் நாம் தோல்வியடைந்துவிட்டோம் என்பது வருத்தமான உண்மை. மற்றவர்களின் துன்பங்களில் பங்கு கொண்டு நெருங்கி பழகுவது அரிதாகக் காணப்படுகிறது.

உண்மையை கூறுவதென்றால், மற்றவர்களின் துன்பத்தைக் குறித்து ரகசியமாக மகிழ்ச்சி யடைவதில் நாம் குற்றவாளிகளாக இருந்திருக் கலாம் குறிப்பாக அவர்கள் ஏதேனும் ஒரு வகையில்





நம்மையும் புண்படுத்தியிருந்தால் அப்படி செய்திருக் கலாம். இது "அவர்கள் தகுதியானவற்றை பெற்றிருக் கிறார்கள்" என்ற அணுகுமுறையாகும். இப்படிப்பட்ட அணுகுமுறையை தேவன் எப்படி கருதுகிறார் தெரியுமா? நீதிமொழிகள் 17:5ஆம் வசனம் இதற்கு பதில் தருகிறது: "ஆபத்தைக் குறித்துக் களிக்கிறவன் தண்டனைக்குத் தப்பான்."

மற்றவர்களின் துன்பங்களில் பங்கு கொள்ள தேவன் நம்மை அழைக்கிறார். சந்தோஷப்படுகிற வர்களுடன் சந்தோஷப்படுவதற்கு நாம் அழைக்கப் படுவது போலவே, அழுபவர்களுடன் அழுவதற்கும் சமமாக அழைக்கப்படுகிறோம். துக்கம் அல்லது அழுகை என்பது ஒரு சகவிசுவாசி அனுபவிக்கும் துக்கத்தையும் வலியையும் நம்முடையது போல் உணர்வதாகும். பிறரையும் நேசிப்பது என்பது அவர்களின் இன்ப துன்பங்களை நமக்குச் சொந்த மானது போல் பகிர்ந்து கொள்வதை உள்ளடக்குகிறது! அதுதான் ஐக்கியங்கொள்வது அல்லது நம் வாழ்க்கையை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள் வதாகும்.

**நம் தேவன் கண்ணீர் விடுகிறவர்.**

சந்தோஷப்படுகிறவர்களோடு தேவன் சந்தோஷப் படுவது போல, அழுகிறவர்களோடும் அழுகிறார். ஏசாயா 63:9ல், "அவர்களுடைய எல்லா நெருக் கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்" என்று வாசிக்கிறோம். அந்தக் காலத்தில் தம்முடைய மக்களாகிய இஸ்ரவேலர் அனுபவித்த வேதனை களைக் கண்டு தேவன் வேதனைப்பட்டார். லாசருவின் கல்லறையில் அழுததன் மூலம் [யோவான் 11:35], இயேசுகிறிஸ்து தாம் மிகவும் நேசித்த மரியாள் மற்றும் மார்த்தாளின் துக்கத்துடன்

தம்மை அடையாளப்படுத்தியது மட்டுமல்லாமல், பாவம் இந்த உலகத்திற்கு கொண்டு வந்த துக்கத்தையும் அடையாளம் காட்டினார்.

லூக்கா 19:41ல், "அவர் [இயேசு] சமீபமாய் வந்தபோது நகரத்தைப் [எருசலேமை] பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுதார்" என்றும் கூறப் பட்டுள்ளது. தம்மைக் கொல்லப்போகும் நகரத்தை நினைத்து அழுதார்! இயேசுகிறிஸ்துவின் இந்த உணர்ச்சி எசேக்கியேல் 18:32ல் கூறப்பட்டுள்ள தேவனுடைய இருதயத்திற்கு மிகவும் பொருந்து கிறது, "மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புவதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்!" தம்மை நிராகரித்து அழிந்துபோகிற தம்முடைய எதிரிகளின் மரணத்தைக் கண்டு துக்கப்படுகிறவர். நம் தேவன் கண்ணீர் விடுகிறவர் என்று சொல்வதில் தவறில்லை. துக்கமே தெரியாத கடவுள்கள் என்று அழைக்கப்படுகிற உலகத்தில் அவர் முற்றிலும் மாறுபட்டவர்!

நம் கண்ணீரை தேவன் எப்படி பார்க்கிறார் தெரியுமா? இதற்கு சங்கீதம் 56:8 நமக்கு ஒரு குறிப்பைக் கொடுக்கிறது: "என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம் முடைய துருத்தியில்வையும்; அவைகள் உம் முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது." இங்கு கூறப்பட்டுள்ள துருத்தியானது வழக்கமாக திராட்ச ரசத்தை சேமித்து வைப்பதற்கு பயன்படுத்தப்படுகிற ஒன்றை குறிப்பிடாமல் அந்தக் காலத்தில் மக்கள் விலைமதிப்பற்ற பொருட்களை வைக்க பயன் படுத்தும் ஒன்றை குறிப்பிடுகிறது. எனவே, சாராம் சத்தில், அவரது கண்ணீர் தேவனுக்கு மிகவும்





விலைமதிப்பற்றது, அவர் அவற்றை அவ்வகையான ஒரு துருத்தியில் வைப்பார் என்று தாவீது கூறுகிறார். தேவன் நம் கண்ணீரை அப்படித்தான் பார்க்கிறார்!

நம் தேவன் அக்கறையுள்ளவர். ஒரு பாவி மனந்திரும்பும்போது மகிழ்ச்சியடைவது போல, தம் சிருஷ்டி அழும்போது அவரும் அழுகிறார். அவர் தூரத்திற்கு தேவனல்ல. மாறாக, நம் வலியை உணரும் தேவன்! நாம் இந்த தேவனைப் பின்பற்று வதற்கு அழைக்கப்பட்டிருப்பதாலும் [எபேசியர் 5:1] அவருடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல் மறுரூபமாக்கப் படுவதாலும் [ரோமர் 12:2; 2கொரிந்தியர் 3:18], அழுபவர்களுடன் அழுவதும் நமது கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாக மாற வேண்டும்! இதை நன்றாகச் செய்ய, ரோமர் 12:15ன் பிற்பகுதியிலுள்ள இந்தக் கட்டளை யை நம் அன்றாட வாழ்வில் எப்படிப் பயன் படுத்துவது என்பதைப் பார்க்க விரும்புகிறேன்.

## அழுகிறவர்களுடனே அழுவது எப்படி.

கருத்தில் கொள்ள வேண்டிய 10 விஷயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 5 குறிப்புகள் என்ன செய்யக்கூடாது என்ற பிரிவின் கீழும், மற்ற 5 குறிப்புகள் அழுகிறவர்களுடன் அழும்போது என்ன செய்ய வேண்டும் என்ற பிரிவின் கீழும் வருகின்றன.

## செய்யக் கூடாதவை

1. துன்பப்படுபவரை அதிலிருந்து விடுபடச் சொல்லாதீர்கள். அழவே கூடாது என்று சொல்ல வேண்டாம். சில சமயங்களில், உறுதியாக இருக்க வேண்டும் என்று நாம் மக்களிடம் சொல்ல வேண்டும். மேலும், நேர்மறையானவர்களாகவும், தேவனுடைய பலத்திலும் அவருடைய

வாக்குறுதிகளிலும் அதிகச் சார்புடையவர்களாகவும் இருக்கும்படி நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும், அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அவர்களுடன் ஓரிரு கண்ணீர் துளிகளை சிந்திய பிறகே நாம் அத்தகைய செயல்களைச் செய்ய வேண்டும்.

நம்மை புண்படுத்துபவர்களிடம் நம் வார்த்தைகளில் தடித்த உணர்வுகளைக் காட்டக்கூடாது. நீதிமொழிகள் 25:20 இவ்வாறு கூறுகிறது, “மனதுக்க முள்ளவனுக்குப் பாட்டுகளைப் பாடுகிறவன், குளிர்காலத்தில் வஸ்திரத்தைக் களைகிறவனைப் போலவும், வெடியுப்பின்மேல் வார்த்த காடியைப் போலவும் இருப்பான்.” ஒருவர் ஆழ்ந்த வேதனையை அனுபவிக்கும் போது, அவர்களின் காயங்களோடு காயத்தைக் கூட்டாமல் இருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். அதுதான் விஷயம்!

சில சமயங்களில், அந்த துன்பத்தால் எரிச்சல் அடைவது எளிது. அந்த எரிச்சலானது வார்த்தைகளில் அடிக்கடி வெளி வரும். ஏற்கனவே துன்பத்திலிருப்பவர்கள் மேலும் காயப்படுத்தைத் தாங்குவது எவ்வளவு கடினம் என்று கற்பனை செய்து பாருங்கள். யோபின் நண்பர்களை நினைவிருக்கிறதா? ஏற்கனவே மிகுந்த வேதனையில் இருந்தவனுக்கு அவர்கள் தங்கள் வார்த்தைகளின் மூலம் எவ்வளவு வேதனை கூறினார்கள்?

2. முழு விடுதலையை உறுதியளிக்காதீர்கள். தேவன் உங்களை முழுமையாக குணப்படுத்துவார்; நல்ல வேலை கிடைக்கும்; நீங்கள் இழந்தக் குழுந்தைக்குப் பதிலாக இன்னொரு குழந்தை பிறக்கும்; வாழ்க்கைத்துணையைப் பெறுவீர்கள் என்பது போன்ற தேவன் கொடுக்காத வாக்குறுதிகளை கொடுக்க வேண்டாம். மேற்கூறிய அனைத்தையும் தேவனால் செய்ய முடியுமா என்று கேட்டால், ஆம் அவரால் செய்ய முடியும்! ஆனால் எல்லா சூழ்நிலையிலும் தேவன் அவ்வாறு செய்வதாக வாக்களித்திருக்கிறாரா என்றால் அப்படி அவர் கூறவில்லை.! நாம் எல்லாம் அறிந்தவர்கள் அல்ல. நாம் தேவனோடு விளையாட முடியாது, அதற்கான தைரியமும் நம்மிடம் இல்லை!





துன்பப்படுபவர்களை இதமாக உணர வைக்க முயற்சிப்பது ஒரு சிறந்த நோக்கமாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளும் முக்கியமானது. வேதாகமத்தில் கூறப்படாத பொய்யான வாக்குறுதிகளை வழங்குவது சரியான வழிமுறையல்ல. மேலும், தேவன் முழுமையான குணப்படுத்துதலையோ அல்லது இதமான சூழலையோ கொண்டு வரவில்லை என்றால், துன்பப்படுபவர் இன்னும் அதிக ஏமாற்றத்தைத் தாங்க வேண்டியிருக்கும். இது பாதிக்கப்பட்டவருக்கு எந்தவிதத்திலும் உதவாது!

ஆம், முழுமையான விடுதலை கிடைக்கப் போகிறது. ஆனால், அது எதிர்காலத்தில் வரக் கூடிய ஒன்று. இயேசுகிறிஸ்து மீண்டும் வந்து தம்முடைய ராஜ்யத்தை அமைக்கும் போது தான் முழுமையான விடுதலை கிடைக்கும் ஆனால் அதுவரை, துன்பத்தை உள்ளடக்கியிருந்தாலும், அவர்களின் தற்போதைய வாழ்க்கைக்காக தேவனுடைய சித்தத்தை சார்ந்திருப்பதற்கு நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். அந்தத் துன்பத்தின்போதும் தேவனுடைய பிரசன்னத்தை நாம் அவர்களுக்கு நினைவூட்டி, அவரைத் தொடர்ந்து நோக்கும்படி ஊக்குவிக்கலாம்.

3. அவர்களின் துன்பத்தை மற்றவர்களின் துன்பங்களுடன் ஒப்பிடாதீர்கள். இங்குதான், பாதிக்கப்பட்டவர்களை இதமாக உணரச் செய்வதற்காக, அவர்களைவிட அதிகம் துன்பப்படுபவர்களைப் பற்றி நாம் சுட்டிக்காட்டமுனைகிறோம். உன் கணுக்காலில் வலி மட்டும் தான் இருக்கிறது. கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட ஒருவரை எனக்குத் தெரியும். நல்லவேளை கணுக்கால் உடையவில்லை, அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும் என்று கூறுதல் பொருத்தமானதல்ல. ஒரு மனிதனின் துன்பம் அந்த நேரத்தில் அவர்களுக்கு ஒரு சாதாரண விஷயம் அல்ல. "நீங்கள் இந்த துன்பத்தை அனுபவிக்கிறீர்கள் என்று நான் மிகவும் வருந்துகிறேன்" என்று சொல்வது தான் சிறந்தது.

4. அவர்களை நியாயந்தீர்க்காதீர்கள். மறுபடியும், யோபின் நண்பர்கள் நினைவுக்கு வருகிறார்கள். "உம் பாவங்களால் நீர் துன்பப்படுகிறீர்" என்று கூறும் கூற்றுகள் சில சமயங்களில் உண்மையாக இருந்தாலும் கூட, அது முற்றிலும் உண்மையல்ல. நாம் தேவனாக செயல்படக்கூடாது அப்படி செயல்படுவது தான் பெருமை. ஆம், சில சமயங்களில், அவர்களுடைய பாவத்தை உணர்த்தி, மனந்திரும்பும்படி ஊக்குவிக்க ஓரிரு வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் அதுவும் நாம் அவர்களுடன் உண்மையாக துக்கத்தை பகிர்ந்து கொண்டு, அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பின்னரே அப்படிச் செய்ய வேண்டும். நீதிமொழிகள் 12:18ஆம் வசனம் இவ்வாறு எச்சரிக்கிறது, "பட்டயக்குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்." நமது வார்த்தைகள் வலியை தரக்கூடாது மாறாக, சௌக்கியத்தைத் தர வேண்டும்!





5. அவர்களைத் தவிர்க்காதீர்கள். சில சமயம் காயப்பட்டவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாதபடியாலும், நாம் ஏதாவது கூறினால் அது அவர்களைப் புண்படுத்துமோ என்ற பயத்திலும் அவர்களை முற்றிலும் தவிர்க்கிறோம். அல்லது துன்பப்படுகிறவர்களுடன் இருப்பதை விரும்புவதில்லை. துன்பங்கள் மிகவும் மனச்சோர்வை ஏற்படுத்தி விடுகிறபடியால். இதுபோன்ற உணர்வுகளுக்குள் நாம் செல்ல விரும்புவதில்லை. டிவி பார்க்கும் போது கூட, சில சோகமான செய்திகள் வந்தால், சேனலை உடனடியாக மாற்றி விடுகிறோம். நல்ல சமாரியன் உவமையில் வரும் ஆசாரியனையும், லேவியனையும் போல [லூக்கா 10:31-32], காயப்பட்ட மனிதனின் துன்பத்தைப் பார்க்கும்போது நாமும் அப்படியே செய்கிறோம். அப்படிச் செய்வதை நாம் நிறுத்த வேண்டும்.

எனவே, அழுகிறவர்களுடனே அழுங்கள் என்ற தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிய முற்படும்போது என்ன செய்யக்கூடாது என்று கருத்தில் கொள்ள வேண்டிய 5 விஷயங்கள்: (1) துன்பப்படுபவரை அதிலிருந்து விடுபடச் சொல்லாதீர்கள் (2) முழு விடுதலையை உறுதியளிக்காதீர்கள் (3) அவர்களின் துன்பத்தை மற்றவர்களின் துன்பங்களுடன் ஒப்பிடாதீர்கள் (4) அவர்களை நியாயந்தீர்க்காதீர்கள், (5) அவர்களைத் தவிர்க்காதீர்கள்.

## செய்யவேண்டியவைகள்

1. ஜெபமென்னும் ஆயுதத்தை பயன்படுத்துங்கள். அவர்களின் விடுதலைக்காக நாம் முதலில் தனிப்பட்ட முறையில் தவறாமல் ஜெபிக்க வேண்டும். இந்த சோதனையின் மூலம் அவர்கள்

தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க வேண்டும் என்று நாம் தேவனிடம் மன்றாடி, துன்பப்படுபவருக்கு ஆறுதல் அளிக்க நம்மை பயன்படுத்துமாறு அவரிடம் கேட்க வேண்டும். நேரிலோ அல்லது பிற வழிகளிலோ [மின்னஞ்சல், குறுஞ்செய்தி அனுப்புதல்] குணப்படுத்துதலையும் ஊக்கத்தையும் தரக்கூடிய சரியான வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கான ஞானத்தைத் தரும்படியும் நாம் தேவனிடம் கேட்க வேண்டும். "இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்." என்று நீதிமொழிகள் 16:24 கூறுகிறது, மேலும் நீதிமொழிகள் 12:18 "ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்" என்று கூறுகிறது. நம்முடைய வார்த்தைகள் கலக்கத்திலிருக்கும் ஆத்துமாக்களுக்குத் தேவையான சௌக்கியத்தை அளிக்கக் கூடியவையாகும்.

துன்பப்படுபவரை நேரில் சந்தித்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். தேவன் இடைப்பட்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படி நாம் மன்றாடும்போது, அது துன்பப்படுபவருக்கு மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும்.

2. முடிந்தால், அவர்களின் வசதிக்கேற்ப அவர்களை சந்தியுங்கள். நாம் மக்களை நம்முடைய வசதிக்கேற்ப பார்க்காமல், அவர்களின் வசதிக்கேற்ப பார்க்க வேண்டும்! சந்திப்பது நமது வசதிக்கேற்ப செய்யும் வேலையல்ல, துன்பப்படுபவரின் தேவைகளை நாம் உணர வேண்டும். அவர்கள் தங்களை சந்திக்க நேரம் இல்லை என்றால், அதை நாம் மதிக்க வேண்டும்.





நாம் அவர்களை சந்திக்கும்போது, அது பாதிக்கப் பட்டவருக்கு அவசரத்தில் இருப்பதாக தோன்றக்கூடாது. துக்கத்தில் இருப்பவர்களைப் பார்க்கும்போது, எப்போது கிளம்பலாம் என்று 2 நிமிடங்களுக்கு ஒருமுறை கடிகாரத்தைப் பார்ப்பது அவர்களை புண்படுத்தும் விஷயங்களில் முக்கியமான ஒன்று. மகிழ்ச்சியாக இருப்பவர்களுடன் அதிக நேரம் செலவிடுகிறோம். ஆனால் துக்கத்தில் இருப்பவர்களைச் சந்திக்கும் போது, நாம் அவர்களுடன் எல்லா சமயத்திலும் அதிக நேரம் செலவழிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல [அதிக நேரம் தங்கி துன்பப்படுபவருக்கு நாம் சுமையாகவும் இருக்கக்கூடாது!]. கால அளவு பாதிக்கப்பட்டவரின் தேவைகள் மற்றும் வசதியைப் பொறுத்து இருக்க வேண்டும்.

3. அவர்களுக்கு செவிகொடுங்கள். துக்கப்படுபவர்களுடன் நாம் இருக்கும்போது, நாம் குறைவாகப் பேச வேண்டும், அதிகமாக செவிகொடுக்க வேண்டும் அவர்களின் வார்த்தைகளுக்கு மட்டும் செவிசாய்க்காமல், அவர்களின் இருதயங்களுக்கும் செவிகொடுக்க வேண்டும். ஒரு நபர் அழுவதை வார்த்தைகளால் குறிப்பிடுவதை விட உள்ளுக்குள அதிகமாக உடைந்து இருக்கலாம். எனவே, அவர்களின் உணர்வுகளை அறிய முயற்சிக்க வேண்டும். அவர்கள் சரியான வார்த்தைகளைச் சொல்லாவிட்டாலும் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். நாம் அவற்றை உடனே சரிசெய்ய வேண்டிய அவசியமில்லை. முதலில் அவர்களை பேச வைக்கவேண்டும். அவர்கள் மௌனமாக இருந்தால், நாமும் மௌனமாக இருப்பது நலமானது தான். சில நேரங்களில் நாம் அவர்களுடன் இருப்பதே சௌக்கியமளிக்கக் கூடியதாக இருக்கும். அவர்கள் அருகில் அமர்ந்து,

என்ன பேசுவது என்று தெரியாதபோது அல்லது அமைதியாக இருப்பது நல்லது என்று உணரும் போது பேசாமல் அவர்களின் தோளில் கை வைப்பது சிறந்தது! நாம் அவர்களுடன் இருப்பதே காயத்திற் கான மருந்தாக அமையும்.

சிறுவனாக இருந்தாலும் பெரிய இருதயம் கொண்ட ஒருவனைப் பற்றி சொல்லப்படும் கதை இது. அவனது பக்கத்து வீட்டுக்காரர் ஒரு வயதான மனிதர், அவருடைய மனைவி மரித்துவிட்டார். பெரியவர் அழுவதைக் கண்ட சிறுவன், அவர் மடியில் ஏறி வெறுமனே அமர்ந்தான். பின்னர், சோகமாக இருந்த பெரியவரிடம் நீ என்ன சொன்னாய் என்று அவனுடைய தாய் சிறுவனிடம் கேட்டாள். அதற்கு அந்த சிறுவன் "ஒன்றுமில்லை", "அவர் அழுவதற்கு நான் உதவினேன்" என்று பதிலளித்தான்.

சில சமயங்களில் ஆழ்ந்த துக்கத்தை எதிர்கொள்ளும் மக்களுக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த விஷயம், பெரும்பாலும், துக்கமடைந்த வர்களின் அருகில் அமர்ந்து, புத்திசாலித்தனமாகவும் உதவிகரமாகவும் ஏதாவது சொல்வதை விட, அவர்களின் கைகளைப் பிடித்து, அவர்களுடன் அழுவதாகும்.

4. வேதத்தின் மூலம் அவர்களை உற்சாகப் படுத்துங்கள். துன்பப்படுபவர்களின் தற்போதைய வலியைக் குறைப்பதற்கு முயற்சிக்காமல், நித்திய நம்பிக்கைக்காக அவர்களை ஊக்குவிப்பதற்கு நாம் பாடுபட வேண்டும். அழுகிறவர்களுடன் நாம் அழும் போது வேதத்தின் பங்கைக் குறைத்து விடக்கூடாது. ரோமர் 15:4 கூறுகிறது, "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு





எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனை யாக எழுதியிருக்கிறது." தேவனுடைய மக்கள், தேவனுடைய வார்த்தையை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் காயத்திலிருந்து மீளும் நம்பிக்கை பிறக்கிறது. தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தும்போது நாம் "நம்பிக்கையின் முகவர்களாக" இருக்க முடியும்.

அவர்களின் வலியை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் இது அவர்களுக்கு மிகவும் அவசிமானது. அழுவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பல ஆண்டுகளாக தேவனுடைய மக்கள் அவரிடம் எப்படி மன்றாடினார்கள் என்று வேதம் அடிக்கடிக் குறிப்பிடு வதை நாம் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். ஒரு நாள் இந்த கண்ணீர் இருக்காது என்ற நம்பிக்கையில் அவர்களை ஊக்குவிக்கலாம். மன முடைந்த தாவீதுக்கு யோனத்தான் செய்தது போல, துன்பப்படுபவர்கள் தேவனில் பலம் பெற உதவுவது ஒரு சிறந்த காரியமாகும். "சவுலின் மகன் யோனத்தான் தேவனுக்குள் தாவீதை திடன் கொள்ள உதவினான்" [1 சாமுவேல் 23:15-16].

5. நடைமுறை உதவியை வழங்குங்கள். தேவைப் படும் இடங்களில், நாம் நடைமுறை உதவியை வழங்க வேண்டும். அது அவர்களுக்கு உணவு அல்லது பணத்தை கொடுப்பதாக இருக்கலாம், பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வது, வீட்டிற்கு தேவையானவற்றை செய்வது போன்ற அவர்களின் தேவைகளுக்கு நாம் உணர்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நடைமுறையில் அவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதைக் காட்டும்படி தேவனிடம் மன்றாட வேண்டும். மக்கள் எப்பொழுதும் நம்மிடம் கேட்க மாட்டார்கள், ஆனால் நம்மால் முடிந்தவரை உதவி செய்ய நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

எனவே, நாம் செய்ய வேண்டியது: (1) ஜெபம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும் (2) முடிந்தால், அவர்களின் வசதிக்கேற்ப அவர்களைச் சந்திக்க வேண்டும் (3) அவர்களுக்கு செவிசாய்க்க வேண்டும் (4) வேதவசனங்கள் மூலம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் (5) நடைமுறை உதவியை வழங்க வேண்டும்.

இந்த சங்கதியை பார்த்துக்கொண்டிருக்கும்போது, நாம் அழுகின்ற சூழலில் என்ன செய்ய வேண்டும் என்ற பிரச்சினையையும் நான் பேச விரும்புகிறேன். இன்றைக்கு நீங்கள் இந்த சூழலில் இருக்கலாம் அல்லது ஒருவேளை எதிர்காலத்தில் இந்த சூழலை எதிர்கொள்ளாலாம்.

### அழுகிறவர்களுக்கு ஒரு வார்த்தை.

சில சமயங்களில் ஆறுதல் சொல்ல வருபவர்கள் சரியான வார்த்தைகளைப் பேசாமல் இருக்கலாம். அவர்களின் தவறுகளை கவனிக்க முயற்சி செய்யாதிருங்கள், அவர்களும் சக பாவிகளே. சில நேரங்களில், யாரும் உங்களை ஆறுதல் படுத்தாதுபோன்று உணரலாம். அந்தச் சூழ்நிலை களில் கூட, மனக்கசப்பான இருதயத்தை வளர்த்துக் கொள்ளாமல் இருங்கள். கடந்த காலத்தில் அழுதுகொண்டிருந்தவர்களுடன் நீங்கள் அழாமலி ருந்த சூழலாகவும் இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது உங்கள் பெற்றோராகவோ அல்லது உடன்பிறந்தவர்களாகவோ கூட இருக் கலாம். அவர்கள் நீங்கள் செய்த தவறுகளை கண்டுகொள்ளாமல் இருந்தது போல், மற்றவர்களின் தவறுகளை கவனிக்காதீர்கள். கொலோசெயர் 3:13 ஆம் வசனம் ஒருவருடைய பலவீனங்களை ஒருவர் தாங்கிக்கொள்ள நம்மை அழைக்கிறது.





நீங்கள் கஷ்டப்படுவதை பிறர் அறியாத நேரங்கள் இருக்கலாம்- அதையும் மனதில் கொள்ளுங்கள்! எனவே, மற்றவர்களின் ஆதரவை நீங்கள் எதிர்பார்த் தால், துன்பத்தை நீங்கள் அனுபவிக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சனைகளை விளம்பரப் படுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை. உங்கள் பிரச்சினைகளைப் பற்றி வேறு யாருக்கும் தெரியா மல் நீங்களே மூடி வைத்திருந்தால், துன்பத்தின் போது தனியாக இருப்பதற்கு முக்கியக்காரணம் நீங்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு விசுவாசி தான் சோதனைகளைச் சந்தித்தப்போது ஒரு போதகராக நான் சென்று ஜெபிக்கவில்லை என்று வருத்தப்பட்ட சம்பவம் எனக்கு நினைவிருக்கிறது. சபை உறுப்பினர்கள் சோதனைகளைச் சந்திக்கும்போது ஜெபிப்பது மூப்பர்களின் பொறுப்பு என்று யாக்கோபு 5:14ஐ அவர் மேற்கோள் காட்டினார். யாக்கோபு 5:14, “உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.” ஆனால், பிரச்சனை என்னவென்றால், மேற்கூறிய கூறிய சம்பவத்தில் அந்த நபர் சிரமங்களைச் சந்தித்திருந் ததை நான் அறியாமல் இருந்தேன்! அது உண்மைதான். ஆனால், அதே வசனம், சோதனை களைச் சந்திப்பவர்கள் முதலில் மூப்பர்களை வரவழைக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறது என்பதும் உண்மை. போதகர் விசுவாசிகளின் மனதைப் படிப்பவர் அல்ல, எல்லாம் அறிந்தவர் அல்ல. எனவே, இது இரு வழி பாதையாக செல்கிறது.

எனவே, நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள் என்றால், உங்கள் போதகர்களுக்கும், தேவைக்கேற்ப மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். அதனால், அவர்கள் உங்களைப் பார்க்க வரலாம். விசுவாச வாழ்க்கை ஒரு தீவில் தனியாக வாழ்வதல்ல. மாறாக, நமது மகிழ்ச்சிகளையும், துக்கங்களையும் பகிர்ந்து கொள்ளும் ஒரு சமூகத்தின் சூழலில் வாழ்வதாகும். நீங்கள் தனியாகவும் கஷ்டப்பட வேண்டியதில்லை! மற்றவர்களை தொந்தரவும் செய்ய வேண்டியதில்லை! உதவி கேட்பது பலவீனத்தின் அடையாளம் அல்ல. நம்முடைய பாரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற வேதத்தின் அறிவுரைகளைப் பின்பற்றுவது முதிர்ச்சியின் அடையாளமாக இருக்கிறது.

**சிறந்த ஆறுதல் அளிப்பவர்களாக இருப்பதற்கு.**

பிரசங்கி 7:2; 7:4 ஆகிய வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, “விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்க வீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத்தன் மனதிலே சிந்திப்பான். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்புவீட்டிலே இருக்கும்.” துக்க வீட்டிற்கு செல்வது வாழ்க்கையின் மீதும், நித்தியத்தின் மீதும் சரியான கண்ணோட்டத்தை நமக்கு வழங்குகிறது. மரணத்தின் மீது சரியான பிடிப்பு கிடைத்தால்தான் வாழ்வின் மீதும் நல்ல பிடிப்பு கிடைக்கும். அதுவும் அழுகிறவர்களுடன் அழும்போதுதான் கிடைக்கும்!

இந்த வசனங்களின் தெளிவு நமக்கு இருந்த போதிலும், நாம் அவ்வாறு செயல்படுவதில்லை என்று நம் அன்றாட நிகழ்வுகள் நமக்கு எதிராக





சாட்சியமளிக்கின்றன. துக்கப்படுவோரை விட, விருந்துண்டு மகிழ்பவர்களுடன் அதிக மணிநேரம் செலவிடுகிறோம்! பொதுவாக, தனிமையில், அழுதுகொண்டிருப்பவரிடம் சென்று நேரத்தை செலவிடுவதை விட, விருந்து நிகழ்வுகளில் நேரத்தை செலவிடுகிறோம்! ஆம், சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்பட வேண்டும், ஆனால் துக்கப்படுகிறவர்களுடன் துக்கப்பட வேண்டும் என்றும் நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. துன்பப்படுபவர்களைப் பற்றி கவலைப்படாத உலகில், அத்தகையவர்களுக்காக நாம் இன்னும் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

இந்த உண்மையை டாக்டர் பால் பிராண்ட் தனது Fearfully and Wonderfully Made என்ற நூலில் இவ்வாறு அழகாக வெளிப்படுத்தியுள்ளார்:

“நோயாளிகளிடமும், அவர்களது குடும்பத்தினரிடமும், துன்பத்தில் உங்களுக்கு யார் உதவினார்கள்? என்று கேட்கும்போது பெரும்பாலும் கனிவான பதில்கள் அரிதாகவே இருந்ததாக கூறினர். ஒரு சிலர் மட்டுமே அமைதியானவர்களாகவும், புரிந்து கொள்ளக்கூடியவர்களாகவும், பேசுகிறதை விட அதிகமாக செவிச்சாய்க்கிறவர்களாகவும், குற்றப்படுத்தாதவர்களாகவும் அல்லது அதிக ஆலோசனைகளை வழங்காதவர்களாகவும், பொறுமை உணர்வு மிக்கவர்களாகவும். தேவைப்படும ்போது கை கொடுக் கிறவர்களாகவும், புரிதலுள்ளவர்களாகவும், அணைத்துக்கொள்கிறவர்களாகவும் இருந்தனர் என்று தழுதழுத்த குரலில் கூறினார்கள்.”

சில சமயங்களில், சரியானதைச் சொல்ல கடினமாக முயற்சிக்கும் போது, உணர்வுகளின் மொழி நம் வார்த்தைகளை விட சத்தமாக பேசுகிறது என்பதை மறந்துவிடுகிறோம்.

**தங்களுக்காக அழாதவர்களுக்காகவும் அழுவதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.**

நான் என்ன சொல்கிறேன் என்றால், நம்முடைய அன்புக்குரியவர்களும், நண்பர்களும் பலர் தங்கள் பாவங்களுக்காக அழுது, கிறிஸ்துவிடம் திரும்பாமல், அவரை முற்றிலும் அலட்சியப்படுத்துகிறார்கள். அத்தகையவர்களுக்காக, அவர்களின் இரட்சிப்புக்காக நாம் தேவனிடம் கூக்குரலிட்டு, கண்ணீர் சிந்த கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்மை சிலுவையில் அறையப் போகும் மக்களுக்காக அழுதார் [லூக்கா 19:41]. பவுல் தன்னைத் துன்புறுத்திய யூதர்களுக்காக அழுதார் [ரோமர் 9:1-3]. பிலிப்பியர் 3:18ல் இயேசுகிறிஸ்துவை ஏற்க மறுப்பவர்களைக் குறித்து அவர் எழுதும் போது, இவ்வாறு கூறுகிறார்: “ஏனெனில், அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்.”

இழந்து போனவர்களுக்காக நாம் அனைவரும் கண்ணீர் வடிப்போமாக!



## 11. நம்பிக்கையில் மகிழ்தல்

நம்பிக்கையில் மகிழ்தல் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மனிதன் மரணத்தை எதிர்பார்த்திருந்த நிலையில், தனது நண்பருக்கு இவ்வாறு எழுதினான்: “இது ஒரு மோசமான, நம்பமுடியாத உலகம். ஆனால் இவற்றின் மத்தியில் நான் அமைதியாகவும், தூய்மையாகவும் வாழும் மக்களைக் கண்டுபிடித்தேன். அவர்கள் பாவ சிற்றின்பத்தின் மகிழ்ச்சியை விட ஆயிரம் மடங்கு மேலான மகிழ்ச்சியின் பெரும் ரகசியத்தைக் கற்றுக்கொண்டவர்கள். இகழப்பட்டு துன்புறுத்தப் பட்டாலும், அதை குறித்து கவலைப்படாதவர்கள், அவர்கள் தங்கள் ஆத்துமாவின் எஜமானர்கள், இந்த உலகத்தை வென்றவர்கள், அவர்கள் தான் கிறிஸ்தவர்கள் அவர்களில் நானும் ஒருவன்.”

இந்த வார்த்தைகளின்படி பார்ப்போமென்றால் விசுவாசிகள் இந்த உலகின் இன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு அளவற்ற மகிழ்ச்சியைக் கொண்டவர்கள். அது தான் இந்த பதிவின் தலைப்பு.

மகிழ்ச்சியின் பொருளானது நன்மை பயக்குவதாகவும், மிகவும் தேவையான நினைவூட்டலாகவும் இருக்க வேண்டும், ஏனென்றால், நாம் அனைவரும் அவ்வப்போது வாழ்வின் போராட்டம் எதிர்கொள்கிறோம். அது கவனிக்கப்படாமல் விடப்பட்டால், மனச்சோர்வின் நிரந்தர நிலைக்கு வழிவகுத்துவிடும்.

அந்த நிலையானது பயம் மற்றும் சோர்வு போன்ற உணர்வுகளின் அனுபவமாக முடியும். மனச் சோர்வுடன் போராடுபவர்களுக்கு அது நாள் முழுவதும் ஒரு போராகும். பகல் முடிந்ததும், இரவு மற்றொரு போர் தொடங்கும். தூக்கமின்மை ஒரு நாள்பட்ட பிரச்சினையாக மாறும். இரவு முடிந்து காலை வரும்போது, சுழற்சி மீண்டும் தொடங்கிவிடும்.

ஒருவர் ஆழ்ந்த மனச்சோர்வை எதிர்கொண்டால், ரோமர் 12:12ன் முதல் பகுதியில் அதற்கான சிகிச்சை உள்ளது. இதோ: "நம்பிக்கையில் சந்தோஷமாக இருங்கள்" என்ற வார்த்தைகளில் ஒரு ரூபாய் கூட செலவு செய்ய அவசியமில்லாத ஒரு உண்மையான சிகிச்சையை நாம் அனைவரும் பெற முடியும். அங்கு வெறும் "சந்தோஷமாயிருங்கள்" என்று பவுல் கூறாமல், "நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்" என்று கூறுவதைக் கவனியுங்கள். அது, நம்மிடம் இருக்கும் நம்பிக்கையின் காரணமாக வரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. நம்பிக்கை என்ற வார்த்தை யானது தற்போது நம்மிடம் இல்லாத ஒன்றைக் குறிப்பிடுகிறது. இது எதிர்காலத்தில் நாம் பெறக்கூடிய ஒன்று. எனவே, இந்த வசனத்தில் பவுல் குறிப்பிடும் மகிழ்ச்சிக்கு அடிப்படையான நம்பிக்கை எது? விசுவாசிகள் தங்களது மனமாற்றத்தின் இறுதியான நன்மைகளை அனுபவிக்கும் காலத்தை இது குறிக்கிறது என்று நான் நம்புகிறேன். இந்த நிகழ்வை நாம் கிறிஸ்துவைப் போலாக்கப்படுதல் அல்லது மகிமைப்படுத்தப்படுதல் என்று வேதம் அழைக்கிறது. இதைத்தான் பவுல் தனது மனதில் வைத்திருந்தார் என்று நான் நம்புகிறேன். ஏனெனில், ரோமர் 5:1-2ல் "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே





நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனி டத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென் கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" என்று பவுல் இந்த நம்பிக்கையை முன்னரே குறிப்பிடுவதால் நான் அப்படிச் சொல்கிறேன். "தேவ மகிமையடைவோமென்கிற நம்பிக்கை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால் "தேவனின் மகிமையைப் பகிர்ந்து கொள்வதில் நம்பிக்கை" என்பதாகும். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் காரணமாக, நாம் நீதிமான்களாக்கப்பட்டோம் [அதாவது, தேவனுடைய பார்வையில் அவருக்குச் சரியானவர் களாக்கப்பட்டோம்]. தேவனுக்கும் நமக்கும் இடையேயான போர் முடிந்துவிட்டது, அதனால்தான் நாம் தேவனுடன் சமாதானமாக இருக்கிறோம், இது நமது இரட்சிப்பின் முதல் நிலை.

இதன் விளைவாக, நாம் இப்போது நம்முடைய இரட்சிப்பின் இறுதிக் கட்டத்தை எதிர்நோக்குகிறோம், அங்கு நாம் தேவனின் மகிமையை பகிர்ந்து கொள்வோம், அதாவது, கிறிஸ்துவைப் போலவே மறுரூபமாக்கப்படுவோம். ரோமர் 8:30ல் பவுல் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார், "எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக் கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." நாம் இன்னும் மகிமைப்படுத்தப்படவில்லை என்றாலும், "அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" என்ற

சொற்றொடர் கடந்த காலத்தில் எழுதப்பட்டுள்ளது. பவுல் ஏன் அப்படி எழுதினார்? ஏனென்றால், அது ஒரு முழுமையான உறுதி! நாம் மகிமைப்படுத்தப் படுவோம், அதாவது, இயேசுகிறிஸ்துவின் வருகை யின்போது நாம் புதிய சரீரங்களைப் பெற்று, கிறிஸ்துவைப் போலாக்கப்படுவோம் [ரோமர் 8:22-25]. நாம் புதிய சரீரங்களைப் பெறுவோம் என்ற இந்த நம்பிக்கையைத்தான் நாம் எதிர்பார்க்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

ரோமர் 12:12ல், அத்தகைய நம்பிக்கை நம் மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கொத்த புதிய சரீரங்களைப் பெறும்போது, எதிர்காலத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மகிமையைக் குறித்து நாம் நம்பிக்கையில் சந்தோஷப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவைப் போல புதிதாக்கப்படும் இந்த நம்பிக்கை நம்மை மகிழ்ச்சி யில் பெருகச் செய்ய வேண்டும், ஏனெனில், இனி துக்கமும், கண்ணீரும், வலியும் இருக்காது, நம் தேவனை தொழுதுக்கொள்வதில் முடிவில்லா மகிழ்ச்சி மட்டுமே இருக்கும். ஆனால், இதற் கிடையில் நாம் இந்த பாவத்தால் பாதிக்கப்பட்ட சரீரத்தில் வாழ்ந்தாலும், இன்னும் மகிழ்ச்சியாக இருக்க அழைக்கப்படுகிறோம், துக்கத்தின் மத்தியிலும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வெளிப்படுத்தக் கட்டளையிடப்படுகிறோம். பவுல் 2 கொரிந்தியர் 6:10ல் தானும் மற்ற அப்போஸ் தலர்களும் "துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும்" இருந்தோம் என்று குறிப்பிட்டார். இவை இரண்டையும் எப்படி ஒருவர் செய்ய முடியும்?





நாம் வாழும் இந்த பாவமான, சபிக்கப்பட்ட உலகத்தில் துக்கம் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளும்போது, அதே பவுல் பின்னர் ரோமர் 12:15ல் "அழுகிறவர்களுடனே அழுங்கள்" என்று கூறியதன் மூலம் இது நிரூபணமாகிறது. துக்கத்தின் யதார்த்தம் இருக்கும்போது, நமக்குள் அடக்க முடியாத மகிழ்ச்சியை உருவாக்கும் எதிர்கால ஆசீர்வாதங் களின் உறுதியும் இருக்கிறது. நாட்கள் கடந்து செல்கையில், கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்ற நம்பிக்கை உணரப்படும்போது, இந்த எதிர்கால யதார்த்தத்திற்கு நாம் நெருக்கமாக இருக்கிறோம். மேலும் அது நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதுதான் பவுலின் கருத்து.

இந்தக் கட்டளையை நாம் ஆர்வமாகவும், சந்தோஷமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று கட்டளை யிடப்பட்டிருப்பதால், இதை நம்முடைய உடைமை களிலும், சமூக அந்தஸ்திலும் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று எண்ணிக்கொள்ளக்கூடாது. மாறாக, கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கையில் மகிழ்ச்சி யாக இருக்க வேண்டும் என்று கட்டளையிடப் பட்டிருக்கிறது, அவ்வாறு செய்யத் தவறுவது ஒரு பாவமாகும். பலர், "எனக்கு மிகுந்த மகிழ்ச்சி இருக்கிறது, நான் மனச்சோர்வடையவில்லை" என்று கூறக்கூடும். ஒருவேளை நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்கலாம். அப்படியென்றால் நான் உங்களிடம் ஒன்றை கேட்கிறேன்: உங்கள் மகிழ்ச்சி எதை அடிப்படையாகக்கொண்டது? பாதுகாப்பையும், நல்ல ஊதியம் பெறும் வேலையையும் அடிப்படை யாகக் கொண்டதா? உறவுகள், நண்பர்களைப் பெறுதல், நல் ஆரோக்கியத்தை அனுபவிப்பது,

வங்கிக் கணக்கில் அதிக வரவு வைத்திருப்பது மற்றும் பலவிதமான பிரச்சனைகளை அனுபவிக்காமல் இருப்பது போன்றவற்றின் அடிப்படையாகக் கொண்டதா? அப்படியானால், இங்கே பவுல் கூறும் மகிழ்ச்சியின் அடிப்படை அதுவல்ல என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். உலகப்பிரகாரமான மனிதர்களும் இந்த விஷயங்களைக் கொண்டிருந்தால், மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள். ஆனால், இவற்றில் ஒன்றை பிடுங்கி விட்டால், அவர்களின் மகிழ்ச்சி மறைந்துவிடும், மேலும் ஏமாற்றம் வந்துவிடும்.

யோசித்துப் பாருங்கள் நாம் நம்முடைய வேலையையும் பொருளையும், பணத்தையும் இழக்க நேரிடலாம். "தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்" என்று நீதிமொழிகள் 11:28 கூறுகிறது. நாம் நம்பும் மனிதர்கள் நம்மை கைவிட்டுவிடலாம் அல்லது மரித்துப்போகலாம். நீதிமொழிகள் 11:7 இந்த உண்மையை நன்றாகப் படம்பிடித்துக் காட்டுகிறது: "துன்மார்க்கன் மரிக்கும்போது அவன் நம்பிக்கை அழியும்; அக்கிரமக்காரரின் அபேட்சை கெட்டுப் போகும்." நம் உடலும் கூட ஒரே இரவில் செயலிழந்து போகலாம். இந்த பட்டியல் இப்படியே நீண்டு கொண்டேப்போகும். இப்போது, உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் முக்கிய விஷயம் எது? அதை உங்களிடமிருந்து எடுத்துவிட்டால், நீங்கள் இன்னும் மகிழ்ச்சியாக இருப்பீர்களா? உங்களை நீங்களே கேட்டு பதில் சொல்லுங்கள்.

அப்படியானால், இந்த மகிழ்ச்சியை நாம் எப்படி அனுபவிக்க முடியும்? இந்த செயல்முறையின் மூலம் நான் உங்களை வழிநடத்த விரும்புகிறேன்.





கலாத்தியர் 5:22-23ல், "ஆவியின் கனியின்" குணாதிசயங்களில் "சந்தோஷமும்" ஒன்று என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. எனவே, பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே நம் இருதயங்களில் மகிழ்ச்சியை உற்பத்தி செய்ய முடியும். அவர் அதை எப்படி செய்கிறார்? அவர் நமக்கு அருளிய வேதத்தின் மூலம் செய்கிறார். எனவே, நாம் தேவனுடைய வார்த்தைக்கு அடிபணியும்போது, பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களில் மகிழ்ச்சியை உண்டாக்குகிறார். இந்த மகிழ்ச்சிக்கு மனிதர்கள் செய்ய வேண்டிய காரியமும் இருக்கிறது. தியானம் செய்வதற்கும், குறிப்பாக தேவனுடைய வார்த்தையில் மகிழ்ச்சி அடைவதற்கும் நாம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும், இதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம்மை மாற்ற அனுமதிக்க வேண்டும், நம் இருதயங்களில் மகிழ்ச்சியை உருவாக்குவதும் இதில் அடங்கும்.

தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கவும், அதை விசுவாசிக்கவும், அதைப் பின்பற்றவும் நாம் எவ்வளவு நேரம் செலவிடுகிறோமோ, அவ்வளவு மகிழ்ச்சி நமக்கு கிடைக்கும். அதே போல கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும், கிறிஸ்துவைப் போல நாம் மறுரூபமாக்கப்படுவதைப் பற்றியும் நாம் எவ்வளவு அதிகமாகப் படிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நிறைவேற வேண்டும் என்று நாம் விரும்புகிறோம், அது நம் நம்பிக்கையைப் பலப்படுத்தும், மேலும் அதிக மகிழ்ச்சியை அனுபவிப்போம். நாம் எவ்வளவு மகிழ்ச்சியை அனுபவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக உபத்திரவத்தின் போது பொறுமையாக சகித்துக்கொள்வோம். எரேமியா 15:16ம் வசனமானது எரேமியாவின் அனுபவத்தைப் பற்றிய பதிவைத்தருகிறது, "உம்முடைய

வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." நம்பிக்கை மற்றும் தியானத்தை வாழ்க்கை முறையாகக் கொண்ட உண்மையுள்ள ஒரு மனிதனை எனக்குக் காட்டுங்கள், எதிர்காலத்தைப் பற்றிய தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, அதன்படி கீழ்படியும்போது, வலுவான நம்பிக்கையின் விளைவாக மனசோர்வற்ற, மகிழ்ச்சியுள்ள மனிதனாக நான் அவனை உங்களுக்குக் காண்பிப்பேன்.

மறுபுறம், எதிர்காலத்தைப் பற்றிய தேவனின் வாக்குறுதிகளில் கவனம் செலுத்தாத ஒரு மனிதனை எனக்குக் காட்டுங்கள், வேதாகமம் கூறும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அர்ப்பணிக்கப்படாத பூமிக்குரிய சூழ்நிலைகளை மட்டுமே சார்ந்து இருக்கும் ஒரு மனிதனை நான் உங்களுக்குக் காண்பிப்பேன். காரியங்கள் நன்றாக நடக்கும்போது அவன் மகிழ்ச்சியாக இருப்பான். அவனுடைய உலக சுகபோகங்களில் ஒரு சிறிய மாற்றம் ஏற்படும்போது சோர்ந்து விடுவான். அப்படிப்பட்டவனைப் போல் இருக்க வேண்டாம். மாறாக, நம் எதிர்காலத்தைப் பற்றிய தேவனின் வாக்குறுதிகளை நம்பி, மகிழ்ச்சியாக, செயல்படுவதன் மூலம் அவருடைய இரக்கங்களைப் பெற்று வேதம் கூறும் உண்மையான மகிழ்ச்சியைத் தொடரலாம் [ரோமர் 12:1]. தேவனுடைய வார்த்தையால் நம் மனம் புதுப்பிக்கப்படுவதால், ஆவியானவர் நம்மை உண்மையாக மறுரூபப்படுத்துகிறார்.



# ஆசிரியரைப் பற்றி

கர்த்தராகிய இயேசுவின் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்ட பாவி நான். நான் ஒரு பாரம்பரிய ஹிந்து பிராமண பின்னணியில் இருந்து வந்தவன். முன்னாள் ஹிந்துவாக இருந்து விசுவாசியான எனது நண்பர் விஜய் அவர்களின் உண்மையான சாட்சியின் மூலமும், நான் படித்துக் கொண்டிருக்கும்போது அடையாளம் தெரியாத ஒரு நபரால் என் வீட்டு வாசலில் வைக்கப்பட்ட வேதத்தை வாசித்ததின் மூலமும் கர்த்தர் கிரியைச் செய்தார். அதே நேரத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருக்கும் போது யோவான் 10:11ல் இயேசுகிறிஸ்து கூறின "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்ற வேதவாக்கியத்தைப் பயன்படுத்தி, இந்தக் கலகக்கார பாவியை கிருபையுள்ள மேய்ப்பரும், இரட்சகருமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவிற்குள் பரிசுத்த ஆவியானவர் கொண்டு வந்தார்.

கீதா அவர்களை மணந்து, பால் மற்றும் ப்ரீத்தி என்ற இரு குழந்தைகள் இருக்கிறார்கள். கடவுளின் கிருபையால் அனைவரும் விசுவாசிகளாக இருக்கின்றனர். ஒன்டாரியோவின் வின்ட்ஸரில் உள்ள கிரேஸ் பைபிள் திருச்சபை 2003ல் நிறுவப்பட்டதிலிருந்து அதன் போதகராக ஊழியம் செய்யும் பெரும் பாக்கியமும் மகிழ்ச்சியும் எனக்கு உண்டு!

## ஆசிரியரைப் பற்றி

என்னைப் பற்றியும் வலைப்பதிவு/புத்தகம் பற்றியுமான கூடுதல் விவரங்களை tamil.biblebased hope.com மற்றும் www.gbc-windsor.org ஆகிய வலை தளத்தில் காணலாம். நீங்கள் என்னை நேரடியாகத் தொடர்பு கொள்ள விரும்பினால், தயவுசெய்து எனக்கு Rk2serve@yahoo.comல் மின்னஞ்சல் செய்யுங்கள். இந்தப் புத்தகத்தின் இலவச PDF பதிப்பும் மேலே குறிப்பிட்டுள்ள தளங்களில் கிடைக்கும்.

இந்தப் புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்த பாஸ்டர் ஜான் நெல்சன் மற்றும் பாஸ்டர் மேஷாக் தேவநேசன் அவர்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ள வனாக இருக்கிறேன். அவர்கள் இந்நூலை மொழிபெயர்த்தது மட்டுமின்றி, பல்வேறு ஆங்கில வலைப்பதிவு கட்டுரைகளையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர்.

இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எனக்கு எழுதத் தயங்க வேண்டாம். உங்கள் கருத்தை வரவேற்கிறேன். எனது வரம்புகளை நான் முழுமை யாக உணர்ந்து, வேதவசனங்களைப் பற்றிய எனது புரிதலில் தொடர்ந்து வளர முயல்கிறேன்.